பக்கங்கள் : இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 11 வியாழக்கிழமை (24.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :118

## உயர் பாதுகாப்பு வலயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்றுக்காணி வழங்குவது குறித்து அறிக்கை தருக!

### யாழ். மாவட்டச் செயலருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு.மார்ச்24

யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலய அறிவிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மாவட்டத்தின் வேறு பகுதிகளில் மாற்று நிலங்களை வழங்குவது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ். மாவட்ட செயலருக்கு உத்தரவிட்டிருக்கிறது உயர் நீதிமன்றம்.

உயர் பாதுகாப்பு வலய நடவடிக்கையால் தமது வீடுவாசல்களை இழந்த இருவர் சார்பில் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளில் மீது உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மற்றும் கிளானை கொல்லன்கலட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் இராஜதுரை ஆகியோரே இந்த வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்று உயர் நீதிமன்றில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா மற்றும் நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, என்.ஜி.அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் இளைஞர் பொலீஸ் சூட்டில் காயம்!

கொழும்பு.மார்ச்24

அக்கரைப்பற்றில் தமது கட்டளையை மீறிச் சென்றார் எனத் தெரிவித்து இளைஞர் ஒருவர் மீது பொலீஸார் சுட்டதில் அந்த இளைஞர் படுகாயமடைந்தார். இதனால், அப்பகுதியில் பெரும்பதற்றம் ஏற்பட்டது.

அக்கரைப்பற்று, பிஸ்கால் வீதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இது குறித்துத் தெரியவருவதாவது:-

அப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த நிந்தவூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அவரது மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு பொலீஸார் சைகை செய்திருக்கின்றனர். வாகனம் ஒன்றுக்கு வழிவிட்டுச் சற்று அப்பால் சென்று அவர் தமது மோட்டார் சைக்கிளை நிறுத்த எத்தனித்துள்ளார். அதற்கிடையில் பொலீஸார் அவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துவிட்டனர் என்றும் அதில் அவர் காயமுற்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பொலீஸாரின் இச்செயலை ஆட்சேபித்து அக்கரைப்பற்றில் நேற்று வீதியில் டயர்கள் எரித்துப் பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அந்த இடத்திற்கு விசேட அதிரடிப்படையினர் விரைந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (எ-க)

# பொதுக் கட்டமைப்பு விடயத்துக்காக அரசை வீழ்த்த மாட்டாது ஜே.வி.பி.!

### அக்கட்சி அப்படி உறுதியளித்துள்ளது என கதை விடுகின்றார் அமைச்சர் கதிர்காமர்

லண்டன்,மார்ச்24

**ஆழிப்பேரலை அழிவு தொடர்பான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு குறித்து அரசும், விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டாலும் அதற்காக அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறிவிடாது. அதற்கான உறுதிமொழியை ஜே.வி.பியினர் எனக்குத் தந்துள்ளனர்.**

**- இப்படிக் கதை விட்டிருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.**

லண்டனில் பி.பி.ஸி. தொலைக்காட்சிக்கு அளித்த விசேட பேட்டியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் புலிகளுக்கு விட்டுக்கொடுத்து, புலிகளோடு ஓர் இணக்கத்துக்கு அரசு வருமானால், அரசை விட்டு வெளியேறி அதைக் கவிழ்த்துவிடுவோம்

(20ஆம் பக்கம் பார்க்க)

## காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வந்த குடும்பஸ்தருக்கு 'எயிட்ஸ்' நோய்!

### யாழ். ஆஸ்பத்திரி பரிசோதனையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு 'எயிட்ஸ்' நோய்க்கிருமியான எச்.ஐ.வி. தொற்றியிருப்பது -

ஆரம்பப் பரிசோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

தொடர்ச்சியான காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இவர் கடந்த 18 ஆம் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவரது நோய் நிலைமையை அடுத்து இவரது இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டபோது எச்.ஐ.வி. தொற்றி இருப்பது தெரியவந்திருக்கிறது.

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பணியாற்றி விட்டு தாயகம் திரும்பிய இவருக்கு வயது 38. நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கான திருத்த யோசனை அரசிடம்!

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான யோசனைகளை சிறுதிருத்தங்களோடு நோர்வே அனுசரணையாளர்கள் அரசிடம் கையளித்திருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

கொழும்பிற்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிராட்ஸ்கர் இந்த யோசனைகளை அரச சமாதானச் செயலகத்தின் பதில் பணிப்பாளர் ஜோன் குணரட்ணவிடம் சமாதானச் செயல

(20ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவர் விவகாரத்தில் அடுத்து என்ன என்பது இன்று தெரியும்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திர சிகிச்சைக் கற்கை நெறி இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் எழுந்துள்ள பிரச்சினைக்கான தீர்வு பெரும்பாலும் இன்று தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்காத நிலையில் மருத்துவபீட மாணவர் குழு ஒன்று கடந்த வாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மென்டிஸை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தது.

இச்சந்திப்பின் போது இன்று 24 ஆம் திகதி இப்பிரச்சினைக்கான முடிவைப் பெற்றுத்தரு

(20ஆம் பக்கம் பார்க்க)

## 'பல்டி' அடித்த அமைச்சர்களான மூவரும் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து கல்தா!

கொழும்பு.மார்ச்24

முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக் குழுவினர் எனச் செயற்பட்டு வரும் மூவரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர் எனக் அக்கட்சி அறிவித்துள்ளது.

'பல்டி' அடித்து அமைச்சர்களான நஜீப் ஏ. மஜீத், ரிஷாத் பதியுத்தீன், அமீர் அலி ஆகிய மூவருமே விலக்கப்பட்டவர்களாவர்.

நேற்றிரவு, கொழும்பு ட்ரான்ஸ் ஏஸியா ஹோட்டலில் கூடிய கட்சியின் அதியுயர்பீடம் இந்த முடிவை எடுத்துள்ளது. மூவரும் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாகச் செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரிவித்தே கட்சியில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொது மக்கள்-இராணுவம் இடையே வவுனியாவில் நேற்று முறுகல் நிலை

வவுனியா.மார்ச்24

வவுனியா, சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையில் நேற்றுக் காலை முறுகல்நிலை ஏற்பட்டது. போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரின் தலையீட்டின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9 மணியளவில் ஈச்சங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 25 வயதான கரன் என்பவர் அதே திசையில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் சைக்கிளுடன் தவறுதலாக மோதியுள்ளார்.

இதனையடுத்து, இராணுவத்தினர் மேற்படி இளைஞனை வீதியில் போட்டு உருட்டி உருட்டி சரமாரியாகத் தாக்கினர் எனக் கூறப்படுகிறது.

இளைஞன் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அத்துடன், இளைஞனை தமது கல்மடு இராணுவமுகாமுக்கு கொண்டு செல்வதற்கும் படையினர் முயற்சி செய்த வேளையில் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது.

பொலீஸார் அழைக்கப்பட்டு விசாரனை மேற்கொள்ளப்பட வேண்டும். போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் அங்கு வந்து விசாரனை மேற்கொள்ளவேண்டும். பாதிக்கப்பட்ட இளைஞனை இராணுவம் கொண்டுசெல்லக் கூடாது போன்ற கோரிக்கைகளை வைத்து மக்கள் இராணுவத்தினருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர். இதனையடுத்து, அங்கு சென்ற கண்காணிப்புக் குழுவினர் மக்களிடம் விசாரனை மேற்கொண்டனர்.

இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை நேற்று மாலை சந்தித்த வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஞானவேல் இராணுவத்தினரின் நடவடிக்கைக்குத் தமது கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார். (எ-க-13)

## தன்னம்பிக்கை இல்லாத தன்மையே அரச படைகளின் முக்கிய குறைபாடு

### விமர்சகர் தராக்கி கருத்து

கொழும்பு.மார்ச்24

இலங்கை அரச படைகளின் பலம் கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டிருந்தாலும், முக்கிய மூலவளமான தன்னம்பிகை இன்னும் பெரிய குறைபாடகவே அதற்கு உள்ளது.

- இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் இராணுவ, அரசியல் விமர்சகரான தராக்கி (சிவராம்).

"புலிகள் இராணுவ ரீதியில் பலவீனமுற்றுள்ளனரா?" - என்ற தலைப்பில் நேற்றைய 'டெய்லி மிரல்' ஆங்கிலப் பத்திரிகையில் அவர் வரைந்த ஆய்வுக்கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் படைகளின் பலம் யுத்தநிறுத்தக் காலத்தில் அதிகரிக்கப்பட்டிருப்பது பற்றிய விடயங்களை அவர் அக்கட்டுரையில் ஆராய்கின்றார். அக்கட்டுரையில் அவர் தெரிவித்த கருத்துக்களின் சுருக்கம் வருமாறு:-

யுத்த நிறுத்தம் அதிக அழுத்தத்திற்கு உள்ளாகிவருகிறது. நொருக்கிவிடக்கூடிய இந்த யுத்த நிறுத்தத்துக்கான சூழல் மேலும் இருளில் மூழ்குவதில் இருந்தும் அதனை மீட்கக்கூடியது எதுவென்று யாருக்கும் தெரியவில்லை.

இந்தப் பின்னணியால், அரச படைகளுக்கும், புலிகளுக்கும் இடையிலான தந்திரோபாய சமநிலை குறித்து கேள்வி எழுவது தவிர்க்க

(20ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# விஞ்ஞானக் கண்காட்சி பார்க்க மாணவர்கள் திரண்டு வந்தனர்

## கொக்குவில் இந்துவில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ். விஞ்ஞானச் சங்கம் 'கொமர்ஷல்' வங்கியின் ஆதரவுடன் ஒழுங்குசெய்த வருடாந்த விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்றுக் கோலகலமாக ஆரம்பமாகியது.

முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்ற ஆரம்ப வைபவத்தில் மங்கள விளக்கினை யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சு.இராஜதுரை, யாழ். 'கொமர்ஷல்' வங்கியின் முகாமையாளர் ச.ரவீந்திரா, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ந.கண்ணன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இரா.குமாரவடிவேல் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் நாடாவைவெட்டிக் கண்காட்சியை ஆரம பித்து வைத்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கலை, விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள், வடபகுதியைச் சேர்ந்த 15 பாடசாலைகளின் மாணவர்கள், ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தினர் தத்தமது பொருள்களை அங்கு காட்சிப்படுத்தி இருந்தனர்.

நேற்று கண்காட்சியின் முதல் நாள் பெருமஎண்ணிக்கையான பாடசாலை மாணவர்கள் திரண்டுவந்து கண்காட்சியைப் பார்வையிட்டுச் சென்றனர்.

இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ள இக்கண்காட்சியில், பாடசாலை மாணவர்களின் 52 காட்சிப்பொருள்கள் இடம்பெற்றுள்ளன.

'சுனாமியின் தோற்றம்', 'நீர் சுத்திகரிப்பு', 'சூழல வெப்பநிலை அதிகரிப்பால் ஏற்படும் விளைவு', 'சேது சமுத்திரத்திட்டம்', 'நிலத்தடி நரைப் பாதுகாத்தல்', 'சிமெந்தை இலாபகரமானதாகப் பயனபடுவது எப்படி?', 'தன்னியக்க தண்ணீர் நிரப்பி', 'ஊசலில் இருந்து மின் உற்பத்தி' ஆகிய விடயங்களும் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் கற கைநெறி மாணவர்களின் புகைப்படங்கள், கணனித் தகவல் தொழில்நுட்பம் போன்ற விசேட அம்சங்கள் அடங்கிய பல காட்சிப் பொருள்கள் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. (ஐ-12)





கண்காட்சியில் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இரா.குமாரவடிவேல், யாழ். கொமர்ஷல் வங்கி முகாமையாளர் எஸ். ரவீந்திரா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் நாடா வெட்டிக் கண்காட்சியைத் திறந்துவைபபதையும்-காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்களை மாணவர்கள் பார்வையிடுவதை படங்களில் காணலாம்.

விஞ்ஞானச் சங்கத் தலைவர் பேராசிரியர் சு.இராசதுரை, சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோரும் படங்களில் உள்ளனர்.

*(படங்கள்: பகீர்)*

# அலரி விதை உட்கொண்ட சிறுமிக்கு ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை

யாழ்ப்பாணம்,மார்ச்24

அலரி விதையை உட்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படும் தந்தையும் அவரது மகளும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

நான்கு வயதான தனது மகளுக்கு தந்தையே அலரி விதையை உட்கொள்ளக் கொடுத்தார் என்றும் அதன்பின் தானும் அதனை உட்கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

அளவெட்டி வடக்கு, தேரிட்டிப் பகுதியில் கடந்த ஞாயிறன்று இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

கந்தையா ஸ்ரீதரன் (வயது-32), அவரது மகளான துளசிகா (வயது-4) ஆகிய இருவருமே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

அலரி விதை உட்கொண்டதால் மயக்கமுற்ற சிறுமிக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது.

(ஐ-13-15)

# வெள்ளிமுதல் இரு தினங்கள் அழகெழல் போட்டி நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்24

இலங்கை வங்கியின் அனுசரணையுடன் யாழ் தேசியக் கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றம் நடத்தும் 'அழகெழல் - 2005' போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் கல்வியியற் கல்லூரியில நடைபெறவுள்ளன.

சித்திர, சிறுவர் நாடகம், தனி நடிப்புப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் தனி இசை, அபிநயப் பாடல், தனிநடனம், குழு நடனம் ஆகிய போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

போட்டியின் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சபா.ஜெயராஜா, கல்வியியற்கல்லூரியின் இணைப் பீடாதிபதி எஸ்கே.யோகநாதன், உபபீடாதிபதிகளான பா.தனபாலன், எஸ்.ஆர்.சத்தியயேந்திரம்பிள்ளை மற்றும் நுண்கலைத்துறை இணைப்பாளர் க.ரட்ணேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்துவர்.

நாளை பெரிய வெள்ளித் தினமாகையால் சித்திரப் போட்டியில் பங்குபற்றும் கிறிஸ்தவ மாணவர்கள் அன்றைய தினம் பிற்பகல் ஒரு மணிவரையும் அல்லது நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கும் போட்டியில் பங்குகொள்ளலாம் என்றும் - இம்முறை இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளனர் என்றும் - நுண்கலைத்துறை இணைப்பாளர் க.ரட்ணேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(எ)

# ஹெய்ட்டியில் இருந்து உடனடியாக இலங்கை இராணுவம் திரும்பாது

கொழும்பு,மார்ச்24

ஹெய்ட்டியில் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையினருடன் இணைந்து நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்திற்கு பெரியளவில் ஆபத்து இல்லையென்றும், அவர்கள் இலங்கைக்கு உடனடியாகத் திருப்பப்படமாட்டார்கள் என்றும் மேற்படி அமைதிப்படையிலுள்ள இலங்கை இராணுவத்திற்குப் பொறுப்பான தளபதி கேணல அமல் கருணாசேகர தெரிவித்திருக்கின்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹெய்ட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது பதுளையைச் சேர்நத அமைதிப்படைச் சிப்பாய் லான்ஸ் கோப்பிரல் எச்.எம்.விஜேசிங்க என்பவர் உயிரிழந்தார்.

ஐக்கிய நாடுகள் அமைதிப்படையிலுள்ள பெரு, பாகிஸ்தான், ஜோர்தான் ஆகிய நாடுகளின் இராணுவத்தினருடன் இலங்கை இராணுவத்தினரும் சேர்ந்து ஹெய்ட்டியில் பொலீஸ் நிலையமொன்றை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றி வைத்திருந்த போராளிகளைச் சரணடையுமாறு கோரினர் எனவும் இந்தக் கோரிக்கையை நிராகரித்து போராளிகள் தாக்குதல் நடத்தியதால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டது எனவும் கேணல் அமல் கருணாசேகர மேலும் விவரித்துள்ளார்.

உயிரிழந்த சிப்பாய்க்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 50ஆயிரம் டொலர்களை வழங்குமென்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஹெய்ட்டியிலிருந்து இலங்கை இராணுவத்தினரை உடனே திருப்பி அழைக்கவேண்டுமென்று அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. வலியுறுத்தி இருக்கிறது. (எ-க)

வறு
இணைப்

# சாயி நிலையத்தில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ-சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (ஐ)

# இசை பற்றிய கருத்துரை

யாழ்ப்பாணம்,மார்ச்24

மருதனார்மடத்தில் உள்ள இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் இசைபற்றிய கருத்துரை ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இசைத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இராமநாதன் நுண்கலைத்துறை இசைத்துறைத் தலைவர் செல்வி பா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக்கருத்துரை நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக, நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் சி. மௌனகுரு 'ஈழத்துத் தமிழிசை வளர்ந்தும் வளர்க்க வேண்டியதும்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

(எ-13)

# போட்டிப் பரீட்சை ஆயத்த வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

அரசசேவை கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரியில நடைபெற்று வந்த இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சைக்கான ஆயத்த வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

நாளைக் காலை 9 மணிக்கு வகுப்புகள் ஆரம்பமாகும் என்றும் -

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களும், மாகாண சபையினால நடத்தப்படவுள்ள போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களும் இந்த ஆயத்த வகுப்பில் இணைந்து கொள்ளலாம் என கீழுழைப்புப்பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜி. பற்குணராசா அறிவித்துள்ளார். (எ)

# அரசியல்துறை அலுவலகத்தில் பயணப் பொதிகைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

முகமாலையிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனம் ஒன்றிலிருந்து வீழ்ந்த இரண்டு பயணப் பொதிகள் பொற்பதி வீதி கொககுவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் - சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்24

உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத்தின் விசேட பொதுக கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதான மண்டபததில் நடைபெறவுள்ளது.

பட்டதாரி பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்களும், உயர் தேசிய கணக்கியல், வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகளும் மற்றும் நிறுவனத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள வேண்டும என்று சங்கத்தின் தலைவர் வி.தயாபரன் கேட்டுள்ளார். (எ-13)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 24

பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் நாளை நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டு, தவிர்க்கமுடியாத காரணததால் பிற்போடப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் செயலாளர் என்.இராஜதேவன் தெரிவித்துள்ளார்.

(ஒ-202)

# ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்24

வேலணையில் இயங்கிவரும் இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளையின் நடமாடும் சேவை நேற்றுத் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளையின் முகாமையாளர், இ.விஜயரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில், இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், மாவட்ட முகாமையாளர் சி.நடராசலிங்கம் மற்றும் தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் கே.மகேந்திரலிங்கம், பிரதம எழுதுநர் க.ஜெகபாலன், ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

மேற்படி நடமாடும் சேவை ஒவ்வொரு புதன் கிழமைகளிலும், மேலதிகமாக ஓய்வூதியக் கொடுப்பனவு நாள்களிலும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறும். (எ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கதிர்காமரின் சரடு

அரசியல்வாதிகள் உண்மைக்கு மாறானவற்றைக் கூறுவதும், கதை அவிழ்த்து விடுவதும் புதியவையோ அல்லது புதுமையானவையோ அல்ல. சில சமயங்களில் முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல விடயங்களை அமுக்கியோ இல்லாதது பொல்லாதது எல்லாம் கூறியோ அவர்கள் சரடுவிடுவார்கள். இவை எல்லாவற்றையும் தூக்கி அடிப்பதுபோல கதைவிட்டிருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - பி.பி.ஸியின் ஆங்கிலத் தொலைக்காட்சிச் சேவைக்கு அளித்த பேட்டியில்.

★ இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வுகாண்பதற்குத் தாங்கள் இணங்கியுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் - உறுதிப்படுத்தும் வகையில் - செயற்பாடு எதையும் புலிகள் காட்டவில்லை. சமஷ்டித் தீர்வுக்குப் புலிகள் இணங்கியுள்ளார்கள் என்பது உறுதியான நிலைப்பாடு அல்ல.

★ ஆழிப்பேரலை அழிவு, நிவாரண மற்றும் மீள்கட்டுமான வேலைகளைக் கவனிப்பதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்பது சிறிய விடயம் அல்ல. அதற்கான உடன்படிக்கை ஒவ்வொரு ஷரத்தாக வாசித்து, கவனித்து, இணக்கம் காணப்பட்டு ஆவணப் படுத்தப்படவேண்டும்.

★ பொதுக் கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகளோடு அரசு இணக்கம் கண்டால் அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறும் என்று கூறப்படுவதில் எந்த உண்மையுமில்லை. பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதை யாராவது எதிர்ப்பார்களேயானால் அவர்கள் பைத்தியக்காரர்களாகவே - கிறுக்கர்களாகவே (*Lunatic*) இருப்பார்கள்.

- இவை அந்தப் பேட்டியில் லக்ஷ்மன் கதிர்காமர் திருவாய் மலர்ந்தருளிய 'உண்மை'களில் சில.

தமிழர்களின் பாரம்பரியத் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து இலங்கை அரசுடன் ஆராய்வதற்குத் தயார் எனப் புலிகள் 2002 இறுதியிலேயே - ஒஸ்லோ பிரகடனம் எனப்படும் பகிரங்க அறிக்கையிலேயே - அறிவித்துவிட்டார்கள். அந்த யோசனைக்கான திட்டம் கூட - அந்த அறிவிப்புப்படி - புலிகளால் தான் முன்வைக்கப்பட்டது. அதனைத் தாங்களும் ஏற்று அந்த அடிப்படையில் தீர்வு குறித்து ஆராய்வதற்குத் தயார் என ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.மு. அரசும் அறிவித்து இணக்கம் கண்டது.

ஆனால், ரணிலின் அரசைக் கலைத்து, அந்த இடத்துக்கு ஆட்சிப்பீடத்துக்கு வந்த - அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தற்போது இடம்பெற்றிருக்கும் - ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசுதான் சமஷ்டித் தீர்வு குறித்துக் குழம்பிப் போய் நிற்கின்து.

இந்த ஆட்சியைக் கைப்பற்றிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பு, அந்தக் கூட்டமைப்புக்கான மூல ஒப்பந்த வாசகத்திலேயே கூட்டமைப்பின் பங்காளிகள் இடையே தீர்வு முறை குறித்து முரண்பாடு இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளது.

சமஷ்டி முறையில் தீர்வுகாண்பதை அனுமதிக்கவே முடியாது என்று அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஜே.வி.பி. ஆரம்பம் முதல் - கூட்டமைப்புக்கான மூல ஒப்பந்தத்தின் வாசகத்திலிருந்து - அடித்துக்கூறி, அடம்பிடித்து வருகின்றது.

அந்தப் பங்காளிக் கட்சியை முற்றும் முழுதாக தங்கி ஆட்சி அமைத்திருப்பதால் - அந்தக் கட்சியின் விருப்புக்கு மாறாக - அந்த சமஷ்டித் தீர்வு வழியில் முயற்சியில் ஈடுபடமுடியாமல் - தவிக்கிறது சந்திரிகா அரசு என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஆனால், அந்த இயலாமையிலிருந்து தப்புவதற்காகக் குற்றச்சாட்டைப் புலிகள் மீது சுமத்தப்பார்க்கின்றார் கதிர்காமர்.

பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கை நீண்டகாலம் பிடிக்கும் ஒரு விவகாரம் என்றும் சரடு விட்டு, அதனை உடனடியாகச் செய்ய இயலாத தனது அரசைக் காப்பாற்ற முயல்கிறார் அவர்.

2001 டிசெம்பர் மத்தியில் பதவியேற்ற ரணிலின் அரசினால், இரண்டு தசாப்த கால மோசமான யுத்தத்துக்கு மூன்று வருடங்களுக்குப் பின்னர் இப்போதும் கூட - புதிய அரசு வந்த பின்னரும் கூட - நின்று நிலைத்து நீடிக்கக்கூடிய - ஒரு யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்பாட்டை விரைந்து இரண்டு மாத காலத்துக்குள் புலிகளுடன் வெற்றிகரமாகச் செய்துகொள்ள முடியுமானால் -

மக்களின் அழிவு, அவலத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு பொதுப் பிரச்சினைக்கு - அந்தச் சிக்கலிலிருந்து மக்களை மீட்பது தொடர்பான அவசர, அவசிய மனிதாபிமான நடவடிக்கைக்கு - ஓர் இணக்க ஏற்பாட்டை அந்தப் பேரவலம் நடந்து மூன்று மாதமாகியும் ஏன் காணமுடியாமல் இருக்கின்றது? இதில் தப்பும், தவறும், பிழவாதமும் யார் பக்கம் உள்ளன?

புலிகளுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இணக்கத்துக்கு அரசு வந்தாலும் அரசிலிருந்து தாம் வெளியேறமாட்டார்கள் என்று ஜே.வி.பியினர் தன்னிடம் கூறியிருக்கின்றனர் என்றும் -

அவர்கள் அது தொடர்பாக வேறு எங்கோ, யாருக்கோ வேறுவிதமாகக் கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுவது குறித்து அலட்டிக்கொள்ளவே தேவையில்லை என்றும்-

கதிர்காமர் இப்போது கூறுகின்றார்.

இது பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருண்டுவிட்டது எனக் கருதுவது போன்றதாக இருக்கின்றது.

பௌத்த, சிங்கள மேலாண்மை வாதத்தில் ஊறித் திளைத்திருக்கும் பேரினவாதிகளான ஜே.வி.பியினர் தங்களின் நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவித்த பின்னரும், அந்தப் பங்காளிக் கட்சியின் உண்மை நிலைப்பாட்டை பி.பி.ஸி:வரை சென்று மூடிமறைக்கக் கதிர்காமர் முற்படுவது அவரது 'அரசியல்' நேர்மையைப் புலப்படுத்தும் மற்றொரு சான்று. அவ்வளவே!



யாழ். மாநகரசபையினால் பொம்மைவெள்ளி மற்றும் அரியாலையில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகளையும், அரியாலை நீர்த் தாங்கியை யாழ். அரச அதிபர் கே.கணேஸ், மாநகர ஆணையாளர் க.குணராசா ஆகியோர் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள் பிரபா)

# குடிதண்ணீர் விநியோகத் திட்டம் இரு இடங்களில் நேற்று ஆரம்பம்

யாழ். மாநகரசபையினால் கிராமிய மட்டத்திலான சிறிய குடிதண்ணீர் விநியோகத் திட்டம் இரு இடங்களில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொம்மைவெளிப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோக நீர்த்தாங்கி ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகிலும் -

அரியாலைப் பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோக நீர்த்தாங்கி அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு முன்பாகவும் -

அமைக்கப்பட்டுள்ளன.

நேற்றுப் புதன்கிழமை காலை இந்த நீர்த்தாங்கிகளிலிருந்து குடிதண்ணீர் விநியோகம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் பொம்மை வெளிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கியை நாடாவை வெட்டிக் குடிதண்ணீர் விநியோகத்தினை முதலில் ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அரியாலை சித்திவிநாயகர் ஆலயப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கியை யாழ். அரச அதிபரும் யாழ். மாநகர ஆணையாளர் க.குணராசாவும் இணைந்து நாடாவை வெட்டிக் குடிதண்ணீர் விநியோகத்தினை ஆரம்பித்துவைத்தனர்.

இந்த இரு திட்டங்களின் மூலம் சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் பயனடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் ஏற்பட்ட போர் அனர்த்தங்கள் காரணமாகக் குறிப்பிட்ட நீர்த்தாங்கிகள் சேதமடைந்திருந்தன. இதனால் அப்பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது என்றும் கூறப்பட்டது. (ஒ-7)

# காண்பியக் கலைகளுக்கான இரு ஆய்வுநூல்கள் வெளியீடு

## நாவலர் மண்டபத்தில் நாளை மாலை

யாழ்ப்பாணம்,மார்ச்24

தமிழில் சமூகம், பண்பாட்டு தொடர்பான காத்திரமான உரையாடலை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட 'பனுவல்' என்ற ஆய்வு ஏட்டினதும் -

காண்பியக் கலை மற்றும் பேறு தொடர்பான அறிவுசார் விடயங்களை உள்ளடக்கிய 'ஆட் லாப்' (Art Lab) என்ற இதழினதும் அறிமுக நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் மாலை 4 மணிக்கு கலாநிதி சுபோதினி ரமேஷ் தலைமையில் நிகழ்ச்சி நடைபெறும்.

'பனுவல்' முதலாவது இதழ் தொடர்பான எதிர்வினையை கலாநிதி பி.இரகுபதி வழங்குவார்.

இரண்டாவது இதழ் தொடர்பான எதிர்வினையை கலாநிதி என்.சண்முகலிங்கன் வழங்குவார். 'ஆட் லாப்' தொடர்பான எதிர்வினையை இலக்கிய வாதியும் இலக்கியச் செயற்பாட்டாளருமான அ.யேசுராசா நிகழ்த்துவார்.

'சேது' காண்பியக் கலைகளுக்கான கற்கைப் புலத்தினரின் ஆய்வு மற்றும் வெளியீடு தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த இரு நூல்களும் வெளியிடப்படுகின்றன. (ஐ)

# உப்பள ஊழியருக்கு !

யாழ்ப்பாணம்,மார்ச்24

ஆனையிறவு லங்கா சோல்ட் உப்பள ஊழியர்கள் தொழிற்சங்கத்தின் விசேட கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஏ.வி.வீதி, அரியாலையிலுள்ள மாந்தை சோல்ட் லிமிடெட் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆனையிறவு உப்பள ஊழியர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக இலங்கை வர்த்தக தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலதம்பு தொழில் ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாக இக்கூட்டத்தில் தெரியப்படுத்தப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல ஊழியர்களும் தங்களுடைய ஆவணங்களுடைய மூலப் பிரதி, நிழற்பிரதிகளுடன் சமூகம் தருமாறு கிளைச் சங்கச் செயலாளர் வே. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். (ஒ-202)



மல்லாகம் சந்தி சதா சகாய மாதா ஆலயத்தில் இருந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யேசுநாதரின் திருச்சொரூபமும் திருச்சிலுவையும் கடந்த வாரம் மல்லாகம் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள் : நேசன்)

# பெரிய வியாழன் வழிபாடு

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று பெரிய வியாழன் வழிபாடுகள் பிற்பகல் 5.30மணிக்கு நடைபெறவுள்ளன.

நாளை பெரிய வெள்ளி வழிபாடுகளில் காலை 6மணிக்குத் திருச்சிலுவைப் பாதை வழிபாடும் மாலை 6மணிக்குத் திருச்சிலுவை ஆராதனையும்நற்கருணைப் பந்தியும் இடம்பெறும். (ஐ-51-202)

## நாளை

*பங்குனி 12*
*வெள்ளிக்கிழமை*
*25.03.2005*
*திதி : பூரணை*
*பின்னிரவு 3.16 வரை.*
*நட்சத்திரம் : உத்தரம்*
*பின்னிரவு 12.30 வரை.*
*பங்குனி உத்தரம்*
*பூரணை விரதம்*
*சுபநேரம் : 06.15 - 07.45*
*ராகுகாலம் : 10.45 - 12.15*
*(யாவும் பழைய நேரப்படி)*

# சுனாமியில் இறந்தோரின் சாந்திக்காக காரைநகர் ஆலயத்தில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,மார்ச்24

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டியும், காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகளின் சேமநலன் வேண்டியும் விசேட பிரார்த்தனை வழிபாடுகள், காரைநகர் மணற்காடு கும்பநாயகி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ள வருடாந்த பெருந்திருவிழாவின் இரண்டாம் நாள் உற்சவத்தின்போது இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆலய பரம்பரை பிரதமகுரு ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய மோட்சதீபங்கள் ஏற்றப்பட்டு வழிபாடுகள் நடைபெறும்.

ஆதிசங்கரமடத்தின் சங்கராச்சாரிய சுவாமிகளின் சேமநலன் வேண்டி விசேட பூசை, வழிபாடுகள், யாகம் என்பனவும் இடம்பெறும்.

மாலை 7 மணிமுதல் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், திருவாவடுதுறை ஆதீன சமயபரப்புனர் சிவத்திரு ஈ.அனுசாந்தன். ஆகியோரின் பேருரைகளும் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (ஐ-204)

## உதயவாக்கு

உன் இதயத்தைத் தேடு..
உன் ஆன்மாவைத் தேடு....
எப்போது என்னைக் கண்டுபிடிக்கிறாயோ
அதன் பிறகு தேடுவதற்கு
எதுவும் இருக்காது.

- கடவுள்.

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,மார்ச்24

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் தேர்த்திருவிழா இன்று காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு தேரடித் திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-204)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானத்தில் பங்குனி உத்தர விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகம் நடைபெற்று விசேட பூசைகளும் இடம்பெறும். (ஐ-204)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

உடுப்பிட்டி இமையாணன் பெரியதம்பிரான் சிவன்கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. (ஐ-204)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் யாக பூசைகள் நடைபெறும்.

30ஆம் திகதி காலை விசேட பூசைகள் நடைபெற்று பிற்பகல் 2.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும். தொடர்ந்து 15 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று சங்காபிஷேகத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெறும். (ஐ-204)

☆ ☆ ☆

சுதுமலை,மார்ச்24

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய கல்யாண மண்டபம் மற்றும் அன்னதான மண்டபம் ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் விழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

பங்குனி உத்தர உற்சவ தினத்தில் சுவாமி வெளிவீதியுலா வருகைதரும் வேளையில் இந் நிகழ்வு நடைபெறும்.

100 அடி நீளம் கொண்டதாக அமைய உள்ள இம்மண்டபத்துக்கான காணியை டாக்டர் நவமலர் கனகரட்ணம் அன்பளிப்புச் செய்துள்ளார். (ஐ-139-204)

☆ ☆ ☆

நவாலி,மார்ச்24

ஆனைக்கோட்டை காசிகாண்டமடம் ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி சிவன் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு தீர்த்த திருவிழா நடைபெறும். (ஐ-100-204)

☆ ☆. ☆

சுழிபுரம்,மார்ச்24

சுழிபுரம் வடக்கு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு தினமும் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-28-204)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்.மார்ச்24

வல்வெட்டித்துறை நெய்யப்புலம் பெரிய தம்பிரான் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9.43மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு எதிர்வரும் 28ஆம் திகதி விசேட சாந்தி, யாகபூசை ஹோமம் என்பன இடம்பெறும்.

29ஆம் திகதி காலை 8மணி முதல் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நடைபெறும். (ஐ-204)

☆ ☆ ☆

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது. நாளை வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ஐ-11)

### சங்கக் கிளை புதிய இடத்தில்

அரியாலை,மார்ச் 24

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாஷையூர் பகுதியிலுள்ள 23ஆம் இலக்க கிளை புதிய இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கிளை தற்போது பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள கட்டடம் ஒன்றிற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. சங்கத் தலைவர் சூ.சிறில் இதனைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (ஐ-16)


அனைவருக்கும் புலமைப்பரிசில்

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வழங்கப்படும்

புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 5மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

50% OFF

Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

March 31ம் இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 18/03/2005
Batch II - 19/03/2005
Batch III - 26/03/2005
Batch IV - 02/04/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0773151647


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தங்கரத்தினம்

(தங்கராசா, சாவகச்சேரி)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, சங்கத்தானை மீனாட்சி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் டென்மார்க்கை (Denmark Randers) தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தங்கரத்தினம் அவர்கள் 22.03.2005 செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் (Denmark) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - இலட்சுமி அம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் பரமேஸ்வரி (துரையம்மா, Denmark)யின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி (Denmark), சோமசுந்தரம் (சண்டிலிப்பாய் மத்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகாந்தன் (Denmark), லட்சுமிகாந்தன் (Germany) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலசறோஜினி (Denmark), அம்பிகாதேவி (Germany) இவர்களின் மாமனாரும் அனுசியா, ஜெனிற்றா, அபிலாஷ் (Denmark), ஜிரேந்திரா (காண்டீபன்- Germany) ஆகியோரின் பேரனுமாவார்.

மீனாட்சியம்மன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
004586422094 (Denmark)
004586427125 (Denmark)

தகவல்:
க.சோமசுந்தரம்
(சண்டிலிப்பாய்)

(43440)(32-21-14-15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா கந்தையாபிள்ளை

(முன்னாள் உரிமையாளர், அன்னம் டை அன் பிரிண்டிங்வேக்)



காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற அருணாசலம் கந்தையாபிள்ளையின் மனைவியுமான திருமதி அன்னம்மா 21-03-2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் அருணாச்சலம்-லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கனகசபை சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, சுந்தரம்மா, பார்வதி, திருநாவுக்கரசு, சிவபாக்கியம், செல்லம்மா மற்றும் மாணிக்கதியாகராஜா முத்துலிங்கம் தவபாலசிங்கம் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கணேசபிள்ளை (முன்னாள் தபால் ஊழியர் - கனடா), சண்முகசுந்தரம்பிள்ளை, தனலட்சுமி ஜெயராஜசிங்கம்பிள்ளை (வர்த்தகர்), ஸ்ரீவள்ளிநாயகம்பிள்ளை (பிரான்ஸ்) நாகரட்ணம்பிள்ளை, பாகியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் சௌந்தராமபிகை, நாகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராசா (முஸ்லிம் கலாசார அமைச்சு), நித்தியலட்சுமி, கலையரசி (பிரான்ஸ்), நிர்மலாதேவி, பாலேந்திரா (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற ரவிச்சந்திரன், கலைச்சந்திரன், ஆரியமலர், ஞானச்சந்திரன், ஸ்ரீதேவி (கனடா), சண்முகதாசன் தர்சினி, சிவதாசன் ராதா (லண்டன்), சிறிதாசன் சரஸ்வதி, சண்முகராணி தவராசா, நாகராணி, ஸ்ரீலக்ஷ்மன் சுகிதா (நெதர்லாந்து), ஸ்ரீலக்ஷிமி விமலசிங்கம் (மாலைதீவு), கீர்த்திகா சதீஸ்குமார் (பிரான்ஸ்), கீர்த்தீபன் (பிரான்ஸ்), யாழினி (பிரான்ஸ்), கார்த்திகா, தர்சிகா, அருண், மீனகா, லட்சிகன், குபேரன் (இந்தியா), குபேரதி ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் அனுஷாந், டிலோசினி, ஆரஞ்சன், சுலக்ஷனா, டிலக்ஷன், திசாகினி, திசீபன், சபிதா, மதுஷன், விவக்ஸ் ஷெரிக்ஸ், விதுஷிகா அபிராமிப் பிரியங்கா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (25-03-2005) வெள்ளிக்கிழமை காலை 8.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கணக்காளர் கண்டி, காரைநகர். (43441)
தொ.பே.இல.0777-490365 (46-14-15-21)

தகவல்:
பிள்ளைகள்

### திருமதி பாக்கியம் சீவரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்)



சுன்னாகம், கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் 39/5, அம்மன் வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சீவரத்தினம் அவர்கள் 21.03.2005 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்மையா-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் சீவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நல்லம்மா, பொன்னம்மா, நல்லையா, இராசம்மா, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பகீரதன், ஜீவபகீரதி, சத்தியசீலன், வாகீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கல்பனா, குணரட்ணம், சிவானி, மோகமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆர்த்தி, சரணியன், நிர்விகா, மயூரன், அஸ்வின், நிவிசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிவராசா, மங்கையர்க்கரசி, நவரட்ணம், இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2005) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/5, அம்மன் வீதி, கந்தர்மடம். (43433) (14-15-21)


தகவல்:
திரு.திருமதி வாகீசன்

## நினைவலைகள்

| 6 ஆம்வருட நினைவு அலைகள் | | 13ஆம்வருட நினைவு அலைகள் | |
|---|---|---|---|
| தோற்றம் 1971 - 11 - 04 | மறைவு 1999 - 03 - 30 | தோற்றம் 1975 - 07 - 24 | மறைவு 1992 - 04 - 28 |



அமரர் சி.சிவாகரன்



அமரர் சி.கிருபாகரன்

அன்று நடந்தது எம் ஆவி துடித்தது
இன்று நினைக்கையில் ~ எம்
நெஞ்சு வலிக்குதடா கூடப்பிறந்த எங்கள்
அன்புச் செல்வங்கள் உன்னை மறந்து விடமுடியுமா ~ நீ
மறுபடியும் வருவாயோ என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

(C/41677)(35-21-14-15)

உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

# தமிழ் ராஜதந்திரப் பாரம்பரியத்தின் முதல் நபர் அன்ரன் பாலசிங்கம்

## 'போரும் சமாதானமும்' ஆய்வுரையில் திருமாஸ்டர்






**தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் அறிமுகவிழா கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.**

**அந்த நிகழ்வில் கலந்துகொண்டு அரசறிவியலாளர் மு.திருநாவுக்கரசு (திருமாஸ்டர்) ஆற்றிய ஆய்வுரையின் முதற்பகுதி கடந்த செவ்வாய்க்கிழமை வெளியாகியது. இதன் மிகுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது. ஏனையோரின் உரைகள் தொடர்ந்து வெளிவரும்.**

தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே ஒரு தமிழ்த்தேசியப் போராட்டம் மட்டுமல்ல, அது இந்தப் பிராந்தியத்தில் காணப்படுகின்ற அனைத்து ஒடுக்கு முறைக்கு எதிராகவும் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இந்தியாவில் பல்வேறு விதமாகச் சிக்கலாக அமைக்கப்பட்ட சாதிக்கட்டமைப்பை வெள்ளையர்கள் பயன்படுத்திப் பலமான இந்தியாவைக் கைப்பற்றினர். ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்கும் காணப்பட்ட முரண்பாட்டையும் இந்த சாதிக் கட்டமைப்பையும் கையாண்டதன் விளைவுதான் இந்தப் பிரமாண்டமான இந்தியாவை அவர்களால் தோற்கடிக்க முடிந்தது. இந்த இடத்தில் இருந்துதான் அவர்களின் சிந்தனை தோன்றியது.

இந்த இடத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒன்றுதான் இந்தக்கட்டுமானத்தை எதிர்த்து நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருக்கின்ற அன்ரன் பாலசிங்கத்திடம் இது சம்பந்தமாக ஒரு விட்டுக்கொடுப்பற்ற தீர்மானம் இருக்கிறது. இது தொடர்பாக வளைவு, நெளிவற்ற தீர்மானத்திற்கு - இந்தச் சமூகக்கட்டமைப்பின் சீரழிவிற்குள் சிக்குண்டு போகாத ஒரு போக்கிற்கு - அவர்கள் போகிறார்கள்.

எனவேதான் நாங்கள் மிகச் சாதாரணமாக உயர்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களை எல்லாம் உதாசீனம் செய்யும் மனப்பாங்கிற்கு வந்தோம். எங்களால் மிக இலகுவாகவே இந்த உயர்ந்தவர்களை உதாசீனம் செய்ய முடியும். அது இந்த மண்ணின் சிறப்பம்சங்களில் ஒன்று. இந்தக் கட்டுமானத்தை விளங்கிக் கொண்டால் இந்தக் கட்டுமானத்திற்குப் புறம்பாக எங்களிடம் கட்டுமானம் இருக்கிறது. ஆனால், விடுதலைப் போராட்டத்தோடு அது வெளியே வரப்பார்த்தது. இதை உடைத்துக் கொண்டு வரக்கூடிய இயல்புகளை இந்த விடுதலைப் போராட்டம் தருகின்றது. எனவேதான், இந்த விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவேண்டிய பொறுப்பு இருககிறது. இப்படிப்பட்ட ஒரு வலைப்பின்னலான பின்னணியில்தான் நாங்கள் இந்த அரசியலை யோசிக்க வேண்டியிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் இந்திய ராஜதந்திர மரபுக்குள்ளாலும் மேற்குலக ராஜதந்திர மரபுக்குள்ளாலும் நாங்கள் எங்களுக்கென்று இருக்கக்கூடிய இன்றைய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு புதிய ராஜதந்திர வலைப் பின்னலுக்குப் போக வேண்டியிருக்கின்றது. அந்த இடத்தில் அன்ரன் பாலசிங்கம் முதலாவது இடம். ஆனால், அவரோடு அது முடிந்துவிடப்போவதில்லை. அவர் மட்டும் அதற்குப் பொறுப்பாக இருக்கவும் முடியாது. ஏனென்றால், இங்கிருக்கின்ற ஒவ்வொருவரும் பொறுப்பானவர்களாக இருக்கவேண்டும்.

அன்ரன் பாலசிங்கத்தின் நூல் அதைத் தான சொல்கிறது. தான் செய்து காட்டியிருக்கின்றார். அதை மற்றவர்களையும் செய்யுமாறு கூறுகின்றார். இந்த நூலைப்படிக்கும் போது எங்களுக்கு அந்த உணர்வுதான் பிரதானமாக முன் வரவேண்டியிருக்கிறது.

இப்படிப் பார்த்துக்கொண்டு வருவோமேயானால் பிரதானமாக இந்தியப் பிரச்சினையின் போது இந்த நூல் அதனை மிகவும் அழகாக ஒரு கலாபூரணமாக நடந்த விடயங்களை அப்படியே பதிவுசெய்துகொண்டு வருகின்றது. அந்த விதத்தில் அது ஒரு கலையாகிவிட்டது.

உதாரணமாக, இந்தியாவில் நடந்த பேச்சுகளை அப்படியே - அதேவடிவத்தில் - வார்த்தைகளைப் பதிவுசெய்துள்ளது. பின்னர் அப்படியே வந்து பிரேமதாசாவின் வரிகள் வருகின்றன. இப்படியாகப் பதிவு செய்யப்படும் போது அது மிகவும் உண்மைத்தன்மை வாய்ந்ததாகின்றது.

நான் இதில் ஒரு முக்கியமான உண்மைத் தன்மையை எடுத்துக்காட்டலாம். அன்ரன் பாலசிங்கத்தின் நூலில் 118 ஆவது பக்கத்தில் குமரப்பா - புலேந்திரனின் விவகாரம் விவரிக்கப்பட்டுள்ளது. அதேபோல 'அசைன்மென்ற் கொழும்பு' என்கின்ற நூலில் 212 இல் இருந்து 215 ஆம் பக்கம் வரை அந்தக் குமரப்பா புலேந்திரனின் விவரம் விவரிக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு புத்தகங்களில் கூறப்பட்டுள்ளவையும் ஒரே மாதிரியானவையாகவே உள்ளன.

அப்படியானால், அதன் உண்மைத்தன்மை எவ்வளவு தெளிவாக இருக்கின்றது. குமரப்பா - புலேந்திரன் விடயத்தைக் கையாண்ட விதத்தில் இந்திய அரசு தவறு செய்துவிட்டது என்பதை அந்த விடயத்தில் அன்ரன் பாலசிங்கம் - பிரபாகரன் ஆகிய இருவரும் உணர்ச்சிவசப்பட்டதையும் அவர்களுடைய மனநிலை குழம்பப்பட்டதையும் ஒரு கலாபூரணமாக அன்ரன் பாலசிங்கம் பதிவு செய்துள்ளார்.

இந்திய இராணுவத்தினர் எப்படி இதில் மோசமான தவறைச் செய்தது என்பதை அவர் எழுதியுள்ளது போலவே, 'அசைன்மென்ற் கொழும்பு' என்னும் நூலிலும் அப்படியே எழுதப்பட்டுள்ளது.

இந்திய ராஜதந்திரம் செய்த பிரதானமான தவறு அது என்பதை அந்நூலில் அப்படியே திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களுடைய போராட்டம் பற்றியும் இலங்கை - இந்திய உறவு பற்றியும் பார்க்கக் கூடியதும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளதும், ஏறக்குறைய ஒரே மாதிரியான பிரச்சினைகளைக் கையாண்டுள்ளதுமான ஒரேமாதிரியான இரண்டு முக்கிய நூல்களாக ஒருபுறம் அன்ரன் பாலசிங்கத்தினுடையதையும் மறுபுறம் டிக்ஸிற்றினுடையதையும் கொள்ளலாம். இரண்டு நூல்களும் ராஜதந்திர வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்தியாவை விளங்கவும் இந்தியாவின் தவறுகளை விளங்கவும் இந்தியர் தம்மைக் கண்டு கொள்ளவும் ஜே.என்.டிக்ஸிற்றின் நூலும் தமிழீழப் போராட்டத்தை விளங்கவும், தமிழீழப் போராட்டத்தை உலகிற்குச் சொல்லவும் தமிழீழப் போராட்டத்தை நாங்கள் விளஙகவும் எங்களி[illegible] சரி பிழைகளை நாங்கள் கண்டுகொள்ளவும் [illegible]ன் பாலசிங்கத்தினுடைய நூலும் முக்கிய[illegible]னவை.

இந்த இரண்டு நூல்களும் [illegible]காரணம் கொண்டும் புறக்கணிக்கப்ப[illegible]தவை. சிறிதும் கவனத்தில் பெறத்[illegible]தவை. இதில் டிக்ஸிற்றின் நூலை வி[illegible]எனக்கு அன்ரன் பாலசிங்கத்தின் நூ[illegible]த்துள்ளது. ஏனென்றால், டிக்ஷிற்றி[illegible]மொழியில் வருகின்ற ஊடகத்தன்மையும்[illegible] உள்நோக்கத் தன்மைகளும், அ[illegible]ரன் [illegible]சிங்கத்தின் நூலில் இல்லை.

அன்ரன் பாலசிங்கத்தின் நூலில் வெளிப்படைத் தன்மைகளும், உணர்ச்சி பூர்வமான தன்மைகளும், கலாபூரணமும் காணப்படுகின்றன. டிக்ஷிற்றின் நூலில் கலாபூர்ணத்தைச் சிறிதும் காணமுடிவதில்லை. மிகவும் கடினமான வார்த்தைப் பிரயோகங்களுக்குள்ளால் அதிக ராஜதந்திரப் பரிபாசைகள் 'அசைன்மென்ற் கொழும்பு'வில் காணப்படுகின்றன. ஆனால், அன்ரன் பாலசிங்கத்தினுடைய இந்த நூல் குறிப்பான - தேர்ந்த - சொற்களை, இலகுவான ஆங்கிலப் படங்களையும் ஒரு கதையைச் சொல்வது போன்ற சம்பவத் தொடர்ச்சியையும் தெளிவாகப் பேணியிருக்கின்றது.

அரசியல் மாணவர்கள் இந்த இரண்டு நூலகளையும் பக்கம் பக்கமாகப் படிக்கவேண்டும். அப்படிப் படிக்கும்போது போராட்டத்தில் யார் உண்மை யார்பொய் என்பது தெரியும்.

தமிழீழப் போராட்டத்தினுடைய நீதியும் அதனுடைய கண்ணியமும் தலை வணங்காமல் வாழவேண்டும் என்கின்ற தமிழர்களுடைய இயல்பும் சுயமரியாதையும் இந்த நூலில் முற்று முழுவதுமாக இருக்கிறது. இதில் தமிழனுடைய முதுகெலும்பு நிமிர்ந்து இருக்கிறது. இது வெறுமனே தமிழனுக்காக அல்ல, ஒடுக்கப்படும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் முதுகெலும்பு நிமிரவேண்டும். நாங்கள் இதற்கு முன்மாதிரியாக இருக்க முடியும்.

எப்பொழுது பிரச்சினைகள் இரு பாகங்களாக இருப்பதில் இருந்து விடுபடுகின்றதோ, அப்பொழுது பிரச்சினைகள் மேலும் மேலும் அதிகமாகி விடுகின்றன. இப்பொழுது விஞ்ஞானத்தின் காலகட்டத்திற்குப் பின்பு பிரச்சினை அதிகம் சிக்கலடைந்து விட்டது. சர்வதேச உறவு பழைமைவாதக் கண்ணோட்டத்தை முற்றிலும் நிராகரித்துவிட்டு, நாங்கள் இப்போது இருப்பதை இப்போதிருப்பதாகக் கண்டுகொள்வோம். அப்படிக் காண முற்படும்பொழுது எங்களுக்குப் புதிய பிரச்சினைகள் வருகின்றன.

ஆசியாவில் மிகப்பெரிய சக்தியாக சீனா வளர்ந்துகொண்டு வருகிறது. அதற்காக அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டுச்சேரவிருக்கின்றன. அதில் நாங்கள் சிக்கப் போகின்றோம். அதிலேதான் எங்களுடைய தமிழீழம் பற்றிய கொள்கை வகுப்பு இங்குதான் உண்மையிலேயே அத்திபாரமிடப்படப்போகின்றது.

பக்கத்தில் இருக்கும் பிரதேசம் என்கின்ற வகையில், நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு தீர்மானம் எடுக்க முடியாது. எங்களுடைய உயிர் வாழலை உறுதிப்படுத்துகின்ற முடிவுக்குப் போக வேண்டிய அளவிற்கு ஒரு சிக்கலான இடத்தில் இருக்கின்றோம்.

அதாவது, பாலசிங்கத்தையும் புலிகளையும் பார்த்து றொமேஷ் பண்டாரி ஒரு வார்த்தை சொல்லியிருக்கின்றார். 'அப்ஸ்ராக்ற் பிறின்சிப்பில்ஸ்' பற்றியே எப்பொழுதும் கதைக்கிறீர்கள் என்று இந்தப் புத்தகத்திலும் அதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். சுய உரிமையைத் தான் அவர் சொல்கின்றார்.

அவர் கருதுவதென்னவென்றால், தங்களுடைய நலன்களை முதன்மைப்படுத்திக்கொண்டு அதற்குப் பிறகுதான் அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர் சொல்ல வந்த செய்தி அதுதான்.

ஆனால், எங்களுடைய பிரச்சினை என்னவென்றால், அதை நாங்கள் புரிந்துகொண்டு எவ்வாறு கையாளப்போகின்றோம் என்பது தான். இது இலகுவானதல்ல.

1944 ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்க இந்தியாவிற்குப்போன பொழுது அவர்கள் கேட்டார்கள் இலங்கையி[illegible]னுடைய நிலை என்னவென்று? அவர் சொன்னா[illegible] யுத்தமொன்று வந்தால், பிரச்சினையொன்று வந்தால், இலங்கை இந்தியாவின் பக்கம்தான் - என்றார்.

இது சிங்கள மனத்திலிருக்கின்ற செய்தி. இதைத்தான் ஜே.ஆரும் செய்தவர். டி.எஸ்.சேனநாயக்கா தங்களது நீண்டகால கண்ணோட்டத்தை தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். வெள்ளையனோடு கை கோர்க்கும்போதுகூட அவர் கூறிய வசனம் இது. இது ஒரு யதார்த்தம். ஆனால், யதார்த்தத்துக்குள் எங்களுடைய சுய உரிமையை நாங்கள் பறிகொடுத்துவிட முடியாது. யதார்த்தத்தை நாங்கள் எவ்வாறு வெற்றிகொள்ளப் போகின்றோம்? எங்களுக்கு அன்ரன் பாலசிங்கம் முன்னுதாரணமாகப் பணியாற்றியிருக்கின்றார். இந்தப் பணியை அடுத்த தலைமுறை தொடர வேண்டியிருக்கின்றது.

### முதலாவது ராஜதந்திரி

ஆனால், நான் அனைத்து மக்களிடமும்- ஓர் அறிவியல் ஆய்வோடு சம்பந்தப்பட்டவன் என்ற வகையில் கேட்பது, பாலசிங்கத்தை ஒரு புலியாகப் பார்க்குமாறு கேட்கவில்லை. அவர் புலி தான். அதிலொரு பிரச்சினையுமில்லை. ஆனால், தமிழ் ராஜதந்திரப் பாரம்பரியத்தின் முதல் நபர். முதலாவது 'தமிழ் டிப்ளோமற்'.

தமிழ் மக்களுடைய இராஜதந்திர பாரம்பரியத்தில் ஒரு நிரூபண அமைப்பு முறை இன்னும் வளரவில்லைத்தான். அது ஒரு தனி மனித அமைப்பு முறையாகத்தான் இப்பொழுதும் இருக்கின்றது. அது பாலசிங்கத்தோடுதான் இருக்கின்றது; பிரபாகரனோடு தான் இருக்கின்றது. அப்படித்தான் யதார்த்தம் ஆரம்பத்திலிருக்க முடியும். இதைக் கற்பனை செய்ய முடியாது. ஆனால், எங்களுக்கொரு பொறுப்பிருக்கின்றது. இதை ஒரு நீண்டகாலத்து நிரூபணமாக மாற்றி எடுப்பது, அதில் அவ்விருவரும் முன்னோடிகள்.

எனக்கு, பிரபாகரனுடைய எதிரிக்கு முன்னால் தலை வணங்காது, சளைக்காது தீர்மானம் எடுக்கும் இயல்பு நன்றாகப் பிடிக்கும். மரணமா? தலைவணங்குதலா? என்று கேட்டால், தலை வணங்கமாட்டேன் என்பதுதான் அவருடைய பதில்.

இந்தப் புத்தகம் முழுவதிலும் அது வருகின்றது.

தனது மக்களை, தான் நினைக்கின்ற மனப்போக்கிற்காகப் பிரபாகரன் பலியிடமாட்டார் என்பது எனக்குத் தெரியும். நீண்டகால அனுபவமும், இந்த புத்தகமும் யதார்த்த பூர்வமான முடிவுகளைப் பிரபாகரன் எடுப்பார் என்பதைக் காட்டியிருக்கின்றது.

இந்தியாவுடன் நிலைப்பாட்டில் இரகசிய ஒப்பந்தம் பற்றி ராஜீவ் கதைத்துவிட்டுப் பின்வாங்கும போது பிரபாகரன் அன்ரன் பாலசிங்கத்திடம் சொன்னார், "அண்ணே! நாங்கள் இந்த ஒப்பந்தத்தை எழுதினாலும் எழுதாவிட்டாலும் அவர்கள் கவலைப்பட மாட்டாங்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை" என்றார். இரகசிய ஒப்பந்தத்தை எழுதுவோம் என்று அன்ரன் பாலசிங்கம் ராஜீவைக் கேட்டபோது, அவர்கள் அதை லாவகமாகச் சமாளித்துவிட்டுப் போனபோது - பிரபாகரனும் பாலசிங்கமும் வெளியே நடந்து வரும்போது - சொல்கிறார் "அண்ணே! எழுதினாலும் எழுதாவிட்டாலும் இந்தியா எங்களுக்குச் செய்யாது. ஆனபடியால், எழுதுவது எங்களுக்கு முக்கியமில்லை" - என்றார்.

இப்படி, அந்த யதார்த்தத்தை அவர் மதிப்பீடு செய்தார். பின்பு நெருக்கடிகள் வரும்போதெல்லாம், விட்டுக்கொடுப்புடன் நடந்து கொண்டார்.

### கொள்கையை சிறிதும் விட்டுக்கொடுக்காதவர் பிரபா

நீங்கள் வெளியிலிருந்து பார்ப்பீர்கள். முற்றிலும் விட்டுக்கொடுப்பாளராகப் பிரபாகரன்தான் நடந்துகொண்டார். ஆனால், கொள்கையில் பிரபாகரன் விட்டுக்கொடுக்கவில்லை; விட்டுக் கொடுககவும்மாட்டார்.

கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வரும்போது ஒவ்வொரு கட்டத்திலும் விட்டுக் கொடுக்கவில்லை. அதை இந்த நூல் காட்டுகின்றது. ஏன் விட்டுக் கொடுக்க முடியாதென்றால், மில்லருக்கும் திலீபனுக்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்புக்கு ஒடுக்குமுறை எங்களைத் தள்ளிவிட்டது. இனி யாரும் மில்லருக்கும் திலீபனுக்கும் பதில் சொல்லித்தான் தீர்மானம் ஏடுக்க வேண்டும். இதை எல்லா எதிரிகளும் புரிந்து கொள்ளவேண்டும்.

இப்பொழுது நடக்கும் பேச்சுக்களில் போராளிகள் மத்தியில் சலசலப்பு இருக்கத்தான் செய்கின்றது. சமஷ்டி என்ற தீர்மானத்தில் போகலாமா என்பது பற்றி எதிர்ப்பு இருக்கவே செய்தது.

பாலசிங்கம் அவை எல்லாவற்றையும் மீறி சமஷ்டி என்ற அடிப்படையில் பேச்சுக்குத் தயாரானார். இது எதிரிக்கு விளங்கிக்கொள்ள முடியாத ஒரு பாடம்.

பேச்சு என்று போவதனால், சமஷ்டி என்று சொல்வதைத் தவிர பேச்சுக்குப் போக முடியாது பேச்சு யதார்த்தம் என்று வரலாறு சொல்வதானால் அது சமஷ்டி பற்றிப் பேசுவதென்றே சொல்கின்றது.

ஆனால், இதற்காகப் 'புலிகள் பேச்சுகளில் விசுவாசமற்று இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. எல்லாவற்றையும் மீறிச் சமஷ்டி சாத்தியப்படப் போவதில்லை; எதிரி அதற்குத் தயாராக இல்லை; அப்படி நடக்க விடமாட்டார்கள்.

எனவே, அன்ரன் பாலசிங்கம் சமஷ்டி அடிப்படையில் பேசுவோம் என்று சொன்னாலென்ன, பேச்சு என்றால் அப்படிச் சொல்லித்தான் ஆக வேண்டும். பேச்சு என்பது இப்பொழுது யதார்த்தம். அதுதான் அரசியல் ராஜதந்திரம் கூட.

### மேற்குலகின் சமரச வழி

விஞ்ஞானத்திற்குப் பின்னான காலத்தில் இப்பொழுது ஒரு புதுயுகம் பிறந்துவிட்டது. 2ஆம உலக மகா யுத்தத்திற்குப் பின்பு மேற்குலகம் யுத்தத்தைத் தவிர்ப்பது என்ற அடிப்படை முடிவுக்கு வந்துவிட்டது. மேற்குலகத்தவரிடையேயும் தங்களுக்குள் தாங்கள் அடிபடாத ஒரு சமரச யுகத்திற்குள் அவர்கள் புகுந்துவிட்டார்கள். தஙகள் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய சமரச வழிகளிலேதான் அவர்கள் நிற்கப்போகின்றார்கள்.

சண்டையால் பிரித்தானியாவும் ஜேர்மனியும் பலவீனம் அடைந்தன. இந்தப் பலவீனத்தின் மேலதான் நாங்கள் அனைவரும் சுதந்திரமடைந்தோம். போராட்டம் ஒருபுறமிருக்க மறுபுறம் இது நிகழந்தது.

எனவே, உலகம் நினைக்கிறது. தாங்கள் சண்டை பிடித்தால் ஆசியாவை ஆளமுடியாது என்று. அப்படியென்றால் உலக உறவில் வடக்கு, தெற்கு என்று ஒரு பாலம் பிளந்து விட்டது. நாங்கள் அதற்குள் நசியும் பூச்சிகளாக இருக்கின்றோம்.

விஞ்ஞான யுகத்திற்குப் பின்பு அமெரிக்காவின் இரும்புச் சப்பாத்துக்குள் நசிந்த அட்டையின் பின்பக்கம் போல், உலகிலுள்ள விடுதலைப் போராட்டங்களும் புரட்சிகளும் இழுபட்டுத் தேயும காலம் இது. அதில் புலிகளுக்கு இப்படியொரு தீர்மானத்தை எடுக்க மட்டுந்தான் இடமிருக்கிறது. அதை பாலசிங்கம் எடுத்தார் பிரபாகரன் எடுத்தார்; புலிகள் எடுத்தனர். ஆனால், எங்களுடைய போக்கு போராட்டத்தை வெற்றியடைய வைத்து யாராலும் கருக்கலைக்க முடியாத நிலையை அடைந்தே தீரும்.

இவற்றை வெறும் கற்பனையில் நான் சொல்ல

(18ஆம் பக்கம் பார்க்க)



# HOUSE MAID

Age : 23- 45 (female)
Ability to speak **English**
wash and iron clothes.
House Cleaning experience with foreign NGO's, 3-5 yrs working experience.
Ability to cook eastern or western meals
Work Days Mon- Sat. 8a.m. - 4p.m.

Contact: 0777- 486- 447

Interviews : Sunday 10a.m. 27th March

(43424) (39-14-15)


# 10ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 06 - 1916 | 24 - 03 - 1995 |

(இணுவில் கிழக்கு மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல தவில்மேதை)

## அமரர் இரத்தினம் கனகசபாபுதி (கனகர்)

எங்கள் அன்பான தாத்தாவே!
நீங்கள் எங்களை விட்டு மறைந்து
பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
அன்பு எங்கள் நெஞ்சை விட்டு
அகலாத நினைவலைகளாக உள்ளது!

(சி-41681) (39-14-15)

மஞ்சத்தடி,
இணுவில்.

- பேரப்பிள்ளைகள்:
ஜெ.டுஷ்யந்தி, ஜெ.டுளசிகா.

## சுனாமியால் பாதித்த சிறுவர்களின் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்24

மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழு சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தகவல்களைச் சேகரித்து வருகின்றது.

அந்தவகையில், சுனாமியால் பெற்றோரை இழந்த, நோயினால் பாதிக்கப்பட்ட, காணாமற்போன, உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ள, இல்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள, வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள, கல்வி புறக்கணிக்கப்பட்ட துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விவரங்கள் மேற்படி குழுவால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி விவரங்களை அறிந்த பொதுமக்களோ, பொறுப்பு வாய்ந்தவர்களோ 'மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு, அறை எண் 30, யாழ்.போதனா வைத்தியசாலை' என்னும் முகவரிக்கு அல்லது 222 5657 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-202)

## மாணவர்களுக்குப் புத்தகப் பை

அரியாலை, மார்ச்24

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் உதவியுடன் ஈச்சமோட்டை மாதர் அபிவிருத்திச் சங்கம் ஈச்சமோட்டை கிராமசேவையாளர் (ஜே.66) பிரிவுக்குட்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப் பைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தப் பாடசாலைப் பைகள் 40 மாணவர்களுககு வழங்கப்பட்டன என்று கிராமசேவையாளர் எம்.சுந்தரலிங்கம் தெரிவித்தார். அத்துடன் இம்மாணவர்களுக்குச் சவர்க்கார வகைகளும் வழங்கப்பட்டன.

(ஜ-17)

## பரிசுத்தவார நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்24

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் பரிசுத்த வார நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்குப் பரிசுத்த நற்கருணை ஆராதனையும், பெரிய வெள்ளி தினமான நாளை காலை 7 மணி தொடக்கம் அமைதியும் தியானமும், பிற்பகல் 4.30 மணிக்குக் கல்வாரி மலையடித் தியானமும் இடம்பெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்த திருநாளும் பிறபகல் 5.30 மணிக்கு பவனியும் நற்கருணை ஆராதனையும் இடம் பெறும். (ஒ- 202)

## அற்றோணித் தத்துவப் பத்திரம் இரத்து அறிவித்தல்

கொழும்பு-3, கொள்ளுப்பிட்டி, காலி வீதி 332/1 ஆம் இலக்க இல்லத்தைச் சேர்ந்தவர்களும் தற்காலம் மலேசியா ஈப்போ நாகா லாலுவன் கேனிங் வீதி 3ஆம் இலக்க இல்லத்தில் வசிப்பவர்களுமான தொண்டைமானாறு இராசரத்தினம் திருஞானசம்பந்தரும் பெண் திலகராணியாகிய நாங்கள் இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருவது யாதெனில், தொண்டைமானாறு உடுப்பிட்டி வீதி, திரு திலகராஜா இராஜசிங்கத்தை இலங்கையில் எமது அற்றோணித் தத்துவக்காரனாக நியமித்த கொழும்பு பிரசித்த நொத்தாரிசு இரா.பாலேந்திரா முகதாவில் 09.01.1999 திகதியில் 3800 ஆம் இலக்கத்தில் முடிந்த தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்து குறித்த திலகராஜா இராஜசிங்கத்தையும் எங்களது அற்றோணித் தத்துவக்காரன் பதவியில் இருந்து நீக்கி விட்டோம். குறித்த தத்துவப் பத்திரத்தின் மூலம் எமக்குச் சொந்தமான காணிகளில் அவருக்குக் குத்தகைப் பணம் அறவிடும் உரிமை இல்லை என்றும் இரத்துச் செய்யப்பட்ட மேற்குறித்த 3800ஆம் இலக்க தத்துவப் பத்திரத்தின் மூலம் திரு.இராஜசிங்கம் எடுக்க முயலும் காரியங்களுக்கு நாங்கள் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்றும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இராசரத்தினம் திருஞானசம்பந்தர்,**
**திலகராணி திருஞானசம்பந்தர்**
(43431) (39-14-15)

## 31ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அன்புடையீர்!

23.02.2005 புதன்கிழமை மாலை 5 மணியளவில் சிவப்பேறடைந்த எங்கள் பேரன்புக்கும் வணக்கத்துக்குமுரிய தந்தை



### உயர்திரு.வே.க.ஏரம்பு

அவர்களின் வீட்டுக் கிருத்தியம் நாளை 25.03.2005 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கும் அன்னாரது இல்லத்திலும் தூயவன் அரசறிவியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சுற்றஞ்சூழ வருகைதந்து எமது தந்தையின் ஆன்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து அமுதருந்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம். இவ்வழைப்பையே தனிப்பட்ட 'அழைப்பாக ஏற்குமாறு அன்புள்ளங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி-41679)


## பாடசாலை மாணவர்களே உங்கள் கணனித்துறை ஆற்றலை விருத்தி செய்ய ஓர் அரிய சந்தர்ப்பம்

**IIS** இன் வெற்றிகரமான 10வது ஆண்டின் செயற்பாட்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே வழங்கும் விசேட சலுகை

### Diploma in Information Technology
### காலம் : 4 மாதம்

கணனித்துறையில் பாடசாலை மாணவர்களின் ஆற்றலை விருத்தி செய்யும் நோக்கத்துடன் **IIS** நிறுவனம் விசேட சலுகைகளை வழங்க உத்தேசித்துள்ளது. மேற்படி **Diploma** கற்கை நெறியில் பதிவு செய்யும் பாடசாலை மாணவர்களுக்கு (15 தொடக்கம் 20 வயதிற்கு உட்பட்டவர்கள்). பதிவு செய்யும் ஒழுங்கில் கட்டணச்சலுகையில் முன்னுரிமை வழங்கப்படும்.

முதல் 200 மாணவர்களுக்கு 100%
அடுத்த 300 மாணவர்களுக்கு 90%
அடுத்த 300 மாணவர்களுக்கு 80%
அடுத்த 300 'ாணவர்களுக்கு 70%

**உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்**

பதிவுகள் 24 / 03 / 2005 பகல் 10.00 மணி முதல் ஏற்றுக்கொள்ளப்படும்

நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் கட்டணச்சலுகையை இழக்க நேரிடும்

**விண்ணப்பமுடிவுத்திகதி : 31 மார்ச் 2005**

இக்கற்கை நெறியில் உள்ளடங்கும் விடயங்கள்

- Introduction to Information Technology
- Introduction to Internet Technology
- Introduction to Hardware
- MS Office XP
  - MS Word • MS Excel • MS PowerPoint

யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரியில் யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தினால் நடாத்தப்படும் கன்காட்சியில் **IIS** இன் விசேட காரியாலயம் இயங்குகிறது. உங்கள் விண்ணப்பப்படிவங்களை எமது விசேட காரியாலயத்திலும் மற்றும் இல.100, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**IIS.**
Institute of Informatics Studies
# 100, Clock Tower Road, Jaffna.
Email: iis@sltnet.lk T.P No: 021 222 2831 / 021 222 6933


# மரண அறிவித்தல்



## மாணிக்கம் சிவபாததுரை

கொக்குவில் மேற்கு அரசடியைப் பிறப்பிடமாகவும், ஸ்ரீ கதிரேசன் வீதி, இல. 115 A ஐ சேர்ந்த பிரபல வர்த்தகருமாகிய மாணிக்கம் சிவபாததுரை 18.03.2005 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - பாக்கியம் (முன்னாள் உரிமையாளர் - மாணிக்கம் அன் சன்ஸ், ஸ்ரீ கதிரேசன் வீதி, இல. 101, கொழும்பு) தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சுப்பையா - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் சுதர்சன், ஸ்ரீதரன் சுமதி (சுவிஸ்), சுகந்தி (ஆசிரியை, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா), காண்டீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பொன்னுத்துரை ஸ்ரீதரனின் (சுவிஸ்) மாமனாரும் டினூஷனின் அன்புப் பேரனும் கைலாசபிள்ளை (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர், கனடா), சுப்பிரமணியம் (உரிமையாளர், ரகு இன்ரர்நஷனல், ஸ்ரீகதிரேசன் வீதி, இல.101, கொழும்பு), இராசலிங்கம் (வெள்ளவத்தை), இரட்ணலிங்கம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கனடா), காலஞ்சென்ற மாணிக்கம் இராஜ பரமேஸ்வரி, சிவச்சந்திரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), இரத்தினராசா யோகேஸ்வரி (ஆசிரியை, உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இரத்தினராசா (முன்னாள் கல்விப் பணிப்பாளர்) சோமசுந்தரம் பரமேஸ்வரி, இராசரத்தினம், செல்வரட்ணம், மகாதேவன் - மகேஸ்வரி, சுந்தரலிங்கம் பூமணி, மகேந்திரன் மகாலட்சுமி, தவராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.03.2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*அரசடி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
*T.P.NO.077 3000717*

தகவல்:
சி.காண்டீபன் (மகன்)

(43355) (39-21-11-34)






வட்டக்கச்சிப் பிரதேச இராமநாதபுரம் வலயத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பும், 'வீரமுரசு' நிகழ்வும் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் விசேட பந்தலில் மாவீரர் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:வட்டக்கச்சி செய்தியாளர்)*

## விளையாட்டு நிகழ்வுகள்

மல்லாவி,மார்ச்24

துணுக்காய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

துணுக்காய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், துணுக்காய் கல்விவலய ஆசிரிய ஆலோசகர்கள் எஸ்.வேலும்மயிலும், திருமதி ச.இராஜேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி முதலாமிடத்தையும் யோகபுரம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் துணுக்காய் அ.த.பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

(ஒ-322-202)

★ ★ ★

மல்லாவி,மார்ச்.24

முல்லைத்தீவு திருநகர் தமிழ்வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் த.அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா பிரதம விருந்தினராகவும் துணுக்காய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி, ஆசிரிய ஆலோசகர் எஸ்.வேலும்மயிலும் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

(ஒ-322)

★ ★ ★

ஒட்டுசுட்டான்,மார்ச்24

ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் கோட்டக்கல்வி அதிகாரி தலைமையில் இடம்பெற்றன.

(341-202)

★ ★ ★

பரந்தன்,மார்ச்24

கிளிநொச்சி, இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி கடந்த 18ஆம் திகதி இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் இ.இராசரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கை மாவீரரின் தந்தையான க.பொன்னுத்துரை, கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.இராமலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து இயக்கச்சி அரசியல துறைப் பொறுப்பாளர் கதிரொளி தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

போட்டியின் முடிவில் கருத்துரைகளும், பரிசளிப்பும் இடம்பெற்றன. (ஒ-352)

★ ★ ★

வட்டக்கச்சி,மார்ச்24

கிளிநொச்சி கண்ணகையம்மன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி சமீபத்தில் அதிபர் திருமதி த.சண்முகநாதன தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கண்டாவளைக் கோட்டக்கல்வி அலுவலர் வீ.இராசகுலசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கி பரந்தன் கிளை முகாமையாளர் எஸ்.கந்தசாமி, கிளிநொச்சி மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ் முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் மற்றும் விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஒ-405)

★ ★ ★

முழங்காவில்,மார்ச்24

கிளிநொச்சி கறுக்காய்த்தீவு மகா வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் சு.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக்கல்விப் பணிப்பாளர் தகுருகுலராசாவும் சிறப்பு விருந்தினர்களாக பூநகரிப் பிரதேச செயலர் ம.ஸ்ரீஸ்கந்தகுமார், கோட்டக கல்வி அலுவலர் தி.கணபதிப்பிள்ளை, கிளிநொச்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எஸ்.எழிலன்பன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

★ ★ ★

முழங்காவில்,மார்ச்24

கிளிநொச்சி வலைப்பாடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி சமீபத்தில் இடமபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக வலைப்பாடு பங்குத்தந்தை அன்ரன் றொக் கலந்துகொண்டார்.

(ஒ-323)

★ ★ ★

பரந்தன்,மார்ச்24

கிளிநொச்சி, பிரமந்தனாறு மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி சமீபத்தில் வித்தியாலய அதிபர் க.ச.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிழவன் தமிழீழத் தேசியக் கொடியையும் அதிபர் க.ச.சிவலிங்கம் பாடசாலைக் கொடியையும் ஏற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தனர்.

போட்டி முடிவில் கருத்துரைகளும் பரிசளிப்பும் இடம்பெற்றன. (ஒ-352)

# கமக்காரர் அமைப்பில் இணைவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டவேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர் கோரிக்கை

பரந்தன்,மார்ச்.24

கமக்காரர் அமைப்பில் இணைந்துகொள்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டவேண்டும். - இவ்வாறு கோரியுள்ளார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம்.

புளியம்பொக்கணைப் பகுதியில் அமைக்கப்பட்ட நெற்களஞ்சியத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள புளியம்பொக்கணைச் சந்திக்கு அருகில் 'வேல்ட் விஷன்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் 15 லட்சம் ரூபா செலவில் இந்த நெற களஞ்சியம் அமைக்கப்பட்டது.

இந்த நெற்களஞ்சியத்தின் திறப்புவிழா கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கூறியதாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் 80 சத வீதத்திற்கும் கூடுதலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். இவர்கள் உற்பத்தி செய்யும் விளை பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும் இவர்களுக்கான உள்ளீடுகளை வைப்பதற்கும் களஞ்சிய வசதிகள் எதுவும் இல்லாது இருந்தது. இதனால் இப்பகுதி மக்கள் பலகாலமாகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இது தொடர்பாக 'வேல்ட் விஷன்' நிறுவனத்துடன் கலந்தாலோசித்தோம். அவர்கள் இந்தக் களஞ்சியத்தை அமைத்துத்தர முன்வந்தனா. இதற்கான நிதி உதவியை அவர்கள் எமக்கு விரைவாகத் தந்துதவியமையால் இக்கட்டடம் விரைவாக அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாம் இந்த இடத்தில் கரைச்சி வடக்குக் கமக்கார அமைப்புக்கான அலுவலகத்தையும் அமைத்துத்தருமாறு இந்த நிறுவனத்திடம் கேட்டுள்ளோம். அவர்கள் அதனை அமைத்துத் தருவார்கள் என நம்புகின்றேன். எமது பகுதியில் இன்னும் பல கட்டடங்கள் அமைக்க வேண்டிய தேவை உள்ளது. இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து உதவிபுரிய வேண்டும்.

விவசாயிகள் அமைப்பு ரீதியாகச் செயற்படவேண்டும். விவசாய அமைப்புக்கள் தமக்கான நிதி வளங்களைக் கூட்டவேண்டும். 21ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் உள்ள இந்த மாவட்டத்தில் விவசாயிகள் ஒவ்வொருவரும் விவசாய அமைப்பில் இணைந்து செயற்பட வேண்டும், இதன்மூலம் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் நிதிமூலம் அபிவிருத்தி வேலைகளை மேற கொள்ள முடியும்.

கட்டடங்களை அமைத்துத்தர மட்டுமே எம்மால் முடியும். இதனைப்பயன்படுத்தி விவசாயிகளின் நலன்களைக் கவனித்தல், உற்பத்தியை சந்தைப்படுத்தல் போன்ற விடயங்களைக் கவனிப்பது கமக்கார அமைப்பைச் சார்ந்தது - என்றார் அரசஅதிபர்.

(ஒ-352-203)




# நிலையான சந்தை இல்லாததால் விசுவமடு மக்களுக்குச் சிரமம்

பரந்தன்,மார்ச்24

நிலையான சந்தை வசதியில்லாததால் விசுவமடுப் பிரதேசப் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் கீழ் விசுவமடு பொதுச் சந்தை இயங்குகிறது. இது நடமாடும் சந்தையாகவே உள்ளது. இதனால் சந்தையின் உட்புறம் வியாபாரத்தை மேற்கொண்டு வரும் வர்த்தகர்களும் சந்தைக்கு அன்றாடம் விளைபொருள்களைக்கொண்டு வருபவர்களும் சலிப்படைந்துள்ளனர்.

பலதடவைகள் தமது வியாபார நிலையங்களை இடம் மாற்றியதில் வர்த்தகர்கள் பணச் செலவையும் எதிர்கொண்டுள்ளனர். நிரந்தர சந்தை வசதி ஏற்படுத்தப்படாமல் இருப்பதால் சந்தை இயங்கும் பகுதியில் சுகாதாரச்சீர்கேடு ஏற்படும அபாயமும் ஏற்பட்டுள்ளது.

பொதுச்சந்தைக்கென நிலையான ஓர்இடம் இல்லாததே இதற்கான காரணம் எனத்தெரிய வந்துள்ளது.

1972ஆம் ஆண்டில் விசுவமடு குடியேற்றத் திட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து விசுவமடுப் பொதுச்சந்தை பாவனையில் இருந்து வந்தது. தற்போது விசுவமடு விவசாயிகள் பலநோக்குக கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் சந்தை அமைந்துள்ளதாகவும் -

இதன் காரணத்தால் சந்தையின் உட்புறத்தில் நிரந்தரக்கட்டடங்கள் கட்டக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் - இதனால் வர்த்தகர்கள் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர் என்றும் - கூறப்படுகிறது.

இந்தப் பிரச்சினைக்குத் தீவுகண்டு விசுவமடுப் பொதுச்சந்தையை நிலையான இடத்தில் அமைத்துத் தரும்படி இப்பகுதிமக்கள் பிரதேச சபையிடம் கோரியுள்ளனர். (ஒ-352)

# பஸ் சேவை நேரத்தை நீடிக்க அலுவலர்கள் வேண்டுகோள்

ஜெயபுரம்,மார்ச்24

பூநகரியிலிருந்து ஜெயபுரம் ஊடாக முழங்காவிலுக்கு நடைபெறும் பஸ்சேவையை பிற்பகல் 5.30 மணி வரை நீடிக்க வேண்டும் என்று தமிழீழ போக்குவரத்துக் கழகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்ததாவது:

ஜெயபுரத்தில் இயங்கிவந்த திணைக்களங்கள், அலுவலகங்கள் போன்றவற்றில் பெரும்பாலனவை தற்போது பூநகரிப் பகுதியில் இயங்கத் தொடங்கிவிட்டன. ஜெயபுரம், முழங்காவில் ஆகிய பகுதிகளில் இருந்து இந்த அலுவலகங்களுக்குச் செல்வோர் தமிழீழப் போக்குவரத்துக்கழக பஸ்களில் காலையில் பூநகரி செல்கின்றனர். ஆனால், பிற்பகலில் திரும்பும் போது பஸ் சேவை இன்றிச் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். ஆகவே, தமிழீழப் போக்குவரத்துக் கழகம் பிற்பகல் 5.30 மணி வரை சேவையை நீடித்தால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

(ஒ-291-202)

# சிலாவத்தைப் பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு

புதுக்குடியிருப்பு,மார்ச்.7

சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் தற்போது மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலையில் சுனாமி அனர்த்தத்திற்கு முன்னர் 270 மாணவர்கள் கல்விகற்று வந்தனர். இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் குடியிருந்த மக்கள் இப்பிரதேசத்தில் தற்போது மீளக்குடியமர ஆரம்பித்துள்ளனர். இதனால் மாணவர்களின் தொகை அதிகரித்து வருகிறது என அதிபர் க.திருக்குமரன் தொவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

கடந்த யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வேறு இடங்களில் தங்கியிருந்தனர். தற்போது அவர்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

தற்போது 347 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர் நாளுக்கு நாள மாணவர் தொகை அதிகரித்து வருகிறது - என்றார் அவர்.

அரசின் 100 மீற்றர் கடல்பாதுகாப்பு வலயம் என்ற நடவடிக்கையால் தமது காணிகள் பறிபோய்விடக்கூடும் என்ற அச்சம் காரணமாக மககள் மீள்குடியமர்வுப் பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-353-204)

## கிராம அலுவலர்களுக்கு உள்ளக இடமாற்றம்

கிளிநொச்சி,மார்ச்24

கிளிநொச்சி மாவட்டப் பிரதேச செயலர்களுக்குட்பட்ட கிராம சேவகர்களுக்கான உள்ளக இடமாற்றம் நடைபெற்றுவருகின்றது. இந்த மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேச செயலர்களுக்குட்பட்ட கிராமசேவகர்களுக்கே மேற்படி உள்ளக இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இடமாற்றங்கள் எதிர்வரும் ஏப்ரல் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-305)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

ஒட்டுசுட்டான்,மார்ச்24

பண்டாரவன்னியன் இளைஞர் கழகத்தால் நடத்தப்பட்ட தையல் பயிற்சியில் பயிற்சிகளை முடித்துக்கொண்ட 17 யுவதிகளுக்குச் சான்றிதழ வழங்கும் வைபவம் கடந்த 17ஆம் திகதி முல்லை மாவட்ட தேசிய இளைஞர்மன்ற அதிகாரி எஸ்.சண்முகவடிவேல் தலைமையில் நடைபெற்றது.

கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச சுடரினை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாஜினி கந்தையா ஏற்றி வைத்து, பயிற்சிபெற்ற 17 யுவதிகளுக்குச் சான்றிதழ்களையும் வழங்கினார். நிகழ்வில் அரச. அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஒ-341)

## தற்காலிகக் குடியிருப்பு அமைக்க உதவி

புதுக்குடியிருப்பு,மார்ச்.24

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேச ஆசிரியர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் தற்காலிகக் குடியிருப்புக்களை அமைக்க, கூரைவிரிப்பு மற்றும் தரைவிரிப்புகளை அண்மையில் வழங்கியது.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை ஊடாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இப்பொருள்கள் மூலம் தற்காலிகக் கொட்டகை ஒன்றினை அமைக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-353-204)

## YMCA Jaffna

**அங்கத்தவர்களுக்கான உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள்**

ESTD: 1890

- Badminton
- Chess
- Carrom
- Table Tennis

விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். போட்டிக்கான விண்ணப்பமுடிவு திகதி 31-03-2005 (மேலதிக விவரங்களை Y.M.C.A அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம்)

பொதுச்செயலாளர்,
**Y.M.C.A Jaffna.**

(சி.41615)(42-14)

## STUDY IN INDIA

**SPOT ADMISSIONS IN COLOMBO**

தராதரமுடைய மாணவர்களிற்கு இந்தியாவில் கல்வி கற்க உடனடி அனுமதி

**Colleges**

**Muthayammal** Engineering, Arts Science College
Affiliated to Anna University & Periyar University

Jaya Arts, Science, Dental & Engineering College
Affiliated to Anna & Madras University

Vivekanadha College of Arts & Science for Women
Affiliated to Periyar University

IEFT Engineering College
Affiliated to Anna University

Balaji Medical College
Affiliated to Pondicherry University

**Kaveri** Polytechnic College
Approved by Govt of India& Tamil Nadu

**Courses**

MBBS, Dental (BDS), ENGINEERING (computer Science, Electronics and Communication, Electronics and Instrumentations, Mechanical, Information Technology) B.Sc (Computer Technology, Information Technology) Biotechnology, Microbiology, Biochemistry, Genetics, B.C.A (Computer Applications), B.Com, BBM, BBA,
**(Eligibility : Passes in A/L)**

Diplomas : Civil, Mechanical, Electrical & Electronics, Computer Technology, Automobile Information Technology, Computer Technology, Chemical Engineering
**(Eligibility : Passes in O/L)**

**LOWEST FEES** **MERIT SCHOLARSHIPS** **FEES IN INSTALLMENTS**

Meet the Educational Counsellor and Admission Officer **from INDIA**
**Prof. Dr. A.K Natesan, PhD.**
Chairman - Sri Rengaswamy Educational Trust

**Dates** : 25th Friday & 26th Saturday, March 2005
**Time** : 10.00 am to 6.00 pm
**Vanue** : Scholars Information Center
2nd Floor, 'Colombo Plaza'
50, Galle, Road, Wellawathe, Colombo -06.

**2005 A/L Students could be admitted on pending results**

**Student Visa - பிரயாண ஒழுங்குகள் யாவும் செய்து தரப்படும்**

**Separate Hostels for Boys and Girls**

O/L சித்தியடைந்த மாணவர்கள் 6 வருடங்களில் பட்டதாரியாக வாய்ப்பு (A/L சித்தி தேவையில்லை)

For appointments
Call : 0777-767818 or 4513153


# பிரிவுபசார விழா

தென்மராட்சி,மார்ச் 24

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய க.பால சுப்பிரமணியம் தனது சேவையிலிருந்து இளைப் பாறியுள்ளார்.

இவரின் பிரிவுபசார விழா கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் நடத்தப்பட்டது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் தலைமையில் விழா நடைபெற்றது.

(ஓ-117)


## ஓவ்செட் மெசின் இயக்குநர் தேவை

ஓவ்செட் மெசின் (டேவிசன்) இயக்குநர். கொம்பியூட்டர் (கணனி) இயக்குநர். பைண்டர். ஸ்கீறீன் பிறின்டர் மற்றும் அச்சக வேலை பழக விரும்புபவர்களும் உடன்தேவை. நேரில்வரவும்.

**தயா அச்சகம்**
கொம்பியூட்டர் ஓவ்செட் பிறின்டேர்ஸ்
இல.138,நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(சி.41676)(42-14) T.P.: 021 222 2881

## பதவி வெற்றிடம்

பிரபல தனியார் நிறுவனமொன்றிற்கு, யாழ். மாவட்டத்திற்கான விற்பனைப் பிரதிநிதி ஒருவர் தேவை. பொருத்தமானவர்கள் கீழ் வரும் முகவரிக்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.
கல்வித் தகைமை: க.பொ.த. (சா/த.)
வயது எல்லை: 24 வருடங்கள்.
கீழ்வரும் முகவரிக்கு விற்பனையாளர் ஒருவரும் தேவை. (43430)(42-14)

**க.கு.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்**
318, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## நாயைக் காணவில்லை

பிறவுன் நிற பொமேரியன் (ஆண்) நாய் ஒன்று 20-03-2005 ஞாயிறுமுதல் காணாமற்போய்விட்டது. இதனைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல தரவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: **இ.முத்துலிங்கம்**
அம்மன் றோட்.
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
0776139202,
0776545116

(43426)
(46-42-14)

## பணிநிலைக்கான வேண்டுகை

அக்கராயன் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஆண்களுக்கான சந்தோசம் உளவளத்துணை நிலையத்திற்கு கீழ் வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தாங்கள் தன் வரலாறடங்கிய (சுயவிவரம்) வேண்டுகை, கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ் ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்விற்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணிநிலைகள்:**

01. நிர்வாக உத்தியோகத்தர்
02. கணக்காளர்
03. சுத்திகரிப்பாளர்
04. பராமரிப்பாளர்
05. சமையலாளர்
06. வெளிக்கள அலுவலர்

**கல்வித் தகைமைகள்:**

பணிநிலை 1: க.பொ.த. (உ/த) தேர்ச்சியடைந்திருப்பதுடன் அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

பணிநிலை 2: க.பொ.த. (உ/த) வணிகப்பிரிவில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை 3: ஆண்டு 08 கற்றிருப்பதுடன் பணிமுன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

பணிநிலை 4: ஆண்டு 10 கற்றிருப்பதுடன் பணிமுன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

பணிநிலை 5: சமையல் வேலையில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் வேலை செய்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

பணிநிலை 6: க.பொ.த. (சா/த) தேர்ச்சியடைந்திருப்பதுடன் அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 02 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்: 28-03-2005
திங்கட்கிழமை காலை 11 மணி

இடம்: **தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நடுவப்பணியகம்**
(கந்தசுவாமி கோயில் அருகில்). கிளிநொச்சி.

**ஆளணி நிர்வாகப் பகுதி,**
**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,**
**நடுவப்பணியகம், கிளிநொச்சி.**

(சி-41671)(26-14-42)


சிவமயம்
தேவிதுணை

# பருத்தித்துறை – வியாபாரி மூலை பழவத்தை
# அருள்மிகு ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தானம்
# தேர் உற்சவம் – 24-03-2005



*சிறப்பு நிகழ்வு* தெய்வீகச் சொற்பொழிவு
தலைப்பு "யாதுமாகி நின்றாய் காளி" செஞ்சொற்செல்வர் திரு. ஆறு.திருமுருகன் (பி.ப.7.00)

## ஆலய பிரதம குருவின் அருளாசிச் செய்தி

அகில லோக நாயகியாக வியாபித்து பருத்தி மாநகரின் வியாபாரி மூலைப் பதியில் பழவத்தை எனும் புண்ணிய ஷேத்திரத்தில் கோயில் கொண்டு வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈந்தருளுகின்ற காளியம்பாளின் வருடாந்த உற்சவத்தில் இரதோற்சவம் இன்று சிறப்பாக நடைபெறுகின்றது. ஆன்மாக்களிடம் இருக்கும் பாசங்களை நீக்குகின்ற தத்துவம் பொருந்திய இன்றைய உற்சவத்தில், அழகிய சிற்ப ரதத்தில் அம்பாள் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற காட்சியை நெஞ்சிலே பதித்து. எல்லாம் வல்ல காளிகாம்பாளின் திருவருளோடு கூடிய எனதுஅருளாசி கூறுவதில் நிறைவடைகின்றேன்.

*அம்பாள்பணியில் ஆலய குரு*
**ஸ்ரீலஸ்ரீ சபா ஸ்ரீராமதேசிகர்**
*(செல்லப்பா ஐயா).*

## மகோற்சவகால பிரதம குருவின் அருளாசிச் செய்தி


பண்பாட்டுச் சிறப்பினாலும், பக்தி மேம்பாட்டினாலும் உயர்வடையும் கிராமம் வியாபாரி மூலை பழவத்தை பதியாகும். இத்தகைய பதியில் பல்லாண்டு காலமாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை அருள்மிகு ஸ்ரீ காளியம்பாள் ஆகும்.

அன்னையின் அருளாசியால் தான் இவ்வுலகமே இயங்குகின்றது. அத்தகைய சக்திகளில் அவதரித்தவள் தான் காளியம்பாள். அவளுக்கு இன்று தேர்த்திருவிழாவாகும். அஞ்சபேன அபயமளித்து அழகிய ரதத்தில் ஆரோகணித்து, அடியவர்களுக்கு அருட்காட்சி அளிப்பதற்காகத் திருவீதி வலம் வருகின்றதேவியின் திருக்கோலம் காண, ஆயிரம் கண்கள் வேண்டும்.

தேர்த்திருவிழாவானது அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். எனவே, அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழித்து மீண்டும் துளிர்க்கா வண்ணம் வேரோடு பிடுங்கி எறிந்து வினை தீர்ப்பதே ஆகும். இன்றைய திருவிழா சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்

*"சர்வே யனகா சுகின்ணோ பவந்து"*

*சிவாகம கிரியா கலாநிதி. ஆகமக் கிரியா தத்துவரிதி*
**சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள்**
*(ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில்)*



## ஆலயத் தலைவர் அவர்களின் உரை

அன்னை காளியம்பாளின் திருவருள் பொழிவினாலேயே எல்லாக் கைங்கரியங்களும் நிகழ்ந்து வருகின்றன. நீண்ட நெடுங்காலமாக எமக்கும் பழவத்தை வாழ் மக்களுக்கும் காளியம்பாளின் அருட்கடாட்சம் கிடைத்திருக்கின்றது.

கிளுவை மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட காளியம்பாளின் அலங்கார உற்சவங்கள் வருடந்தோறும் பங்குனி உத்தர நன்னாளைத் தீர்த்தத் திருநாளாகக் கொண்டு. பத்துத் தினங்கள் வெகுவிமரிசையாகத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இன்று அழகிய சித்திரத் தேரில் அன்னை பவனி வரும் திருக்காட்சியை - அந்தக் கண்கொள்ளாக் காட்சியை - நாம் எல்லாம் கண்டு இன்புறுவோம் என்று சொல்லி எல்லோருக்கும் காளியம்பாளின் நல்லாசி பெருகவேண்டும்.

*"என் கடன் பணி செய்து கிடப்பதே"*

**பொ.சின்னையா**
*(கொண்டா ராசு)*
*பழவத்தை வியாபாரி மூலை,*
*பருத்தித்துறை.*

## திருவருள் பொழியும் ஸ்ரீ காளித்தாயே! சித்திரத் தேரேறி வருக! வருக!

பருத்தியெம்பதி வியாபாரி மூலை பழவத்தை பன்நெடுங்காலம் கிளுவை மரநிழலில் அமர்ந்து. திருவருள் பொழியும் ஸ்ரீகாளியம்மாவே சீர்மிகு கலைவளம் நிறைந்த சித்திரத்தேரேறி வருக!

ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த தாயே!
நோற்றார் மனதில் நினைத்ததை எல்லாம்
நொடியில் அளிப்பவள் நீயே!
கூற்றாம் வறுமையை கொண்டு செல்வத்தை
கொழிக்கச் செய்திடும் குயிலே!
மாற்றார் மனதில் மயக்கத்தை அறுத்து
மாற்றம் கொடுத்திடும் மயிலே தேரேறி வருக!

தார்மேவு மார்பன் சங்கரன் உடலில்
செம்பாதி தரித்த ஒளியே!
பார்மேவு இமயப் பனிமேவு மலையில்
பாங்காய் வளர்ந்த கிளியே!
நீர்மேவு நெடுங்கடலில் நீள்துயில் கொண்ட
நெடுமல் உடன்பிறந்த பின்னோய்!
சீர்மேவும் தலங்கள் ஆறில் நின்றருளும்
செல்வக் குமரன் அன்னோய் சித்திரத் தேரேறி வருக!

பங்கயத் தாள்நோக பகலிரவாய் நின்று
பரவு வோர்க்கு நல்லருள் புரிவாய்
மங்கையர் உனை வேண்ட பொங்கிடும் பொலிவுடன்
மனையெலாம் சிறந்திட அருள்வாய்
சிங்கத்தின் மீதமர்ந்து தெருவலம் நீவந்து
தீமைகள் அனைத்தையும் கொய்வாய்
சங்குகள் எறிகின்ற பருத்தி கடலருகமர்ந்து
சங்கடம் தீர்க்கின்ற தாயே சித்திரத் தேரேறி வருக!

**காரை. எம்.பி.அருளானந்தம்.**

காளி அம்பாளின் அருள் ஆசிவேண்டிப் பிரார்த்திக்கும்: **யோகாஸ் கிறீம் ஹவுஸ், அபிசன் எரிபொருள் நிரப்பு நிலையம்,**
**கந்த முருகேசனார் சிலையடி, மந்திகை.**

(43432)(42-14)

# பிறர் உழைப்பில் வாழும் நிலை இருக்கும்வரை

# பெண்கள் வருந்தியே ஆகவேண்டும்

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" என்றெல்லாம் கவிஞர்கள் பாடினார்கள். ஆனால், 'விடியற்காலைப் பனியழகு, விடியும்வரை பெண்ணழகு' என்றும் 'ஏழு மணிக்கு மேலே நீயும் இன்பலட்சுமி' என்றும் பெண்ணை ஜடப்பொருளுக்கு இன்று உவமிக்கிறார்கள்.

ஆனால், நமது பைந்தமிழ் நாட்டுப் பாவையர், சங்க காலத்திற்கு முன்னரே நாட்டின் திலகமாகத் திகழ்ந்தனர். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தில் அறிவுரை வழங்கும் ஆற்றல் வாய்ந்த அருங்குணக்குன்றாக அழகு சேர்த்தனர். போரைத் தவிர்க்கும் புலவர் மணிகளாக ஒளி வீசினர். அன்பின் இருப்பிடமாக, அறம் வளர்க்கும் நிலையமாக வீடு விளக்கமடைந்தது, வாழ்க்கைத்துணை நலத்தின் வலிமையால், ஆண்கள் ஏறுநடை போடும் ஏந்தல்களாக ஏற்றம் பெற்றனர்.

இடைக்காலத்திலோ பாவையர் கல்வியும் உரிமையும் இல்லாத ஏதுவால் இருளிலே தவித்தார்கள். படிப்பது பாவம் என்னும் அலையால் சமுதாயத்தில் கடைநிலைக்குத் தள்ளப்பட்டார்கள். "பெண்களுக்கு எதைக் கொடுத்தாலும் கொடு; கல்வியறிவை மட்டும் கொடுத்து விடாதே" என்னும் கயடர்கள் மொழியால் குருடாக்கப்பட்டார்கள். இல்லத்தை ஆண்டு எழில் சேர்த்தவர்கள் இடர்க்கடலிலே மிதந்தார்கள். இல்லறச் சிறைகளிலே ஏங்கித் தவித்தார்கள். ஆண்களின் வேலைக்காரியாக, கட்டிலறைப் பதுமைகளாக மாற்றப்பட்டு, வேதனைத் தீயில் கருகினார்கள். தாய்மொழி பேணிய தங்கம் நிகர் வனிதையர் தாய்மொழியின் அருமை அறியாத பேதைகளாயினர். இன்றோ வெள்ளையர் ஆட்சியாலும் விடுதலை பெற்றமையாலும் கல்விக் கண்பெற்று "தொட்டிலை ஆட்டும் கை தொல் உலகை ஆளும் கை" என்ற வகையில் இன்று மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் ஆண், பெண் சமூக நிலையும் பெண்களுக்கு வழங்கப்படும் சமூக அந்தஸ்தும், உரிமையும் பற்றி நோக்க வேண்டிய தேவையுள்ளது. சமூகம் என்பது ஆண, பெண் எனும் இருபாலாரையும் கொண்டதாகும். உலக சனத்தொகைத் தரவுகளின்படி ஆண்களும பெண்களும் ஏறத்தாழ சம அளவிலேயே காணப்படுகின்றனர். மனித உரிமைகள் பற்றி நோக்கும்போது ஆண்களுக்கு நிகராகப் பெணகளும் இருக்கவேண்டும். ஆயினும், உலகின் பல நாடுகளில் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் ஆண்கள் பெண்களைவிடச் சமூக அந்தஸ்து உரிமைகள் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இங்ஙனம் பெண்கள் அந்தஸ்துக் குறைந்த நிலையில் காணப்படுவதற்குத் திருமணம் செய்தல், கல்வியைப் பெறல், ஓய்வு பெறல், பொழுதுபோக்குகளில் ஈடுபடல், தீர்மானம் எடுத்தல், குழந்தைகளைப் பராமரித்தல், போசனை மட்டம், பாலியல் உறவு, மரபுகள், சம்பிரதாயங்கள், உடல் வலிமை போன்ற காரணிகள் காரணமாக உள்ளன.

உலகில் பெண்களுக்குள்ள அந்தஸ்து வழங்கபட்டுள்ளதா என நோக்கின் உலகில் வேலை செய்யும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களாவர். உலகின் பல நாடுகளில் நீரைப்பெறப் பல மைல் தூரம் செல்லும் தன்மையினால் துன்றுபவர்கள் பெண்களாவர். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சிறுமிகளே, சிறுவர்களைவிட அதிகம் மந்த போசனையால் பாதிக்கப்படுபவர்கள். உலகில் ஆண்கள் பெறும் ஊதியத்தைவிட பெண்கள் பெறும் ஊதியம் 30-40 சதவீதத்தால் குறைவானது. உலகில் எழுத்தறிவின்மையில் இரண்டு ஆண்களுக்கு மூன்று பெண்கள் என்கிற விகிதத்தில் காணப்படுகின்றனர்.

தீமானம் எடுப்பதில் ஆண்களுக்கே அதிக உரிமை காணப்படுகிறது. பெரும்பாலும் பெண்கள் அன்றாட நடவடிக்கைகளில் பாரிய பொறுப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆண்களுக்குப் பொருளாதார ரீதியாக உதவுதல், குடும்பப் பிரச்சினைகளைக் கவனித்தல் எனப் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பாரிய பொறுப்புக்களைச் சுமப்பவர்கள் பெண்களாகவே விளங்குகின்றனர். "எனக்கென்றால் வானத்துககுப் போனாலும் சுதந்திரம் இல்லை" எனப் பெண்கள் ஆதங்கப்படுவது அவர்களது மன நிலையை விளங்க வைக்கின்றது. வாழ்வுக்கு உயிரோட்டத்தையும் உலகுக்கு உறுதியினையும் தருவதில் ஆண்களுடன் சரிசம நிலையில் காணப்படுபவர்கள் பெண்களாவர். அவர்களுக்குச் சகல உரிமைகளையும் வழங்குதல் வேண்டும். எனவேதான் "மார்க்ஸிம் கோர்க்கி" என்ற அறிஞர் "உலகிற்கும் சகலதிற்கும் உணர்வினை அளிப்பது சூரிய ஒளியும் அம்மாவும் ஆகும்" என்று திறம்படக் கூறியுள்ளார்.

விளம்பரத்துறையில் பெண் ஒரு கவர்ச்சிப் பண்டமாகக் கையாளப்படுகின்றாள். எமது கீழைத தேசப் பாரம்பரியத்திற்கும் பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் ஒவ்வாத வகையில் பெண்குலத்தையே அவமானப்படுத்தும் வகையில் பெண்




கள் கவர்ச்சிப் பண்டமாகப் பயன்படுத்தப்படுகின்றனர். நுகர்வுப் பொருளாதாரத் துறையையும் விளம்பரத்துறையையும் சார்ந்த பெரும்பாலான நவீன துச்சாதனர்கள் தங்களது விளம்பரங்களில் பெண்களை மையமாகப் பயன்படுத்தி 'துகிலுரி' படலத்தையும் நடத்தி வருகின்றனர்.

பெண்குலத்தையே அவமானப்படுத்துகின்ற சீர்கெட்ட செயலைத் தட்டிக்கேட்க எவருமே முன் வருவதில்லை. நுகர்வுப் பொருளாதார விளம்பரத்துறையில் ஆதிக்கம் செலுததுபவர்கள் ஆண்களே. இவர்கள்தான் பெண்களை விளம்பரங்களில் வியாபாரப் பண்டமாகப் பாவிக்கின்றனர். அது மாத்திரமல்ல கலாசாரத்தின் பிரதான அம்சமான கலை இலக்கியத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் மற்றும் ஒலி, ஒளிபரப்பு ஊடகங்களிலும் ஆண்களின் மேலாதிக்கத்தைக் காணலாம். அது மாத்திரமலல இலக்கியப் படைப்புக்களில் பெரும்பாலானவற்றில் பெண் பாத்திரங்கள் மலினப்படுத்தப்பட்டுக் காணக்கிடக்கின்றன. இந்த அசமத்துவப்போக்கு எமது கலை இலக்கியத் துறையின் வளர்ச்சிக்குக் குந்தகமாயுள்ளதோடு பெண்குலத்தையும் அவமானப்படுத்துவதாகவும் உள்ளது. இந்நிலை விரைவில் மாற்றப்படல் வேண்டும்.

இதனிடையே சீதனம் என்றொரு வடம் பெண்ணினது இல்வாழ்க்கையை இறுகக்கட்டியுள்ளது. பெண் வளர்கின்றபோதே சீதனப் பணமும் வளரவேண்டும். இல்லையேல் பெற்றவர்கள் மனதில் ஏக்கமும், கவலையுமே வளர்கின்றன. பெண் எவ்வளவிற்குக் கூடக்கூடக் கற்று உயர்பதவிகளை அடைகிறாளோ அதேயளவிறகுச் சீதனமும் அதிகமாகவே தேவைப்படுகின்றது. எனவே, எல்லோரையும் சஞ்சலத்திற்கும் கவலைக்கும் உள்ளாக்கும் இந்த சீதனத்திற்குக் காரணம் யார் என்று சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திக்கும்போது நாம் ஒவ்வொருவரும் நம்மையறிந்தோ, அறியாமலோ காரணமாய் இருக்கின்றோம் என்ற உண்மை புரியும்.

ஒரு பெண் மணப்பெண் என்னும் பாத்திரமாக இருக்கும்போது சீதனம் இல்லாததால் என் வாழ்வு மலரவில்லையே என்று ஏங்குகிறாள். அதேவேளை அப்பெண்ணைத் தாய் என்னும் பாத்திரமாகப் பார்க்கும்போது சீதனக் கொடுமையால் என் பெண்ணை வாழவைக்க முடியவில்லையே எனத் திட்டுகிறாள். அதே பெண் மகனின் தாய் என்னும் பாத்திரமாக இருக்கும்போது தன் மகனுக்கு உச்சமான சீதனத்தை எதிர்பார்க்கிறாள்.

எனவே, ஒரு பெண் மணப்பெண்ணாக, தாயாக, மாமியாக வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு மனக்கோலம் உடையவளாக இருப்பது பிரத்தியட்சம். ஆதலால், பெண்ணினம் முழுவதுமே சீதனத்தை வெறுக்கிறார்கள் என்ற முடிவுக்கு வருவது கடினம். இதே போன்றதுதான் ஆணின் நிலையும். ஆணும் மணமகனாக இருக்கும் போதும் மணமகனின் தந்தையாக இருக்கும் போதும் சீதனத்தை விரும்புகிறார். மணப்பெண்ணின் சகோதரனாகவும் பெண்ணின் தந்தையாகவும் இருக்கும் போது சீதனத்தை வெறுக்கிறார்.


ஒருவர் வெவ்வேறு பாத்திரங்களை ஏற்கும் போது வெவ்வேறு குணாதிசயங்கள் உடையவராக இருக்கும் நிலையே சீதனத்தைப் பிரச்சினைக்குரியதாகவும், சிக்கலானதாகவும் ஆக்குகின்றது என்னும் உண்மையை மறுக்க முடியாது. அப்படியாயின் இதற்கு என்ன தீர்வு? தீர்வு காணவேண்டியவர்கள் யார்? என்ற வினாக்கள் முன்வைக்கப்படுகின்றன. அரசுதான் சட்டம் கொண்டு வந்து தீர்வு காணவேண்டுமென ஒரு சாரார் கூறுகின்றனர்.

ச.கம்சினி
சுன்னாகம்.

அரசு சட்டங்கள், சட்டத் திருத்தங்கள் பல கொண்டு வந்தும் இதில் வெற்றி காணவில்லை. எனவே இவை எல்லாவற்றையும்விட எங் கள் ஒவ்வொருவர் மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையுடன் தத்தம் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வாழ்வை அமைத்து, தலைநிமிர்ந்து வாழ முன்வரவேண்டும்.

மற்றவரைப்போல நானும் வாழவேண்டும் எனும் போலி வாழ்வைக் கைவிட்டு "நான் எனக்கென்ற வாழ்வை அமைப் பேன்" எனும் உறுதியும் செயற்திறனும் எம்மிடம் குடிகொள்ளவேண்டும். சீதனத்தை நம்புவதை விட்டு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நம்பவேண்டும். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தம் தகுதிக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையுடன் வாழ முன்வர வேண்டும். தகுதி என்பது பணமோ பொருளோ அல்ல அவரவர் அறிவு, திறன், மனப்பாங்கு என்பனதான்.

முன்னோர் தேடிவைத்த பொருள்தான் தஞ்சம் என்பதை மறந்து சொந்த உழைப்பில் "உழைப்பே உயர்வு தரும்" எனும் கோட்பாட்டில் "உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழ்தல் கூடாது" எனும் மனப்பாங்கு என்று நம் சமூகத்தில் மலர்கின்றதோ அன்று தான் பெண்களின் சீதனப்பிரச்சினை தீரும். பிறர் உழைப்பில் வாழும் போலி வாழ்வு இருக்கும் வரை பெண்ணினம் வருந்த வேண்டியே இருக்கும். ஆணினம் பழிகேட்க வேண்டியே இருக்கும். ☆



## சந்தியாவின் கடிதங்கள்

**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

இன்று ஒரு வித்தியாசமான அனுபவத்தினின்று எழுதுகின்றேன். நானே ஒரு பிரச்சினையை அனுபவித்து நானே அதற்குத் தீர்வும் கண்டு எழுதுகின்றேன்.

உனக்கும் பிரச்சினையா என்று நீ கேட்பது எனக்குப் புரிகின்றது. பிரச்சினையில்லாத மனிதர்களே இல்லை. ஆனால், அந்தப் பிரச்சினையின் வடிவமே ஆளுக்குஆள் மாறுபடுகின்றது. அதன் தாக்கமும் வித்தியாசப்படுகின்றது.

உனக்கு என்ன பிரச்சினை என்று தானே யோசிக்கின்றாய்?

எனக்கு நானே பிரச்சினையாக உள்ளேன். ஆம், என் உள்ளுறவே என் பிரச்சினைக்குக் காரணமாய் அமைந்தது.

'உள்ளுறவு' அதுதான் எம்மை வழிநடத்தும் ஆசான், மனதை அமைதிப்படுத்தும் கோயில், நாம் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது என்று வழிகாட்டும் வழிகாட்டி.

இந்த உள்ளுணர்வின் குழப்பத்திலேயே நம் வாழ்வும் வழியும் திசை மாறிவிடுகின்றன.

உதாரணமாக, எனக்கு யாரும் துரோகம் செய்யக்கூடாதென எண்ணுவேன். ஒரு சிறு பொய் என்னிடம் - நான் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் - சொல்லக்கூடாதென எண்ணுவேன். மாறாக நடந்தால் அதை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியாது.

அதேபோல் தாழ்வு மனப்பான்மையும் என்னிடம் அதிகம் உள்ளது. இதனால், நான் இழந்தவை ஏராளம், இழந்தவர்களும் ஏராளம் பேர்.

ஏன் எனக்குத் தாழ்வு மனப்பர்ன்மை என்று சிந்தித்துப் பார்த்தேன். என்னைப் பற்றி நானே முழுமையாக அறிந்து கொள்ளாமையே என்பதைப் புரிந்துகொண்டேன்.

உண்மைதான், நமது புத்திசாலித்தனத்தைப் பற்றி, திறமையைப் பற்றி, நமது தன்மையைப் பற்றி நமக்கே சந்தேகம். அது மட்டுமா? மற்றவர்களைப் பார்க்கும்போது - மற்றவர்களிடம் எவ்வித திறனும் இல்லாவிடினும் - உயர்வாக மதிப்பிட்டு நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளும்போது தன்னம்பிக்கை நம்மிலிருந்து விலகித் தாழ்வு மனப்பான்மை தோற்றம் பெறுகின்றது. இந்த மனப்பாதிப்புகளே எம்வாழ்வையும் பாதிப்படையச் செய்கின்றன.

இதுவே என் வாழ்விலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. மற்றவர்களை என்னுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அவர்களை (மற்றவர்கள்) உயர்வாக மதிப்பிட்டு என்னை நானே தாழ்த்திக் கொண்டேன். இந்தத் தாழ்வு மனப்பான்மை என்னில் தோற்றம் பெற்றதும் என்னால் எந்தவித முன்னேற்ற காரியங்களிலும் ஈடுபடமுடியவில்லை.

எதை எடுத்தாலும் என்னால் இதைச் செய்யமுடியாது என்ற எண்ணமே என்னில் தோன்றும். இது நாளடையில் என்னை இயலாதவளாக ஆக்கியது.

ஆனால், நான் என் உள்ளுறவை ஆராய்ந்தேன். எனக்குள் நானே ஆராய்ச்சி செய்தேன். ஏனெனில், உள்ளுறவே என் தாழ்வு மனப்பான்மைக்குக் காரணம்.

நமது ஆழ்மனதில் நம்மைப் பற்றிய சில எண்ணங்கள் ஆழமாக வேரூன்றி அதுவே நம்பகத் தன்மையாக மாறிவிடுகின்றன. அது நம்பிக்கையூட்டுவதாக இருக்குமானால் அது நமது வாழ்வைக் கட்டியெழுப்பும் தூணாக அமையும்.

ஆனால், அது என்னால் முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவித்தால் எம் வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடையாக மாறிவிடும்.

இதற்கு நான் கண்ட பரிகாரம்.... அடுத்த கடிதத்தில் எதிர்பார்!

24-03-2005

பிரியமுடன் சந்தியா.

## சந்தியாவின் கடிதத்திற்கு பிரியாவின் பதில்

பிரியமுள்ள சந்தியாவிற்கு,

கடைசியாக நீ எழுதிய கடிதத்தில் பெண்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பாகவும் அவை எவ்வாறு? எப்படி? ஏற்படுகின்றன எனவும் அவற்றைத் தீர்ப்பதற்கான சட்டதிட்டங்களை நாம் அறிந்திருக்கவேண்டும் எனவும் எழுதியிருந்தாய்.

உண்மைதான் சந்தியா, எமக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை நாம் அறிந்திருக்கத்தான் வேண்டும். அவற்றை அறிந்திருக்கும்போது எமக்கு ஏற்படும் பிரச்சினையில் இருந்து நாம் விடுபட்டுக் கொள்ளமுடியும். அது மட்டுமல்லாமல் அப்படியான பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கவும் முடியும்.

ஒரு சமூகத்தில் பெண்ணுக்கு எத்தனையோ பிரச்சினைகள் வருகின்றன. ஆனால், சில பெண்களின் அறியாமை காரணமாக பிழை செய்தவர்களுக்கு அதாவது துன்பத்தை ஏற்படுத்தியவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்காமல் போய்விடுகின்றது. இந்த இடத்தில்தான் (அறியாமையால்) பெண்கள் பெரிய தவறுகளைச் செய்கின்றனர்.

அவை என்னவெனில் தமக்கு இழைக்கப்பட்ட துன்பங்களையும், துன்பங்களைச் செய்தவர்களையும் பெண்கள் வெளிக்காட்ட மறுக்கின்றனர். தனக்கு இழைக்கப்பட்ட துன்பங்களை வெளியே சொல்வதனால், மேலும் மேலும் தான் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிவரும் அதனைவிட்டு பேசாமல் இருந்துவிட்டால் ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது தானே. எனது துன்பம் எனக்குள்ளேயே போய்விடும் – என்றும் நினைத்துச் செயற்படுகின்றார்கள்.

இந்த இடத்தைத் துன்பமிழைப்பவர்கள் தமக்குரிய தகுந்த சந்தர்ப்பம் எனப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதன் [illegible] என்ன தெரியுமா? முதலில் பாதிக்கப்பட்டவர்களைப் போல இன்னும் எத்தனையோ பேர் பாதிப்படைகின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் பெண்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் வீதிகளிலோ, வீடுகளிலோ எங்கேயாவது பெண்களுக்கான துஷ்பிரயோகங்கள் இழைக்கப்படுமிடத்து அவர்கள் தயங்காது அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும். இதன் மூலம் மேலும் மேலும் எத்தனையோ பெண்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கமுடியும்.

இந்த நிலை – இந்த உறுதிப்பாடு – எமது பெண்களிடையே வருமானால் எதிர்காலத்தில் ஒரு சிறந்த சமுதாயம் உருவாகும் என்பதில் எந்தவிதமான சந்தேகங்களும் இல்லை.

எனது கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்கள் பதில் அனுப்பலாம் அல்லவா சந்தியா.

23-03-2005

– பிரியமுடன் பிரியா.

# யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை ஸ்ரீமத் வா...

# பஞ்சரதப் பவனிச் சிறப்பு...



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



**வ**ண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. பிறவிப் பெருநோயை நீக்கவல்ல வைத்தியநாதனாக விளங்கும் எம்பெருமான் இங்கு வீதிவலம் வரும்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

தம்மை வழிபடுகின்ற அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் நீக்கியருளும் வண்ணை சிவன் இன்று பஞ்சரதங்களில் பவனி வந்து அடியார்களுக்கு அருட்காட்சி நல்குகின்றார்.

இங்கு வீற்றிருக்கும் ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் அருமையும் பெருமையும் சொல்லில் அடங்காது இங்கே மும்முறை வலம் வந்து ஆலய தரிசனம் செய்தால் முன்னைய ஊழ் வினைகள் யாவும் அழிந்தொழிந்து அற்றுப் போய்விடும் நோய் தீர்க்கும் வைத்தியநாதனாக விளங்கும் சர்வேஸ்வரனாகிய எம்பெருமான் பிறவிப் பிணிய கற்றும் பிரானாக இங்கு எழுந்தருளி வீற்றிருந்து அருள்புரிகின்றார்.

அவருடைய அருட்பார்வைக்குள் அகப்பட்டு பிணி நீங்கிய அடியார்களின் எண்ணிக்கை அளவிடற்கரியாது. அருட்பெருஞ் சோதியாக விளங்குகின்ற தனிப்பெருங் கருணை வடிவினனான பெருமான் ஒளிவடிவாக பிரகாசிப்பது தனியான ஓர் அம்சமாகும்.

மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தல்த் தொழிலைக் குறிப்பதாகும். ஸ்ரீ நடராஜப் பெருமான் தில்லைத் திருத்தாண்டவமாடி பஞ்சகிருத்தியங்களையும் செய்கின்றார்.

பஞ்சரதப் பவனியும் தேர்த்திருவிழாவாக அழித்தலையே குறித்து நிற்கிறது வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்களைக் களையும் பொருட்டு எம் பெருமான் சித்திரத் தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு காட்சி நல்குவதே அரும் பெருங்காட்சியாகும்

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் யாழ்ப்பாணத்தின் மத்தியிலே பெரியகடையில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்று விசேடங்களும் ஒருங்கமையப் பெற்ற இந்த ஆலயத்தில் பங்குனி உத்தர நன்னாளில் தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது.

இந்த ஆலயத்தில் நாளை நடைபெறவுள்ள தீர்த்தோற்சவம் தரிசித்தால் பாவங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல அகன்றுவிடும். இன்றைய ரதோற்சவ புனித நாளில் அடியார்கள் புதுவாழ்வு பெற்று சீருஞ் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல பெருமானைப் பணிந்து ஏத்தி வழிபட்டுப் போற்றி செய்வோம் என உளமாரப் பிரார்த்தித்து ஆசிவழங்குகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹாசந்நிதானம், நல்லை ஆதீனம்,**

### காப்பாற்றிடுவாய் ஐயனே!

*வாலாம்பிகை நாயகரே வண்ணை வைத்தீஸ்வரரே*
*வரமருளவேண்டும் வந்தனை செய்தோமே*
*ஆலாலமுண்ட நீலகண்டரே ஆதிபராசக்தி நாயகரே*
*ஆனைமுகனும் ஆறுமுகனும் அருகே அமர்ந்துவர*
*கோலாகலமாய் விழாக்காணும் கோடானுகோடி பக்தர்கள்*
*கூட்டுப்பிரார்த்தனை செய்து கூடிப்பாடிவர*
*காலாலுன் திருக்கோயில் கடிதேவலம் வந்து*
*கைதொழுதே நின்றோம் காப்பாற்றிடுவாய் ஐயனே!*

**தேவார இசைமணி . ஆர்.திருஞானசம்பந்தன்.**



### வண்ணை வைத்தீஸ்வர...

**வண்ணை வைத்தீஸ்வரரும் வாழ்தைய லாம்பிகை...**
**அன்பரிடர் தீர்க்கவே - கண்ணாம்**
**அழகான தேரில மர்ந்தே யருளும்**
**நிழலாய்-வலம்வருவார் நேர்ந்து.**

**முதுபெரும்புலவர்...**


அசல் 22 கரட் அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு சிறந்த இடம்:
**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6972.
021 222 2480.

தரமான பொருள்களுக்கு தவறாமல் நாடுங்கள்
**முத்து விநாயகர் பல்பொருள் வாணிபம்**
இல.418, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6126

நவநாகரிக நங்கையர்கள் நாடும் இடம்:
**பிரணகா நகைத் தொழிலகம்**
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.
68/A, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

அழகு சாதனங்கள், விளையாட்டுப் பொருள்கள், ...சாலை உபகரணங்கள் விற்பனையாளர்
**லக்ஷ்மணா சென்ரர்**
இல.381, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கநகைகளுக்கு தரம்மிக்கோர் தவறாமல் நாடுமிடம்மிகப் பழைமை வாய்ந்த நம்பிக்கையான ஸ்தாபனம்
**பொ.அம்பலவாணர் நகை மாளிகை**
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்.
தொ.பே.: 2264

**மற்றா தளபாட நிலையம்**
(குசன் செற்றிகள் திருத்தி மீள் குசன் அமைத்துக் கொடுப்பவர்கள்)
இல.395 (233), கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

புதிய நவீன டிசைன்களினாலான தங்கநகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்
**நியூ நிறைஞ்சனாஸ் நகை மாளிகை**
83/1, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 071 2270458, 077 607 0679.

பலசரக்கு மற்றும் மிக்ஷர் தயாரிக்கும் பொருள்கள் ...த்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு
**ஜெகன் களஞ்சியம்**
இல.285, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 5035

சுகாதார முறைப்படி நாவினிக்கும் வகையில் தரமான, சுவையான பண்டங்களைத் தயாரித்து என்றென்றும் தந்திடும்
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

உங்களுக்கேற்ற அழகிய மூக்குக் கண்ணாடிகளுக்கும் நீங்கள் கட்டிக்கொள்ள முத்துப் போன்ற வெண்பற்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்
**THUSHA**
Opticians & Dental Works
544, Hospital Rd, Jaffna.
021 222 3461

நவநாகரிக மணிகள் நம்பிக்கையுடன் நாடுமிடம்
**நிஷானந்தா ஜுவல்லறி**
75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே. 0777 7327 02

**சிவன் மோட்டார் ஸ்...**
**SIVAN MOTOR ST...**
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்...
தொ.பே.: 021 222 27...

**V.S.P.**
நல்லதரமான ஸ்பெஷல் நல்லெண்ணெய் விற்பனையாளர்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மூலிகைகளாலான மருந்து வகைகளுக்கும் எண்ணெய் வகைகளுக்கும் மற்றும் பொருள்களுக்கும் நாடுங்கள்:
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2567

**தேர்த் திருவி...**
**சிறப்புற வாழ்த்த...**

கண்ணாடி வகைகள், அலுமினியத் தகடு வகைகள், ஒட்டுப்பலகை வகைகள், போர்மிகா சீட் வகைகள், ...டு வகைகள், நிலவிரிப்பு வகைகள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
**ஜெசீமா பிக்சர் பலஸ்**
302, 304, 308, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3124

அழகுக்கு அழகு தரும் நவநாகரிக ஆடைகளுக்கு நம்பகமான ஸ்தாபனம்
**காவேரி சில்க்ஸ்**
அழகுமிக்க காவேரிக்கு விஜயஞ்செய்யுங்கள்
இல.48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2333

**டாட் என்ரப் பிரை...**
(அன்பளிப்பு, அழகுசாதன, இலத்திரனிய... விற்பனையாளர்)
இல.11, 12, நவீன சந்தை (...
யாழ்ப்பாணம். தொ.பே.: 309...
பிரத்தியேக ...
இல.2, நவீன சந்தை (மே...
மக்கள் வங்கிக்கு அருகில், யா...

எழிலுறு தரமான அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
**சிறி மதனா நகை மாளிகை**
155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7772, 0777 300185
**மதனா ஜுவல்லறி**
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5526

W

# ந் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரன் கோயில்
# ப்பு மலர்-24.03.2005





## அஞ்சேலென அபயமளித்திடும் சிவனின் பஞ்சரத பவனி காண வாரீர்!
## பிறவிப் பிணி தீர்க்கும் வைத்தீஸ்வரப் பெருமான் இன்று தேரேறி ஆரோகணிக்கின்றார்

**வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் தேர்த்திருவிழா இன்றாகும். சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த ஆலயம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் பெரிய கடையின் மத்தியிலே அமைந்துள்ளது. வானளாவ உயர்ந்த இராஜ கோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சி தரும் இந்த ஆலயம் வைத்திலிங்கச் செட்டியார் பரம்பரையி னரால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.**

### பஞ்ச ரதங்களில் பஞ்சமூர்த்திகள்

சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களெனப் போற்றிப் பாதுகாத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இந்த ஆலயத்தில் தான், தனது கதாப்பிரசங்கத்தை ஆரம்பித்தார் என்று வரலாறு பகர்கின்றது. சைவத் தமிழ்மக்களின் பாரம்பரிய ஆதிகோயிலான இந்தக் கோயிலில் இன்று பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி ரதங்களில் ஆரோகணிப்பர்.

விக்கினந் தீர்க்கின்ற விநாயகப் பெருமான் முதல் தேரிலும் ஸ்ரீவள்ளி தேவசேனாபதியாக முருகன் இரண்டாவது தேரிலும் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் பாலமுருகனுடன் சோமாஸ்கந்த மூர்த்தமாக மூன்றாவது தேரிலும் தையல் நாயகி அம்பிகை நான்காவது தேரிலும் சண்டிகேஸ்வரர் ஐந்தாவது தேரிலுமாகப் பஞ்சரதங்கள் இன்று பவனிவருகின்றன.

### அருள்காட்சியில் அழகே தனி

தம்மை வழிபடுகின்ற அடியார்களின் துன்பதுயரங்களை நீக்குமுகமாக எம் பெருமான் தேரேறி வந்து அருட்காட்சி நல்கும் அழகே தனி. வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத் தேர்வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்தில் மிக்க நல்ல ஓர் இடம் பிடிக்கலாம் என்பது அடியார்களின் நம்பிக்கை.

இன்று காலை 9.00 மணியளவில் புறப்படும் பஞ்சரதப் பவனி வீதிவலம் வந்து இருப்பிடத்தை அடைய பிற்பகல் 1.00 மணியாகும். ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து ஐந்து ரதங்களையும் அழகுற இழுத்து வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இதைக் காண்பதற்குப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

### நோய் தீர்க்கும் வைத்தியர்

உடம்புக்கு வருகின்ற நோயைத் தீர்ப்பவர் வைத்தியவராவார். அதே போன்று எமது உள்ளத்துக்கு வருகின்ற பிறவியாகிய நோயைத் தீர்ப்பவர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரனேயாவார் அவர்தான் மகா வைத்தியர்.

ஆகவே, இன்றைய தேர்த்திருநாளில் பரங்கருணைத் தடங் கடலாக விளங்குகின்ற பரமேஸ்வரன் சக்தியாக வாலாம்பிகையுடன் வைத்தீஸ்வரனாக எழுந்தருளி அருள்புரிகின்ற தன்மை அளவிடற்கரியது. அடியவர்களாகிய நாம் எல்லோரும் ஒருங்கே சேர்ந்து ஒப்பிலாமணியாக விளங்குகின்ற எல்லாம் வல்ல குருவான பரமபிதாவை வழிபட்டு சதுர்வித புருஷார்த்தங்களைப் பெற்று உய்வோமாக.



**சிவநெறிக் கலாநிதி,**
**இராசையா ஸ்ரீதரன்**



### த்தீஸ்வரர் தேர்

மதய லாம்பிகையும் எண்ணிறைந்த

ம்

புபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம்


நவீன தங்கப் பவுண் நகைகளுக்குச் சிறந்த இடம்:
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5511

உங்களுக்குத் தேவையான மருந்துவகைகளைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்:
பிரபா பார்மஸி
இல.315, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரையடி), ஆரியகுளம் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்

சிறந்த அழகிய தங்கநகைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்
துர்க்கா நகைப் பூங்கா
71, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 2228

தரமான பாடல் பதிவுகளுக்கு சிறந்த இடம்
மார்க்கோனி மியூசிக் சென்றர் எலக்ரோனிக்ஸ்
இல.292, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்குத் தவறாமல் நாடுங்கள்:
சுவிஸ்லோ நகைத் தொழிலகம்
44/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 917579, 0777 917578

ாட்டார் ஸ்ரோர்ஸ்
MOTOR STORES
பாய் வீதி, யாழ்ப்பாணம்
.: 021 222 2763

உத்தரவாதம் மிக்க நவீன அழகிய தங்கப் பவுண் நகைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்
சிறிசிவாஞ்சனா நகையகம்
149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5481

சிறந்த நவீன வடிவமைப்பிலான மூக்குக் கண்ணாடி வகைகளுக்கு நாடுங்கள்:
எரிக் கணேஸ்
ERIC GANESH OPTICIANS
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2486

JASO (PVT) Ltd
35, Kannathiddy Road, Jaffna.
T.P:- 0777 110610.

ந் திருவிழா
வாழ்த்துவோர்

யமஹா பிளாஸா
298, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 4590 200

அன்பளிப்புப் பொருள்களுக்கு சிறந்த இடம்:
கணேசா மல்ரி பலஸ்
357, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7599

நவீன பாணியிலமைந்த தங்கநகைகளுக்கு நாடுங்கள்:
செல்வி நகை அகம்
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ன்ரப் பிறைஸ்
தன, இலத்திரனியல் சாமான்கள்
நவீன சந்தை (உட்புறம்)
ம்.தொ.பே.: 3098. 7622.
யேசுக் காரியறை
வீன சந்தை (மேல்மாடி)
க்கு அருகில், யாழ்ப்பாணம்

புடைவைத் திணுசுகள், கூறைச் சேலைகள், பஞ்சாபி, ஸ்கேட் அன் பிளவுஸ், சேட்டிங் சூட்டிங், T சேட், டெனிம் ஜீன்ஸ், சேட் (ரெடிமேட்) மற்றும் அனைத்து வகையான ஆடைத் தெரிவுகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
இல.27, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

தரமான பொருள்களுக்கு தவறாமல் நாடுங்கள்
VENE STORES
Wholsale and Retail Dealers
165, K.K.S. Rd., Jaffna.
022 2661, 022 2046

உங்கள் கடைச்சல் வேலைகளைச் சிறந்த முறையில் செய்துபெற்றுக்கொள்ள நாடுங்கள்:
யாழ். வைரவி கடைச்சல் தொழிலகம்
(உரிமையாளர், V.ரூபன்)
சிவன் கோயிலடி
445, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company
RG இரத்தினகோபால்ஸ்
65, 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
0777 340056, 021 222 6185

ருசிமிக்க உணவு வகைகளுக்குச் சிறந்த இடம்:
ஸ்ரீ வாணி விலாஸ்
(சைவ உணவகம்)
இல.372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.071 2370211
இல.144, கண்டி வீதி, வவுனியா
024 4589777

# முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் ஓட்டமாவடியில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, ஓட்டமாவடியிலுள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை இரவு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நகைக்கடை வர்த்தகரான சேகு லெப்பை ராசீக் (வயது 48) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாராவார.

இந்தச் சம்பவத்தின்போது அவரது 18 வயது மகள் காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி வாழைசசேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது வீட்டிற்கு வந்த மூன்று முகமூடியணிந்த ஆயுத பாணிகள் அவரது பெயர் குறிப்பிட்டு அழைத்தவாறு உள்ளே நுழைந்து சமையலறையில் சாப்பிட்டுக்கொண்டிருந்த வர்த்தகரின் நெஞ்சிலும், வயிற்றிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து...

இந்த கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப் படாத போதிலும் அப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் ஆயுத பாணிகளாலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

(க-3)

## சோஷலிஸக் கட்சி மாநாடு

யாழ்ப்பாணம்,மார்ச்24

ஐக்கிய சோசலிசக கட்சியின் மாநாடு எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் இரத்மலானை கம்கரு செவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் அரசியல் உக்கிரமடைந்து வரும் இந்நேரத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக இம்மாநாட்டில் முக்கியமாக ஆராயப்படவுள்ளதாகவும் -

பிரிட்டிஷ் சோசலிசக் கட்சியின் பிரதம செயலாளர் பீட்டல் டெப் மற்றும் இந்தியா, பாகிஸ்தான் உட்பட சர்வதேச பிரதிநிதிகள் பலரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் - கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-204)

---



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

இத்தாலியில் வசிக்கும்
குமணன் – மேந்தினி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன் கார்த்திக்

24 – 03 – 2005

செல்வன் கார்த்திக்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (24.03.2005) வியாழக்கிழமை தன்னுடைய இல்லத்தில் வெகு குதூகலத்துடன் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் கார்த்திக் அவர்களைப் பல்கலையும் கற்றுச் சீரோடுஞ் சிறப்போடும் வாழ்கவென பளையில் வசிக்கும் பூட்டன் கந்தையா – இரத்தினம் குடும்பத்தினர், அப்பம்மா குடும்பத்தினர், இத்தாலியில் வசிக்கும் சித்தப்பா (தம்பா தீபா) குடும்பத்தினர், தம்பி செந்தூரன் மற்றும் லண்டனில் வசிக்கும் மாமன்மார்களான தீபன்–மயன் ஆகியோர் மனமார வாழ்த்துகின்றார்கள்.

முல்லையடி,
பளை.

(43190) (54-11-15)

தகவல்:
அப்பம்மா.

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலையில் கல்விபயிலும் தாதிய, மாணவன் ஜெயபிரகாஷ் றொட்றிகோ அவர்களின் அன்புத் தந்தை

### ஜோன் பொஸ்கோ

அவர்களின் மறைவையொட்டித் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
'A' 2002 பிரிவு, 'A' 2003 பிரிவு,
தாதிய மாணவர்கள், 'A' 2004 பிரிவு,
குடும்பநல உத்தியோகத்தர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(43419) (39-38-14-45)

---

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

ஒளிர்வு 26 – 12 – 1942



உதிர்வு 30 – 03 – 1998

### அமரர் சு.இரத்தினராசா

(வலயம் 1 முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

ஏழு ஆண்டுகள் ஆனாலென்ன
ஏழு யுகங்கள் சென்றாலென்ன
கொண்ட பெரும் புகழும்
என்றென்றும் நிலைத்திருக்கும்

"மாணிக்கம்"
கொக்குவில் மேற்கு.

(43363)(39-38-14-45)

தங்களை நினைவுகூரும்:
மனைவி, மக்கள்,
மருமகன், பேரன்.

---

COMITE INTERNATIONAL GENEVE

## ICRC

The International Committee pf the Red Cross (ICRC) would like to fill the following vacant position in the logistics unit:

1. Purchasing Officer

**Main Duties:**
- To centralize all purchase requests
- To purchase items such as water and sanitation, house hold, Vehicle spare parts, office supplies and tools.
- To negotiate and purchase: "spot purchase" quotation, tender.
- To follow - up the process until goods are delivered by the supplier
- To sort out the quality claims (together with the warehouse manager) and to validate suppliers invoices.
- To visit and prospect suppliers.
- To select and evaluate suppliers with Technicians or other specialists
- To maintain suppliers' and items' data bases and filling
- To maintain a good filling system for procurement Request, PO files, Suppliers files, Products files.

**Requirements**
- 3 Years of experience with other organizations or highly professional back-ground.
- Technical or Engineering background /experience desirable
- English and Tamil mandatory, knowledge of Sinhalese and other languages an advantage.
- Computer literate.
- Good product/purchase knowledge, negotiation and competitive bidding skills purchasing, management of product portfolio, elaboration of purchase policy, legal aspects assessment of capacity of suppliers.
- Professionalism, Integrity, Interpersonal skills, goal focus.

**Place of Employment: Puthukudiyiruppu**

If you would like to be part of a dedicated team in an international environment, please send us your CV and motivation letter including your contacts to the following address, latest by 28.03.2005.

**The ICRC**
**Kanagapuram,**
**Kilinochchi.**

ICRC is an equal opportunity employer and qualified women are strongly encouraged to apply.

(c/41661)(50)

---

COMITE INTERNATIONAL GENEVE

## ICRC

The International Committee of the Red Cross (ICRC) would like to fill the following vacant position in the logistics unit:

**2. Dispatcher**
- To Prepare the notifications and other crossing documents for fax IN/OUT of Vanni.
- To Prepare all transport documents for cargo IN/OUT of Vanni.
- To liaise arrangement of shuttle, pickups, movements together with other ICRC offices ensuring most efficient use of ICRC vehicles.
- To assign drivers for all movements
- To liaise with the Welcome sevice for all arrivals/ departures
- To noti y all pax traveling of the final travel plan and ETD, ETA etc.
- To maintain a database for administrative follow up

**Requirements**
- Technical Education
- 2 year of experience in vehicle mechanics
- English and Tamil mandatory, Knowledge of Sinhalese and other languages an advantage
- Computer literate.

**Place of Employment: Kilinochchi**

If you would like to be part of a dedicated team in an international environment, please send us your CV and motivation letter including your contacts to the following address latest by 28.03.05.

**The ICRC,**
**Kanagapuram,**
**Kilinochchi.**

**ICRC is an equal opportunity employer and qualified women are strongly encouraged to apply.**

Only short listed candidates will be contacted

(c/41660)(50)

### சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப

# யுவதிகளை உள்ளடக்கிய சமய அமைப்புகளும் உருவாக வேண்டும்

## ஆறு.திருமுருகன் வெளியிடும் கருத்து

வட்டுக்கோட்டை,. மார்ச் 24

இந்து சமய இளைஞ்களை ஒருங்கிணைத்துச சேவையாற்ற நிறுவன ரீதியான சங்கங்கள் இருப்பது போல, யுவதிகளை உள்ளடக்கிய நிறுவன ரீதியான இந்து சமய அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இதன்மூலம் சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம் எனச் செஞ சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கூறினார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபா சங்கத்தினால் விளையாட்டு உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இந்து வாலிபர் சங்கக் கலயாண மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் சி.சிவதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க இந்து வாலிபர் மேற கொள்ளும் இத்தகைய செயற்றிட்டங்கள் பாராட்டத்தக்கவை. இவ்வாறு இளைஞர்கள் ஒன்றிணைந்து எம் வளங்களைக் கட்டியெழுப்ப முன் வரவேண்டும்.

இந்து இளைஞர்களை உள்ளடக்கிய நிறுவன ரீதியான சங்கம் இருப்பது போலப் பெண்களைக் குறிப்பாக யுவதிகளை உள்ளடக்கிய நிறுவன ரீதியான இந்து சமய அமைப்புகள் உருவாக்கப்படவேண்டும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியைப் போன்று சேவையாற்ற அனைவரும் முன்வர வேண்டும் பெரும்பாலான பெண்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை நெறிப்படுத்தி மீளவும் சமுதாயத்துடன் ஒன்றிணைந்து வாழக்கூடியவாகளாக உருவாக்கும் இல்லங்கள் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய பணிக்குத் தமது பூரண ஒத்துழைப்பும் உதவியும் வழங்கப்படும் - என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கூறியதாவது:

எமது மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்தபோதும் எமது தேசத்தில் மனிதாபிமானம் இன்னும் செத்துவிடவில்லை என்பதை வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் இப்பணி சுட்டி நிற்கின்றது. யாழ்.மாவட்டத்திலே கடந்த சிலகாலமாகக கலாசாரச் சீர்கேடு மலிந்து காணபடும் இவ்வேளையிலே சமுதாயப் பொறுப்புள்ள இளைஞர்களின் இப்பணி பாராட்டுக்குரியது - என்றார்.

இந்து வாலிபர் சங்கத்தால் வழங்கப்பட்ட பொருள்களைப் பெற்றுகொண்டு ஏற்புரை வழங்கிய யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா கூறியதாவது:-

கடல் அன்னையே, கடல்தாயே, கடல்மடியே என்று போற்றிய கடலை, கடல் அரக்கனே என்று குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு எமது மக்களின் உயிர்களை, உடைமைகளை கடல் பறித்துச் சென்றுள்ளது.

இத்தகைய கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுப் புண்பட்ட நெஞ்சங்களுக்குப் பண்பட்ட சேவை புரிந்த இந்து வாலிபர் சங்கத்தின் பணிமேன்மையானது. இத்தகைய பொருளகள் உரியவர்களுக்கு உரியவாறு உடனடியாகக் கையளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய்க் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, ஐ.நா.சபை உணவு விவசாய ஆலோசகர் சு.திருஞானசம்பந்தர், யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன், அமெரிக்கப் பேராசிரியர் வேனாட் பற்றி, சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட வதிவிடப் பிரதிநிதி எஸ்.மோகன், வட்டு.மத்திய கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் மற்றும் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

(ப-161-204)

## ஆரோக்கியமான குழந்தைகளே அறிவுள்ள பிரஜைகள் ஆக முடியும்

ஆரோக்கியமான குழந்தைகள் எங்கு உள்ளனரோ அங்கேயே அறிவும் திறனும் உள்ள நற் பிரஜைகள் உருவாகின்றனர். எனவே, பெற்றோா தங்கள் குழந்தைகளை நல்ல ஆரோக்கியமானவர்களாகப் பேணி வளர்த்தல் அவசியமானதாகும.

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவகக கல்வி வலய நிதி உதவியாளர் பொன் தர்மேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

முன்னைய காலங்களில் தீவக மக்களின் உடல் ஆரோக்கியம் மேன்மையுற்றிருந்தது. நீண்ட ஆயுள் பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர். இதன் காரணமாகவே நல்ல அறிவாளிகளாகவும் செயல் வீரர்களாகவும் திகழ்ந்தனர். தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரைத் தந்ததும் பல புலவர்களையும் பண்டிதர்களையும் தொழில் நுட்ப வல்லுநர்களையும் தந்தது இத்தீவு.

இதன் சிறப்புக்களும் பெருமைகளும் மங்காமல் இருக்க வேண்டுமெனில் இனிவரும் சந்ததியினரும் தம்மை வளப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதற்கேற்ற அடித்தளத்தை முதலில பெற்றோர் இட வேண்டும்.அந்த வகையில் அன்போடு அறிவுரைகளையும் சொல்லி நல்ல உணவூட்டி வளர்த்தெடுக்க வேண்டும். அடுத்ததாகப் பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், பிள்ளைகளின் ஆற்றல்களுக்கேற்ற நிலையில் நின்று அறிவு புகட்டித் தட்டிக் கொடுத்து தைரியமூட்டி வளர்க்க வேண்டும்.

சமூகத்தவர்களும் சமூக நிறுவனங்களும் குடும்ப நிலைகளையும், பிள்ளைகளின் கல்வித தேவைகளையும் அறிந்து வேண்டியவற்றைச் செய்தால் எந்தச் சமூக நிலையும் தாழ்ந்துவிடச் சந்தர்ப்பமே இல்லை. எதிர்காலம் ஒளிமயமானதாகவே அமையும் - என்று கூறினார்.

மேற்படி நிகழ் வில் நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் கோ.சண்முகலிங்கம், நெடுந்தீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். அசோகன ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

(ப-112-204)

## சிறார்களின் எதிர்காலத்தில் கண்ணும் கருத்துமாக இருங்கள்

சாவகச்சேரி,மார்ச்24

பாலர் பாடசாலை மாணவர்கள் எதிர்கால உலகின் அரும்புகள். எனவே அவர்களின் செயற்பாடுகளில் பெற்றோர்களாகிய நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் சிறுவர் நலன நன்நடத்தை அதிகாரியான எஸ்.சிவகரன்- சாவ பகல் பராமரிப்பு நிலைய புதிய ஆண்டுக்கான உறுப்பினர் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு பகல் பராமரிப்பு நிலைய




தலைவர் வை.இராஜரத்தினம் தலைமையில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் அதிகாரி சிவகரன் தொடர்ந்து- உரை நிகழ்த்தும் பொழுது கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பகல் பராமரிப்புப் பாலர் பாடசாலைகள் 18நிலையங்களில் இயங்கியது. இவைகளுள் சிலபாடசாலைகள் மூடப்படவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆனால் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம் தொடர்ந்து இயங்கி, பாலர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உதவிவருகிறது

இங்கு கல்விபயிலும் பாலர்கள் கல்வியுடன் மட்டும் நில்லாது வேறு கலை அம்சங்களிலும் மிளிரும் வகையில் செயற்பட்டு வருவது மிகவும மகிழ்ச்சி தருகிறது- என்றார்.

நிலையத்தின் செயலாளர் ப.நடராசா உரை நிகழ்த்துகையில்- கூறியதாவது:-

ஆரம்பக்கல்வியைப் பெறும் பாலர்கள் கள்ளங் கபடமற்ற பிஞ்சுகள். அவர்களை சமுகத்தில் மிளிரச்செய்வது பெற்றோர்கள், கல்விமான்கள் மட்டுமல்ல அவர்களது ஆரம்ப அத்திவாரமாகத் திகழும் பாலர்வகுப்பு ஆசிரியர்களும பெரும்பங்கு வகிக்கிறார்கள். இன்று கணனியுகம் வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே இப்பாலர் வகுப்பு மாணவர்களையும் அந்தக் கணனி யுகத திற்கு ஆயத்தம் செய்ய வேண்டிய பொறுப்பு சமுகத்திடம் உள்ளது எனவே அதற்கான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் புதிய ஆண்டுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் (ப-31-204)

## கலைகளைக் கற்பதன் மூலமே அவைகளை வளர்த்துச் செல்லலாம்

நல்லூர்,மார்ச்24

கலைகள் போற்றுதற்குரியவை. அவற்றை இளங்கலைஞர்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இளந்தலைமுறையினர் கலைகளைக் கற்பதில் ஈடுபாடு காட்ட வேண்டும். இதன்மூலம் எமது கலைகளை வளர்த்துச் செல்லலாம். என இசைவேந்தர் பொன். சுந்தரலிங்கம் கூறினார்.

நல்லை ஆதீனத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் அண்மையில் பொன்.சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரி இடம் பெற்றது. அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

எமது கலைகள் போற்றுதற்கு உரியவை. இவற்றைப் பாதுகாப்பதில் இளங்கலைஞர்களுககுப் பொறுப்புகள் உண்டு. இளந்தலைமுறையினர் இந்தக் கலையைக் கற்பதில் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

பல பெரியார்களின் உதவியுடன் இளங்கலைஞர் மன்றத்தை அமைத்துக் கலைகளின் வளர்சசிக்கு உதவ வேண்டும் என்று விரும்பினேன். இன்று நான் இல்லாத வேளையிலும் கூட இளம கலைஞர்கள் அப்பணிப்புடன் செயற்பட்டு வருவதைக் காணும் போது மகிழ்ச்சியாய் இருக்கிறது. எதிர்காலத்தில் எமது கலைஞர்ளை வளர, வாழவைக்க இங்குள்ள கலைஞர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

என்னுடைய இசையின் வளர்ச்சியில் நல்லை ஆதீனத்தின் பங்கு கணிசமாக உண்டு. எனது கச்சேரிகள் பல இந்த மண்டபத்தில்தான் நடந்துள்ளன. ஆதனத்தின் ஆசி எனக்கு இருப்பதைப பேறாகவே கருதுகின்றேன்.

கலைஞர்கள் பலதேசத்திலிருந்தாலும் அவர்கள் ஒன்றுபட்டு இந்த மண்ணின் பெருமையைக காக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்- என்றார்.

ஆசிரியர் ஆறு.திருமுருகன் தனது தலைமை உரையில் கூறியதாவது.

இறையோடு கலந்த இசை எங்களுடையது. ஒரு நீண்ட இடைவெளிக்குப்பின்னர் இடம் பெறும் இந்த நிகழ்ச்சி நல்லை ஆதீனத்தில் நடைபெறுவது பொருத்தமானது.

வெளிநாடுகளில் இசைப் பணியாற்றி, அதன மூலம் எமது தமிழ் மக்களுக்கும் கலைத்துறை சார்ந்தவர்களுக்கும் பயனுள்ள கடமைகளைச் செய்து வருகிறார். பொன்சுந்தரலிங்கம். பல்கலைக் கழகங்களினூடாக இசைத்துறை மேன்மைப்படுத்தப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் இவர் செயற்படுவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். தமிழ்க்கலைகளின் வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பு என்றும உண்டு என்பது எமது நம்பிக்கை - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தனது ஆசியுரையில்:

கலைகள் வளரவேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவருக்குள்ளும் இருக்க வேண்டும். எமது மண்ணில் இருந்து கலைகளை வளர்க்கப பெரும் தொண்டாற்றிய சுந்தரலிங்கம் வெளிநாடு சென்றபோது இந்த மண்ணின் கலை வளர்சசிக்கான தனது பணியை மறக்கவில்லை.

கலைஞர்கள் பால் மதிப்பும் மரியாதையும் கொண்ட ஒரு இலட்சிய வாதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவரது பணியை வாழ்த்துவதில் அவருக்கு ஆசி வழங்குவதில் நல்லை ஆதீனம் மகிழ்ச்சியடைகின்றது - என்றார்.

ஆதீன மேலாளர் த.இராமநாதன், இளங்கலைஞர் மன்றத்தின் இசை ஆசிரியர் சிவஞானசேகரம் ஆகியோரின் உரைகளும் இடம் பெற்றன.

ஆதீனத்தின் சார்பில் நல்லைக் குருமணியும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் அதன் செயலாளர் செ.மெற்றாஸ் மயிலும் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர். வாழ்த்துப்பாக்களும் வழங்கப்பட்டன.

அணிசேர் கலைஞர்களும் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.

(ப-111-204)

# இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர்

## சைவப்புலவர் கந்தசாமிக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்24

சைவம் கூறும் அன்புவழியில், சிவவாழ்வு வாழ்ந்தவர் சைவப்புலவர் கந்தசாமி. இப்படித் தான் வாழ்வேண்டும் என வாழ்ந்து காட்டிய பெருமையுடையவர் என யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தெரிவித்தார்.

சைவப்புலவர் கந்தசாமியின் பணிநலன் பாராட்டு விழா அண்மையில் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நடைபெற்றது.

உபதலைவர் எஸ்.குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரை நிகழ்திய திருமதி நாச்சியார் செல்வநாயகம் கூறியதாவது:-

சைவம் என்பது அன்பு நெறி. அதன்வழி அன்பை ரசித்து ருசித்து வாழ்ந்த சிவ வாழ்வு கந்தசாமியினுடையது. தான் மட்டுமன்றி ஏனையோரும் சிறப்புடன் வாழ வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட பெரியார். சிவ தர்ம வீரராக, நிறைவான மனித வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதன் எடுத்துக் காட்டாக விளங்கியவர். அவர் வெளிநாடு செல்வதால் இந்தச் சபையின் செயற்பாடுகளில் தொய்வு ஏற்படுமோ என்ற கவலை இங்கு பேசியவர்களிடையே காணப்பட்டது. அவர் மீண டும் இங்கு வந்து இந்தச் சபையின் சிறப்பான செயற்பாடுகளுக்கு உதவுவார் என்ற நம்பிக்கை உண்டு - என்றார்.

மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் பேசும் போது உள்ளத்தில் தூய்மையும் தளம்பாத சொல்வளமும் திறமைமிக்க செயற்பாடும் கொணடவர். அமைதியான மனிதராகத் தன்னுடைய கடமைகளைக் கண்ணியத்துடன் செயற்படுத்திய ஒருவராக இவரது வாழ்வு அமைந்துள்ளது. புண்ணிய நாச்சியார் நிறுவனம் இந்தியாவில் பெரும் நிறுவனமாகக் காட்சியளிக்கிறது என்றால் அதற்கு முதன்மைக காரணமாக இருப்பவர் கந்தசாமி அவர்களே. கந்தபுராணத்தை மாணவர்கள் கற்கவேண்டும் என்பது அவரது ஆவல். சமயபாடப் பரீட்சையுடன் பல்வேறு போட்டிகளை நடத்தி மாணவர்களிடையில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தனது சேவைகளை வழங்கியவர் அவர் - என்றார்.

ஆசிரியர் இரா.செல்வவடிவேல் உரை நிகழ்த்தும்போது கூறியதாவது:-

சபையின் உறுப்பினராக இருக்கும் நான் பழைமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட வயதினன். புலவர் அவர்களின் மாணாக்கன். அவரிடம் சில விடயங்கள் பற்றிக் கேட்கும் போது ஒரு மௌனப் புன்னகையுடன் அவர் இருந்து விடுவதுண்டு. அந்த மௌனத்தின் இன்றியமையாமையை இப்போதுதான் என்னால் உணரமுடிகிறது.

குற்றம் எதுவும் செய்யாமல் இருபது வருடங்கள் ஒருவர் சிறைச்சாலையில் வாழ்ந்திருக்கிறார் என்றால், அதற்கு எத்தனை உறுதியான மனம் வேண்டும். சிறைக்கைதிகளை நல்வழிப்படுத்தும் மன உறுதியுடன் இருபது வருடங்கள் சிறைச்சாலையில் தங்கியிருந்துள்ளார். அங்குள்ள கைதிகளுக்கும் நற்போதனைகளை வழங்கியுள்ளார். யாரும் செய்யாத அரும்பணி இது - என்றார்.

ஆசிரியமணி பஞ்சாட்சரம், கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். மகேந்திரன், யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் எஸ். சிறிகுமரன், சபையின் உறுப்பினரான எஸ்.சணமுகலிங்கம், புஸ்பா செல்வநாயகம் உட்படப் பலரின் உரைகள் நடைபெற்றன. முன்னதாக ஆதரவாளர்கள், அன்பர்கள், மாணவர்கள் எனப பல்வேறு பிரிவினரும் பொன்னாடை போர்த்தும் மலர்மாலை அணிவித்தும் அன்னாரைக் கௌரவித்தனர். வாழ்த்துப்பாக்களும் வழங்கப்பட்டன.

இந்து சாதனம் பத்திரிகையை முன்னாள் அதிபர் மகேந்திரன் வெளியிட்டுவைத்தார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

(ப-111)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் ஆனைக் கோட்டைச் சந்திக்கும் இடையில் சகல வசதி களுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அரச, தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது. பல வாகனங்கள் தரிக்கக்கூடிய வசதிகள் உண்டு. தொடர்பு: 0777-161789, 021 - 222 5062. (43423)

## நாய்கள் விற்பனைக்கு

18 மாதங்கள் நிரம்பிய, அழகான Greet dane (கருத்தரித்த) பெண் நாய் 12 மாதங்கள் நிரம்பிய Purebread Germen Shepherd ஆண் நாய் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.220, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 077-3127516. (43422)

## தவறிவிட்டது

மனோரஞ்சினி கோபாலகிருஷ்ணன் என்பவரது விசேட அடையாள அட்டை (090500482), வங்கிப் புத்தகம், நகை அடைவுச் சிட்டை அடங்கிய கைப்பை இணுவிலுக்கும் உடுவிலுக கும் இடையில் திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடுவில் தெற்கு சத்திய புரம் திருச்சபையில் ஒப்படைத்துதவவும். (43444)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள் - எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீநாக பூசணி அம்மன் திருமணமாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207. (43302)

## பன்னிரு திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் மற்றும் பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியன நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் திருநெல்வேலி, அரசடி ஸ்ரீசிவகாம சுந்தரி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளன.

மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ-204)

## ஆலயச் சூழலில் சிரமதானம்

அரியாலை,மார்ச்24

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் ஆலய சுற்றாடல் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

இப்பகுதி இந்து இளைஞர் தொண்டர்கள் இந்தச் சிரமதானப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா அடுத்தமாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாவதையொட்டியே இச்சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆலயத்தில் சிவனுக்கெனத் தனியான சிறிய சித்திரத்தேர் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. (ஐ-17)

## தென்னங்கன்று விநியோகம்

நல்லூர்,மார்ச்24

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் மூலம் 400 தென்னங்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மானிய விலைக்குத் தருவிக்கப்பட்ட இவை தலா ஒன்று ரூபா 10இற்குப் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது. (ஒ-111)

## உடனடியாகத் தேவை

கண்டி வீதி, கச்சேரியில் இயங்கிக்கொண்டிருக்கும் விஜிதா ஸ்ரோர்ஸ் அன் றிரோம கொமினிக்கேசன் சென்ரருக்கு போட்டோக் கொப்பி, ரெலிபோன் ஒப்பரேட்டர் பணி தெரிந்த அனுபவமிக்க பெண்பிள்ளை தேவை. கணகு விவரத்தில் அனுபவம் முக்கியம்.

தொடர்பு: 92, கண்டி வீதி, கச்சேரி, யாழ்.
T.P.: 222 7096 0776111419. (43443)

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார்
திருமணத் தேவைகளுக்கு
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: இல.396.
கைலாயபிள்ளையார் கோயிலடி.
உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை.
நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (சி-41680)
T.P.:0777 283795.

---

## உங்களுக்கு இயலக்கூடிய விலைகளில் கணனிகள்!

**மீண்டும் புதிய வரவுகள்!**
குறைந்த கையிருப்பு மட்டுமே!
இன்றே விரையுங்கள்!

**NET**
Computers Made In expensive

**NET** காட்சியறைக்கு "முந்துங்கள் உங்கள் தெரிவிற்கு"

Desktop and Tower

| DESCRIPTION | PRICE |
|---|---|
| PII 333 MHz / 64MB RAM/3.2GB HDD/ | 15,500 |
| PII 350 MHz / 64MB RAM/4.2GB HDD / | 16,900 |
| PIII 450 MHz / 64MB RAM/6.4GB HDD/ | 26,500 |
| PIII 500 MHz / 64MB RAM/6.4 GB HDD/ | 27,400 |
| PIII 550 MHz / 64MB RAM/6.5 GB HDD/ | 27,900 |

**6 Month Warranty**
(with 1.44 MB FDD / VGA / CD Rom / sound/
15" Digital Color Monitor /
Key Board / Mouse and Pad)

**Lap Top கணனிகள்**
P III - 1. 133 Ghz - IBM Phink pad (mobile Processor)
/256 MB Ram/ 30GB Hard Drive
with DVD Ram and writer
Rs. 85,000/=

**NORTH EAST TECHNOLOGIES [PVT] LTD**
No: 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.
Hot line: 0777 - 708498 web site: www.net.slt.lk.
(சி-41673)(26-14-15)

---

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின்
முன்னாள் தலைவரும் சமூக சேவையாளருமான
காலஞ்சென்ற
அமரர் **பொன்னுத்துரை சிவலிங்கம்**
ஞாபகார்த்தமாக ஞானபாஸ்கரோதய
விளையாட்டுக் கழகம் (G.P.S.) நடத்தும்

**மாபெரும் மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி**

ஆறு பேர் கொண்ட ஐந்து பந்துப் பரிமாற்றங்களையுடைய போட்டியாக நடைபெறும். இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் விண்ணப்பப்படிவங்களைக் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்பமுடிவு திகதி: 29-03-2005
போட்டி ஆரம்பம்: 02-04-2005



விண்ணப்ப படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:

1. தயா நகைப்பூங்கா
   213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 5864
2. பிரகாந்த் தொலைத்தொடர்பு நிலையம்
   55B, பலாலி வீதி, திருநெல்வேலி 021 222 3184
3. சிவன் தொலைத்தொடர்பு நிலையம்
   G.P.S.றோட், கல்வியங்காடு. 021 – 222 3303
4. பூங்கனிச்சோலை
   இராமலிங்கம் வீதி, முடமாவடி 021–222 2976.

**ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகத்தினர். (G.P.S.)**
(43436)(26-14-15)

---

## ஆழ்ந்த அனுதாபங்கள்



எமது கணனி பயிற்சி நிலைய
பரிசோதகராகிய
**சதாசிவம் சதானந்தன்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கணனிப் பயிற்சி நிலையம்,
N.A.I.T.A., சுழிபுரம். (43425)(26-14-15)

ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஊழியர்கள்.

---

## 7ஆவது வருட இதய அஞ்சலி

தோற்றம்
17 — 06 — 1943



மறைவு
24 — 03 — 1998

**திருமதி பிலோமினா செல்லையா**

*ஏழு வருடமானாலும் எங்கள் ஏக்கம் தீரவில்லை*
*பாழுமிவ்வுலகை விட்டு நீர் பரலோகம் சென்றுவிட்டீர்*
*நாளும் உம்மை நினைத்தே நாமிங்கு வாழுகிறோம்*
*ஆத்மா சாந்தியுற ஆண்டவனை வேண்டுகிறோம்.*


"லக்ஷ்மி மகால்",
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (43404) (32-14-15-26)

கணவர், பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

---

## கட் Off Mega Sales

புதுவருட விஷேச விற்பனை





**Dish Set 12,500/- Only**

பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட யப்பான் டெலிவிசன்கள் மற்றும் ஓடியோ வீடியோ சாதனங்கள்

கோம் தியேட்டர் வூபர்கள்

| | |
|---|---|
| 11500/- | 9500/- |
| 16500/- | 14500/- |
| 4500/- | 3500/- |

டிஸ் எல்என்பி மற்றும் ரிசீவர்

எலக்ட்ரோனிக் மற்றும் கம்பியூட்டர் பொருட்கள் யாவும் கொழும்பை ஒத்த விலைக்கே

Institutions, Schools & Dealers க்கு விசேட சலுகைகள் உண்டு

தரம் தராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்

**CeSCO**
56/15, Stanly Road, Jaffna.
(Behind Bank of Ceylon)

---

## நிரஞ்சனா நினைவு மண்டபத் திறப்பு விழாவும் சிறப்புமலர் வெளியீடும் - 2005

இடம்: வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்
நாள்: 25-03-2005
நேரம்: முற்பகல் 9.30 தொடக்கம் நண்பகல் 12.30 வரை
பிரதம அதிதி: செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
சிறப்பு விருந்தினர்: திரு.சு.புண்ணியசீலன்
*(அதிபர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)*
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
*(அதிபர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி)*
திரு. குலரத்தினம் விக்கினேஸ்
*(இயக்குநர், IIS கணனி கற்கை நிறுவனம்)*

இந்த நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-41671)(26-14-15) - வாழ்வக சமூகம்.

---

## அரசாங்க அறிவித்தல்

**மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரசேவைகள் - யாழ்ப்பாணம்**

**வழங்குநர் பதிவு - 2005**

மேற்படி விடயம் சம்பந்தமாக 08-03-2005 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தின் முடிவுத் திகதி 31-03-2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்,**
பிரதி மாகாணப் பணிப்பாளர்.
(சி-41675)(26-14-15)

---

## விற்பனையாகின்றது!

A/L **வணிகக்கல்வி**
2006 மாணவர்களுக்கான புதிய பாட அலகு
**வணிகத் தகவல் முறைமை**
ஆக்கம்: **திரு.கா.சாந்திநாதன்**
B.B.A. (Hons) Dip.in Ed.
ஆசிரியர்
**யா/இராமநாதன் கல்லூரி**

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(43420)(26-14-15)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08 - 08 - 1936



உதிர்வு
04 - 04 - 2004

**அமரர் முத்துக்குமாரு ஜெயநாதன்**

அன்புக்கோர் அணிகலனாய்
பண்புமிக்க ஆசானாய்
பாசமுடன் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஓராண்டானாலும் உங்கள் நினைவு
மாறவே மாறாது!

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (43421)(32-14-15-26)

— குடும்பத்தினர்.

# கைதடியில் நடந்த தாச்சிச் சுற்றுப்போட்டி; தாவடி காளியம்பாள் சம்பியனாகியது

யாழ்ப்பாணம்,மார்ச்24

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்க அனுசரணையுடன் யாழ். மாவட்ட ரீதியில் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனானது.

வளர்மதி வி.க. மைதானத்திலே கடந்த பன்னிரண்டாம் திகதி தொடக்கம் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த 20ஆம் திகதி மாலை நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்திற்கான தெரிவுகளில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகமும் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 8 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம் 5 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

மூன்றாம், நான்காம் இடத்தை முறையே கைதடி துர்க்கா விளையாட்டுக்கழகமும் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

சிறந்த விளையாட்டு வீரர்களாக தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.கமலநாதனும், கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ச.செந்தூர்ராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தைச் சோந்த பதினாறு விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய இத் தாச்சிச் சுற்றுப்போட்டியில் நடுவர்களாக தாச்சச் சங்கத்தைச் சேர்ந்த வே.பேரம்பலம், க.பீதாம்பரம் ஆகியோர் கடமைபுரிந்தனர்.

(3-75)



முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தில் நடந்த இல்லமெய்வன்மைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு வித்தியாலய உப அதிபர் எஸ்.நரேந்திரன் பரிசில் வழங்கும் போது எடுத்த படம். *(படம் : அளம்பில் செய்தியாளர்)*

# இணுவில் பொது நூலகத்தின் கரம் சுற்றுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்24

இணுவில் பொது நூலக, சனசமூக நிலையம் ஆண்டு விழாவையொட்டி நடத்திய கரம் சுற்றுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

முடிவுகள் வருமாறு:-

ஒறறையர் - ஆண் - ச.விமல்காந்த் (சென்றலைட்ஸ்), ச.சற்குணமூர்த்தி(சென்றலைட்ஸ்),

பெண் - டி.சுகன்யா(வேம்படி), வ.ஜெயந்தினி(இணுவில் இந்து), இரட்டையர் ஆண் - செ.செந்தூரன் (பல்கலைக்கழகம்), செ.பிரதீப் (கொக்குவில் இந்து), எஸ்.விமல்காந், ச.சற்குணமூர்த்தி (சென்றலைட்ஸ்)

கலப்பு இரட்டையர் - தீ.சுகன்யா(வேம்படி), மோ.ஆகாஷன் (யாழ்.சென்றல்), வ.ஜெனனி, இ.சிவநீதன்(இணுவில் இந்து).


(3)

# லாரா விளையாடச் சம்மதம்?

முன்னணி வீரர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டால் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் தானும் விளையாடத் தயார் என்று பிரையன் லாரா அறிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட் சபையின் அதிகாரபூர்வ அனுசரணை நிறுவனத்தின் போட்டி நிறுவனத்துடன் விளம்பர ஒப்பந்தம் செய்துகொண்டனர் மேற்கிந்தியவீரர்கள். இதையடுத்து, அணியில் இருந்து பிரையன் லாரா, வெய்னே பிரேவோ, பிடல் எட்வர்ட்ஸ், கிறிஸ் கெய்ல், ரவி ராம்பால், ராம்நரேஷ் சர்வான் மற்றும் வெய்னே ஸ்மித் ஆகிய ஏழு வீரர்கள் நீக்கப்பட்டனர்.

தென்னாபிரிக்க அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு பயணம் வந்துள்ளது. முதல் டெஸ்ட் 31ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டிக்கான அணியில் இணையுமாறு லாராவை மட்டும் அழைக்கிறது மேற்கிந்திய கிரிக்கெட் நிர்வாகம். இந்த அழைப்புக்குப் பதிலளித்து லாரா அனுப்பியுள்ள கடிதத்தில் கிரிக்கெட் கௌரவத்தை உயர்த்தும் நோக்கிலும், ரசிகர்களின ஆர்வத்தைக் கெடுக்க விரும்பாததாலும் மீண்டும் அணியில் இணையச் சம்மதிக்கிறேன். நீக்கப்பட்ட முன்னணி வீரர்களும் இடம்பெறும் அணியில் மட்டுமே நானும் இடம்பெறுவேன் என்று தெரிவித்தார்.



தென்கொரியாவின் சியோலில் நடந்த சர்வதேச உதைப்பந்தாட்டப் போட்டியில் அமெரிக்கா 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினாவை வீழ்த்தியது அமெரிக்க வீரர் எடி கேவன் (9), ஆர்ஜென்டினா வீரர் பிரான்கோ மிரண்டா இருவரும் பந்தை தட்டிச் செல்லப் போராடுகின்றனர்.

## சுனாமி கிரிக்கெட்

சுனாமி நிவாரண நிதிக்காக லண்டனில் ஒருநாள் போட்டி நடத்தப்பட உள்ளது. இப்போட்டி, வரும் ஜூன் 14இல் லோட்ஸ் அரங்கில் நடக்கிறது. சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்டவர்களுக்காக கடந்த ஜனவரி 1இல் மெல்போர்னில் ஒருநாள் போட்டி நடந்தது. இதன் மூலம் சுமார் 50 கோடி ரூபா திரட்டப்பட்டது. அடுத்ததாக லண்டனில் நடக்கும் போட்டியில் உலக லெவன் எம்.சி.சி அணிகள் மோதுகின்றன. 50 ஓவர் கொண்ட இப்போட்டியில் பங்கேற்க வோர்ன் (ஆஸி.), முரளிதரன் (இலங்கை), பிளமிங் (நியூசிலாந்து), லாரா (மே.இ.), அன்டி பிளவர் (சிம்பாப்வே) போன்ற வீரர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

## வெங்கடேஷ் பிரசாத் ஓய்வு

பெங்களூர்,மார்ச்24

கிரிக்கெட் போட்டிகளில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை ஓய்வு பெற்றார் இந்திய வீரர் வெங்கடேஷ் பிரசாத்.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜவஹல் ஸ்ரீநாத்துடன் இணைந்து 90ஆம் ஆண்டுகளில் இந்திய அணிக்கு சிறப்பான முன்னேற்றம் தந்த பிரசாத், 33 டெஸ்ட் போட்டிகளில் 96 விக்கெட்டுகளையும் 161 ஒருதினப் போட்டிகளில் 194 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

# எல்லைப்படை மாவீரர் கிண்ண உதைபந்தாட்டம்; குறிஞ்சிக்குமரன்–சென்.மேரிஸ் இன்று மோதல்

யாழ்ப்பாணம்,மார்ச்24

எல்லைப்படை மாவீரர் நினைவுக் கிண்ணத்துக்காகத் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவில் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த குறிஞ்சிக்குமரன் வி.கவும் யாழ்ப்பாணம் லீக்கைச் சேர்ந்த சென்.மேரிஸ் வி.கவும் இன்று மோதுகின்றன.

'உதயன்' ஊடக அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடக்கும் மற்றோர் ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த கண்ணகி வி.க.வும் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த சிவானந்தா வி.கவும் மோதுகின்றன.

(86-190-203)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் (செவ்வாயன்று) இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த திருமகள் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி 7 ஆவது நிமிடத்தில் பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழக அணியை சேர்ந்த சுபாஸ் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கு கோல்கள் பெறும் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதிலும் அதனை உரிய முறையில் பயன்படுத்த அந்த அணி வீரர்கள் தவறினார்கள்.

இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் 1 இற்கு 0 என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் விறுவிறுப்புடன் விளையாடத் தொடங்கின. இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் பல இலகுவான முறையில் கிடைத்த போதிலும் இரு அணிகளும் உரியமுறையில் பயன்படுத்தாமையினால் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே கோல்கள் எதனையும் பெறவில்லை.

இந்த ஆட்டமுடிவில் பொம்மேர்ஸ் விளையாட்டுக்கழகம் 1 இற்கு 0 என்ற கோல் கணக்கில் திருமகள் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

உதயன்
ஊடக அனுசரணை

மற்றுமொரு ஆட்டத்தில் யாழ். லீக்கைச் சோந்த யூனியன் விளையாட்டுக் கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. முதல் பாதி ஆட்டம் முடிவடைய மூன்று நிமிடங்கள் இருந்த நிலையில் யூனியின் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மோகன் தனது அணிக்காக முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டார் இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் யூனியன் விளையாட்டுக் கழகத்திற்கு பல சந்தர்ப்பங்கள் இலகுவாக கோல்கள் பெறக்கிடைத்தன. ஆனால், அவற்றை கோலாக்க யூனியன் அணியினர் தவறிவிட்டனர்.

யூனியன் அணியினருக்கு சார்பாக விக்னேஸ்வரா அணியின் தண்டனை உதை எல்லைக்குள் ஓர் நேர்உதை கிடைக்கப்பெற்றது. இதனை சரியான முறையில் உதைத்து லெஸ்லி இரண்டாவது கோலைப் பெற்றுக்கொண்டுத்தார்.

தொடர்ந்து மூன்றாவது கோலையும் யூனியன் அணியைச் சேர்ந்த அருண் தனது அணிக்காகப் பெற்றுக்கொண்டார்.

ஆட்ட முடிவில் யூனியன் விளையாட்டுக்கழகம் 3 இற்கு 0 என்ற கோல் கணக்கில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது. முதல் பாதி ஆட்டத்தில் யூனியன் வளையாட்டுக் கழக வீரர்கள் இருவரும் இரண்டாம் பாதி ஆட்டத்தில விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மூவரும் மத்தியஸ்தரினால் அறிவுறுத்தப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


(ஒ-86)

# இந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் பெங்களூரில் இன்று ஆரம்பம்

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 முன்னிலை வகிக்கிறது இந்தியா. மொகாலி டெஸ்ட் சமநிலையில் முடிந்தாலும், கொல்கத்தாவில் வெற்றி இந்தியா வசமாகிவிட்டது. கடைசி டெஸ்ட் பெங்களூரில் இன்று ஆரம்பமாகிறது. இதற்காக இரு அணி வீரர்களும் அங்கு வந்து விட்டனர்.




ஈடன் கார்டன் தோல்வி ஏமாற்றம் அளிக்கிறது. இங்கு வெற்றிபெற்று, தொடரைச் சமன் செய்ய முழு அளவில் போராடுவோம். அணியிலும் சில மாற்றங்கள் இருக்கும். பெங்களூரில் வானிலை குளிர்மையாக இருக்கிறது. எங்கள் ஆட்டமும் நன்றாக இருக்கும் என்கிறார் 100ஆவது டெஸ்ட் விளையாட்போகும் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக். இந்தியாவைப் பொறுத்தவரை அணியில் மாற்றம் எதுவும் இருக்காது. ராகுல் டிராவிட், அனில் கும்ளே போன்றவர்களுக்கு இது சொந்த ஊர். ஆகவே, அவர்கள் ஆட்டம் இன்னும் நன்றாக இருக்கும்.



பெங்களூரில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினர்.

" ஒன்றே குலம் ஒருவனே தேவன் "

# பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில்

# பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில்

# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 24-03-2005





## வடம் பிடித்திழுப்போம்

வடம் பிடித்திழுப்போம் வாருங்கள் - வடம் பிடித்திழுப்போம்
வடிவேல் முருகன் வள்ளி தெய்வானையர் வலமும் இடமும் சேர இன்று
வண்ணத் தேரில் இவர்ந்தார் காணீர் - வடம் பிடித்...
கயிலை மலையில் சிவனும் உமையும் காட்சி தந்த வண்ணமாக
கந்தவேளும் சத்திமாரும் கவின்கொள் தேரில் மகிழ்ந்திருப்பதால் - வடம்...
எங்கள் குல தெய்வம் எங்கள் அரிய செல்வம்
எங்களுக்கு வாழ்வு தரும் ஈசனே நாம் போற்றி - வடம்...
எங்களைக் காத்திடுவதற்காக இந்த விசவத்தனையை நாடி
வந்தமர்ந்த கந்தவேளை வாழ்த்தி நாங்கள் யாவரும் - வடம்பிடி.....
தாய்மார் பெரியோர் தம்பிமார் தங்கையர் யாவரும் வாரீர் - வடம்.....

விசவத்தனை வேலனிடம் வாருங்கள்
விட்டு ஓடும் உங்கள் துயரங்கள்
பழமுதிர்ச்சோலை போல்
பசுமை வயலுக்குள் பதிந்திருக்கு
பண்ணாக மண்ணதுவில்
பால் முருகன் சன்னிதானம்
பங்குனி மாதத்தில் ரதமேறி
பக்தர்கள் பலகோடி
வேலவனிடம் முறையிடுவர்
வேதனைகள் சுருண்டோடும்

கந்தனவன் முன்னிலையில்
கடம்பமரம் நிழல்பரவி
கண்ணுக்கு குளிர்ச்சிக்கு எம்
மகோற்சவ காலத்தில்
மண்டியிட்ட பக்தருக்கு
அன்னதானம் கொடுக்கும்
அன்னதான கந்தனிவன்
அனைவரும் வாருங்கள்
ஐயனிடம் முறையிடுங்கள்
அத்தனையும் இருந்த இடம் தெரியாது

எம் ஆலயத்தில் தினமும் நேரம் தவறாமல் மூன்று காலப் பூசையின் போதும் விசேட தினங்களிலும் மக்கள் திரள் திரளாகத் திரண்டு வந்து வழிபாடு செய்வார்கள். தற்போது ஆலயத்தின் பிரதம அந்தணச் சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சு.ரவிபாஸ்கரக் குருக்கள் முருகப் பெருமானுக்குச் செய்துவரும் பூசைகள், ஆராதனைகள், நாயன்மாரின் குருபூசைகள் முருகன் அடியார்களை நெகிழ வைப்பதாகவுள்ளன. ஆலய பரிபாலன சபையினர் மக்களின் உதவியோடு எம் பெருமானின் கோபுர வாசலுக்கு அடித்தளமிட்டு அழகாகப் பசுமை வயலுக்குள் வள்ளி தெய்வானையுடன் தேர் ஏறிவரும் இன்னாளாம் எமக்கெல்லாம் இறையருள் கிடைக்கும் பொன்னாளாம்.

## பண்ணாகம் பொது அமைப்புக்கள்

பண்ணாகம் ஸ்ரீமுருகன் அன்னதான சபை
பண்ணாகம் மக்கள் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கம்
பண்ணாகம் அம்பாள் கலைமன்றம்
பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கம்
பண்ணாகம் ஸ்ரீமுருகின் சனசமூக சேவா வாலிபர் சங்கம்
பண்ணாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்


கட்டடப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஒரே இடம்:-

**குமரன் ஹாட்வெயர்ஸ்**
பிரதான வீதி, வழக்கம்பரை, பண்ணாகம்.

*அருள் குமரன் ரான்ஸ் போட்*
குளிர் ஊட்டப்பட்ட சொகுசு பஸ்சேவை கொழும்பு
**தனியார் சிற்றூர்திச் சேவை காரைநகர்**

**கேமா ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி,
பண்ணாகம்.

**ஸ்ரீமுருகன் அச்சகம்**
பண்ணாகம்.

**சோபிகா மருந்தகம்**
பிரதான வீதி,
சுழிபுரம்.

**கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்**
சந்தை சதுக்கம்,
சத்தியக்காடு.

**கலியுகன் தொலைத் தொடர்பு சேவை**
காரைநகர் வீதி,
வழக்கம்பரை.

**விநாயகர் தொலைத் தொடர்பு சேவை**
பிரதான வீதி,
சித்தன்கேணி.

**விதுசா கிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி,
சங்கானை.

**கீர்த்தா அச்சகம்**
சங்கானை.

**கந்தசாமி அன்சன்ஸ் பல்பொருள் வாணிபம்**
சங்கானை.

**Sri Vinayagar**
Digital Dreams
Digital Media House
Head: Valakkamparai, Pannagam, Chulipuram.
Branch: 303A, Palaly Road, Thirunelvely.

**ஸ்ரீகணேசா அன் சன்**
பிரதான வீதி,
சித்தன்கேணி.

**ஈஸ்வரி பற்றறி சார்ச்**
உங்கள் இயந்திர கடைச்சல் வேலைகளுக்கு எம்மை நாடுங்கள்
பிரதான வீதி,
வழக்கம்பரை.

**அம்பாள் களஞ்சியம்**
வழக்கம்பரை,
சுழிபுரம்.

**அஜீ தொலைத்தொடர்பகம்**
பிரதான வீதி,
சுழிபுரம்.

**விதுசன் பல்பொருள் வாணிபம்**
பிரதான வீதி,
சுழிபுரம்.

**லக்சுமி நகைத்தொழிலகம்**
பொன்னாலை வீதி,
சுழிபுரம்.
T.P.: 0777048294.

**வரலக்சுமி வெதுப்பகம்**
காமுவன் சந்தி,
சுழிபுரம்.

**புதிய அபிராமி புடைவை அகம்**
பிரதான வீதி,
சங்கானை.

**திலகன் தைய[illegible]**
பிரதான வீதி,
சங்கானை.

**ஸ்ரீபரன் தையலகம்**
பிரதான வீதி,
சங்கானை.

**மயூரன் பலசரக்கு மாளிகை**
பிரதான வீதி,
வழக்கம்பரை.

# தெல்லிப்பழை கிழக்கு வயலிருப்பைப் பதி (ஆலடி)



## அருள்மிகு ஸ்ரீ வைரவசுவாமி கோயில்
புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா
## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

*சிவநேயச் செல்வர்களே!*

சிவபூமியென விளங்கும் இந்த இலங்கைத் தீவின் வடபால் அமைந்த யாழ்.நகரின் கண்ணே தெல்லியூரில் வயலிருப்பைப் பதியல் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மேற்படி வைரவப் பெருமானுக்கு நிகழும் தாரண வருடம் பங்குனித் திங்கள் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை 25-03-2005 காலை 10-44 - 11-14 மணி வரை உள்ள உத்தர நட்சத்திரமும் பூரணைத் திதியும் அமிர்த சித்தயோகமும் இடபலக்னமும் கூடிய சுப வேளையில் கும்பாபிஷேகம் செய்வதற்குத் திருவருள் கூடியுள்ளது. அத்தருணத்திலும் அதற்கு முன்பும், பின்பும் நடைபெறும் கிரியா காலங்களிலும் அடியார்கள் வந்து வைரவப் பெருமானைத் தரிசித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ திருவருள் துணைகொண்டு பேரன்போடு அழைக்கின்றோம். தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

சிவஸ்ரீ சு.தியாகராசக்குருக்கள்,
ஆலய அர்ச்சகர்.
(சி-41686)(26-14-17)

- திருப்பணிச்சபையினர்.

# சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர்



உயர்திரு.
## கதிரித்தம்பி ஜெயானந்தன்

அவர்கள் 35 வருடங்கள் கல்வி உலகில் பணிபுரிந்த இவர், எமது பாடசாலையில் 15 வருடங்கள் அதிபராகச் சேவையாற்றி அகவை அறுபதில் இன்று 24-03-2005 இல் ஓய்வுபெறுகிறார். அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

*சுடர்விடும் திருநெல்வேலி இந்துக்கலவன் பாடசாலை*
*இடர்களை நீக்கி இயல்புகளை இயக்கிய அதிபர்*
*படர்விட்டு வளர கதிரித்தம்பி ஜெயானந்தன் ஐயா*
*தொடரான சேவைநலம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(43460)(26-14-17)

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

# வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார திணைக்களங்களில் உள்ள துணை மருத்துவ சேவை வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பயிலுநர்களை

## ஆட்சேர்த்துக் கொள்ளல்

கீழ் குறிக்கப்படும் பயிற்சி நெறிகளின் பொருட்டு பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் நிமித்தம் க.பொ.த.(உ/த) பரீட்சையின் (விஞ்ஞான விடயங்கள்) பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அந்தந்த மாவட்டங்களில் குறைந்தது 03 வருடம் தொடர்ச்சியாக வசித்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்:**

1. மருந்தாளர்
2. வைத்திய இரசாயனக்கூட தொழில்நுட்பவியலாளர்
3. பௌதிக சிகிச்சையாளர்
4. எக்ஸ் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்
5. பொதுசன சுகாதார இரசாயனகூடவியலாளர்
6. மருந்துக் கலவையாளர்

மேலதிக விவரங்களுக்கு அண்மையிலுள்ள சு.வை.அ. பணிமனை, வைத்திய நிலையங்கள், பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம் ஆகியவற்றில் பார்வையிடலாம்.

எமது சுகாதார சேவைத் திணைக்களத்தில் ரூபா 50/- பெறுமதியான முத்திரையைச் சமர்ப்பித்து விண்ணப்பங் களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 2005-04-06ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக (யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்) *பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்,**
மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
(சி-41685)(26-14-17)

# சாயி சிந்தனை

## இயக்கம் யாவும் இறைவனின் செயற்பாடே



ஒளி மிகுந்த விளக்கைக் காண நமக்கு வேறு தீப ஒளி எதுவும் தேவையில்லை. அதைப்போலவே ஒளி வீசும் ஆத்மஞானத்தை அறிந்துகொள்ள தனியாக வேறு எதுவும் வேண்டாம்.

ஒவ்வொரு மனிதனிடமும் இந்த ஆத்ம தத்துவம் நிறைந்திருக்கிறது. ஆனால், இந்தப் பெருமைமிக்க, ஆத்மஞானத்தை உணர முடியாததால்தான் மனிதன் வேறு வகையான அறிவைத்தேடிப் போகிறான். படைப்பில் காணப்படும் மாறுபாடுகள் எல்லாம், நம் பார்வையில்தான் இருக்கின்றன.

சிருஷ்டி முழுவதும் ஒரு நாடக அரங்கம். இதில் நடிப்பதும் இயக்குவதும் இறைவனே! எல்லா உருவங்களையும், வேடம் தாங்கி நடிப்பது அவரே! நீங்கள் காணும் உருவங்கள் எல்லாம் இறைவனின் வெவ்வேறு உருவங்களே எனப்புரிந்துகொள்ளுங்கள்! உங்களை யாராவது தூஷித்தாலோ அன்றி பாராட்டினாலோ, கடவுளே அதைச் செய்கிறார் என்று உணருங்கள்! இந்த உலகில் நடக்கும் நல்ல, தீய செயல்கள் அனைத்தும் அவரால்தான் ஏற்படுகின்றன. இந்த உண்மையை உணர்ந்துகொள்ள இயலாததால், மனிதன், தன்னை யாரோ தூற்றுகிறார்கள் என்று கோபப்படுகிறான், இல்லையென்றால் போற்றுகிறார்கள், என ஆனந்தப்படுகிறான்! இல்லை! இல்லை! இந்த வேஷங்களை எல்லாம் பார்த்து நீங்கள் மோசம் போகக்கூடாது! எல்லா இயக்கமும் இறைவனின் செயற்பாடே! என்கிற உயர்ந்த சத்தியத்தை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆதாரம்: சனாதன சாரதி.

## சுய தொழில் கடன்

வலிகாமம் தெற்கு, மார்ச் 24

கந்தரோடை கிராமத்தில் சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக 40 பயனாளிகளுக்கு சுழற்சிமுறைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் நுண்கருத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் 40 பயனாளிகளுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மண்டபத்தில் வைத்து, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ். திருவாகரன், கந்தரோடை கிராம சேவையாளர் க.திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலையில் இக்கடன்கள் வழங்கப்பட்டன. ஏராளமான பயனாளிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ-152)

## மக்கள் சேவை சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கப் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

# பாராட்டு விழா

சிவத்திரு வை.குமாரசாமி ஐயா
அவர்களின் 60 ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு நடைபெறும் விழா

இடம்: ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், ஏழாலை
நாள்: 25.03.2005 வெள்ளி
நேரம்: 11.00 மணி

திரு.திருமதி குமாரசாமி ஐயா தம்பதிகள் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்கள்

அன்று காலை 10.00மணிக்கு பூஜை
நண்பகல் 11.00 பாராட்டுவிழா
நண்பகல்: 12.00மகேஸ்வர பூஜை

ஏழாலை தெற்கு
களவாவோடை அம்மன்
தேவஸ்தானம்.

(43458) (39-14-17-26) ஆலய நிர்வாகி

# திருமண சேவை

தற்போது எமது நடமாடும் சேவை, இடைநிறுத்தப்பட்டு நிரந்தரமாக புளியங்கூடல் அம்மன் கோவிலடியில் இயங்கி வருகின்றது. தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை அலுவலகம் திறந்திருக்கும். விசேடமாக மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சரவணை, நாரந்தனை, ஊர்காவற்றுறை, காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு உட்பட யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள திருமண பொருத்துநர்கள் எமக்கு தேவைப்படுகின்றனர். நியாயமான கமிசன் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **த.புலேந்திரன்** (ராதா கிருஷ்ணா)
ஓம் மகாமாரி திருமண முகவர் சேவை,
அம்மன் கோவிலடி, புளியங்கூடல் மத்தி, ஊர்காவற்றுறை.
(43415)(39-14-17-26)

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தைச் சேர்ந்த
**மாணிக்கம் சுப்பிரமணியம்** அவர்களின்
அன்புச் சகோதரன்

## மாணிக்கம் சிவபாததுரை

*(வர்த்தகர், கொழும்பு)*


அவர்களின் திடீர் மரணச் செய்தியைக் கேட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம். அவர் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மேற்கு
கிராம முன்னேற்றச் சங்கமும்
சனசமூக நிலையமும், நிர்வாகிகள்.

(34451) (39-14-17-26)

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 - 03 - 1940



உதிர்வு 17 - 03 - 1993

## அமரர் முத்துக்குமாரு மயில்வாகனம்

அன்புள்ளம் கொண்ட எம் அன்புத் தந்தையாரே!
உங்கள் சிரித்த முகமும் அன்பான பேச்சும்
ஈராண்டு மறைந்தாலும் மறக்க முடியாமல் தவிக்கின்றோம்.

5/5, அருளம்பலம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(43450)(35-14-17-26)

- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற சிறாப்பர், கொழும்பு போட் கொமிசன்)



ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் துலாவை, அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை கனகரத்தினம் 21-03-2005 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற உடையார் ஐயம்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற சிறாப்பர், யாழ்.கச்சேரி), காலஞ்சென்ற இராசம்பாள், ஞானாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் (ஓய்வுபெற்ற மலாயன் ரயில்வே ஊழியர்) மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் புவனேந்திரன் (ம.பெ.தோ.அ.சபை, பளை), பத்மினி (கனடா), குகேந்திரன் (சுவிஸ்), சாந்தினி (லண்டன்), சறோயினி (ஹொலண்ட்), ஞானேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கமலேஸ்வரி, இராஜலிங்கம் (கனடா), சீதா (சுவிஸ்), சத்தியவடிவேலு, (சத்தி எஸ்ரேட் புறப்பட்டிஸ், லண்டன்), கணேசலிங்கம் (ஹொலண்ட்), ஞானசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீவன், புஜீவன், சஜீவன், ரஜீந்தன், றிநோதன், சுஜிதா, அட்சஜா, விஸ்ணுகா, ஆராதனா, சாஜினி, சதன், சஜிதா, றினோதா, சுஜன், தமிழினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-03-2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக வண்ணார்பண்ணை கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு காலை 10.30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


தகவல்: பு.சஜீவன் (பேரன்).

(41683)(26-14-17)



உ
*சன்னாகம்பதி மணிகண்டனே சரணம்!*

# சுன்னாகம் - தாழையடி
# அருள்மிகு ஐயனார் ஆலயத்தில் இன்று ரதோற்சவம்



இந்த ஆலயத்தில் ஐந்து மலை அழகன் பார்த்தசாரதியின் மைந்தன், வில்லாளி வீரன், ஐயப்பன் பூரணை - புற்கலை சமேதரராய் மணிகண்டனாகத் தேரில் ஆரோகணித்து இன்று அருட்காட்சி நல்கி பவனி வருகின்றான்.

கோலாகலமாக அடியார்கள் பலரும் சூழ்ந்து வர நாதஸ்வர - தவில் மங்களவாத்தியங்கள் முழங்க, பக்தர்களின் "ஐயப்பா சரணம்" என்னும் சரண கோஷத்தின் மத்தியில் அருள்மழை பொழிய வலம்வரும் அழகுக் காட்சி காண ஓடோடி வாரீர்!

அடியார்கள் ஐயப்பன் அருள்பெற அன்புடன் அழைக்கின்றேன்.

ஆக்கம்: லயன் **கனகசபை சுந்தரலிங்கம்,**
சமாதான நீதிவான் (காரை.மணிகண்டன்).

(43445)(26-14-17)

# கலாசாரத்தைச் சீரழித்தவர்கள் பொதுமக்களிடம் சிக்கினர்

காரைநகர்,மார்ச்24

காரைநகர் கோவளப் பகுதியில் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளில ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் மூவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

இப்பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறைகளில் யுவதி ஒருவர் நடமாடியதை பொதுமக்கள் அவதானித்தனர். பின்னர் அந்த யுவதியும் மதுபோதையில் இருந்த இரு ஆண்களும் கைவிடப்பட்ட நிலையிலிருந்த ஒரு கட்டடத்தில் இருந்தபோது பொதுமக்களிடம் பிடிபட்டனர். பின் அவர்கள் கலாசாரம் பேணும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(ஒ-73)

# இன்பச்சோலை வீதி மக்கள் பாவனைக்கு

வட்டுக்கோட்டை, இன்பச்சோலை கிராமத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட இன்பச்சோலை வீதி மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக வெள்ள வாய்க்கால் பாதை ஊடாக இன்பச்சோலை கிராமத்திற்கு பொதுமக்கள் சென்று வந்தனர். தற்போது வலி.மேற்குப் பிரதேச சபையால் புதிதாக வீதி அமைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகத்தின் ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி மூலம் மக்கள் பங்களிப்புடனும் இந்த வீதி உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-161)

## இவரைக்காணவில்லை



மானிப்பாய், டச்சுறோட்டைச் சேர்ந்த

**செல்வன் மகாதேவன் விஜயகுமார்**

என்பவரை 13.03.2005 ஆம் திகதியிலிருந்து காணவில்லை.

இவர் கடைசியாக நீல ரீ சேட்டும் செக் சாரமும் அணிந்திருந்தார். இவரது தகப்பன் இவரைக் காணாமல் பெருங்கவலையில் ஆழ்ந்துள்ளார்.

எங்காவது இவரைக்கண்டால் கீழுள்ள முகவரிக்கு அறியத் தரவும். **சன்மானம் வழங்கப்படும்.**

*தொடர்பு:- ப.சாந்தகுமார்*
*சிலம்புப் புளியடி, சங்கானை.* -T.P.0602-213049

(43453)(35-16-18)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 664 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|---|---|
| திகதி | 22-3-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4365316 - 4381489 |

லக்கினம் சிங்கம்

வெற்றி இலக்கங்கள்

**04 16 18 53**

ஜக்பொட் பரிசு ரூபா.25,65,900/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,58,759 | 10/- | 35,87,590/- |
| 2.இலக்கங்கள் | 32,913 | 20/- | 6,58,260/- |
| 1.இல + லக்கினம் | 32,486 | 30/- | 9,74,580/- |
| 2.இல + லக்கினம் | 2,947 | 100/- | 2,94,700/- |
| 3.இலக்கங்கள் | 883 | 500/- | 4,41,500/- |
| 3.இல + லக்கினம் | 87 | 5,000/- | 4,35,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 25,65,900/- | 25,65,900/- |
| மொத்தம் | 4,28,085 | - | 1,04,09,780/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,04,09,780/-

தொடர் இல. 5330788 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**4381016-1-10**
**4378850-9-11**
**4375202-6-11**
**4365367-0-82**
**4376649-7-59**

## மானிப்பாய் றோட்டறக்ட் கழகம்

CELEBRATE ROTARY

## பிற்போடப்பட்டுள்ளது

**மேற்படி எமது கழகத்தால் நாளை (25.03.2005) வெள்ளிக்கிழமை நடத்த இருந்த இசைநிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் பெரியவெள்ளி என்பதனால் அநேக நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்நிகழ்வானது 14.04.2005 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.**

நிகழ்வு
ஒருங்கிணைப்பாளர்கள்.

(சி-41691)(29-16-18)

# காரைக்கால் வீதி இருளில்

கோண்டாவில்,மார்ச்24

கோண்டாவில் - காரைக்கால் வீதியில் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை. இதனால் இரவு வேளைகளில் அவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தோட்ட வெளிகளுக்கூடாகச் செல்லும் இந்த வீதியில் இரவு வேளையை சாதகமாகப் பயன்படுத்தி இளைஞர் குழுக்கள் அட்டகாசம் புரிந்து வருகின்றன. அடிக்கடி இந்த வீதியில் கோஷ்டி மோதல்கள் இடம்பெறுவதால் தாம் அச்சத்துடன் காலம் கழிக்க நேரிட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

(ஒ-49)

# கிறிஸ்தவ பாதயாத்திரை

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்தமிழ் மிஷன் சபை நடத்தும் கிறிஸ்தவ பாதயாத்திரை நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையில் உள்ள தமிழ் மிஷன் சபைக்கு முன்பாக ஆரம்பமாகவுள்ளது.

இப்பாத யாத்திரை யாழ்.நகரின் முக்கிய வீதிகளூடாகச் சென்று மீண்டும் அரியாலை மாம்பழம் சந்தியில் முடிவடையும்.

இதில் கிறிஸ்தவ விசுவாசிகள், போதகர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (8)

# தமிழ் ராஜதந்திரப் பாரம்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. நிச்சயம் ஒருநாள் இந்த நாடு இரண்டாகப் பிளந்தே தீரும். அந்தப் பெருமையை ஜே.வி.பி.யும் எஸ்.எல்.எவ்.பி.யும் தங்கள் கையில எடுத்துக்கொள்ளும்.

நிலைமாறிய குணாம்சங்களையே முற்றிலும் கொண்டிருக்கின்ற ஜே.வி.பி.எவ்வளவுதான் மார்க்சிஷம், சித்தாந்தம் பற்றிப் பேசினாலும் ஜே.வி.பியிடமும் எஸ்.எல்.எப.பியிடமும் பிரபாகரனின் குணாம்சம் நிலமானியம்தான். ஐ.தே.க.வின். பிரதானமான குணாம்சம் முதலாளித்துவம் தான்

எனவே ஒரு பக்கம் நிலமானியத் தன்மைக்குள் இலங்கையைச் சீரழிக்கின்ற ஜே.வி.பியும் எஸ்.எல்.எப்.பியும் மறுபக்கம் முதலாளித்துவத்திறகுள் இலங்கையைச் சீரழிக்கின்ற யு.என்.பி. இதற்குள் நாங்கள் புரட்சிகரமானவர்கள்.

இந்தப் புரட்சிகர குணாம்சத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். இந்தப் புரட்சிக்கூடாக எங்கள சமுதாயத்தில் காணப்படுகின்ற அனைத்தையும் நாங்கள் மாற்றியமைக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், இந்தப் புரட்சிகரக் குணாம்சம் என்பது வெறும் கற்பனையில் நிகழ முடியாது.

கொள்ளைக்காரன் தெருவிலிருந்து கத்திகளுடன் எம்மை மறித்துக் கொள்ளையிடும் போது அவனிடம் அடிப்பட்டு உயிரையும் உடைமைகளையும் இழப்பதை விடவும் உடைமையைக் கொடுத்து எங்களைத் தற்காத்துக் கொள்வது மேலானது. இது லெனினின் தந்திரம்.

எங்களுக்கும் அந்தப் பிரச்சினை உண்டு. கண்மூடித்தனமாக நாங்கள் இதற்கு விளக்கமளிக்க முடியாது. அன்ரன் பாலசிங்கத்தின் நிலைப்பாடு இதில் தெளிவாக இருக்கின்றது.

பிரபாகரனும் அன்ரன் பாலசிங்கமும் சேர்ந்து இந்தக் காலகட்டத்தில் இந்த விட்டுக்கொடுப்புக்களைச் செய்வது அரசியலில் தவிர்க்க முடியாத யதார்த்தம் - இந்த யதார்த்தத்தை அதேவழியில் எதிர்கொள்ளத் தவறினால் அமெரிக்காவும் இந்தியாவும் சேர்ந்த இந்த சமரச உலகத்துக்குள் நாம் நசிய வேண்டி நேரும்.

ஆயினும், எங்கள் போராட்டம் நசியப் போவதில்லை; இவற்றுக்குள்ளால் நெளிந்து எழுந்தே தீரும்.

இவற்றையெல்லாம் விளங்குவதற்கு இந் நூலைப் படியுங்கள். பெருமளவிற்கு இந்நூலில் ஆங்கிலம் இலகுவாகவே இருக்கின்றது. கடினமான இராஜதந்திர வார்த்தைகளே இல்லை. பாலசிங்கத்தின் புத்தகத்தைப் படிப்பதற்கு ஒரு 'டிக்சனறி'யும் தேவையில்லை. இலகுவான சொற்பதம்.

ஆனால், தன்னுடைய உணர்வோடும் உண்மைத் தன்மையோடும் அந்த நூலை எழுதியிருக்கின்றார்.

இந்த நூலுக்கு நான் மதிப்புரை செய்வதென்பது பாலசிங்கத்தின் ராஜதந்திர வரலாறுக்கு மதிப்புரை செய்வதென்பதுதான். எங்கள் வரலாற்றின் முதலாவது நபர்.

எல்லாத் தொடக்கத்துக்கும் குறைபாடு இருக்கவே செய்யும். எதை நீ ஆரம்பிக்கின்றாயோ அந்த ஆரம்பம் தன் இயல்பில் தனக்கென்றே குறைபாடுகளுடனேயே இருக்கும்.

பாலசிங்கமும் அதற்கேயுரிய தொடக்க கர்த்தா என்ற வகையில் அதற்குரிய குறைபாடுகளும் பாலசிங்கத்திடம் இருக்கின்றன. ஆனால், அவர் முதலாவது நபர் என்ற வகையில் எல்லாவற்றையும் கடந்து மேலே நிற்கின்றார்.

லெனின் ஓர் இடத்தில் சொன்னார் "சோசலீஷம் எங்களுக்குப் புதிது முன்னுதாரணம் அற்றது ஒவ்வொரு கணமும் கற்க வேண்டியிருக்கின்றது. எனவே, அடிக்கடி மாற்றிக்கொள்வோம அது பின்வாங்கலல்ல" - என்றார்.

முன்னுதாரணம் அற்ற ஒன்றைச் செய்ய முற்படும் போது எங்களுக்குப் பலவீனம் இருக்கவே செய்யும்.

தமிழ் இராஜதந்தரத்திற்கு முன்னுதாரண்ம் இல்லை. எனவே, இப்பொழுது முன்னுதாரணம் அன்ரன் பாலசிங்கம் தான். நாங்கள் மேன்மையானவற்றை எடுத்துக்கொள்வோம்.

திட்டவட்டமாக சொல்வதென்றால் 500 ஆண்டுகளுக்குமேல் அறுந்து போயுள்ள தமிழ் இராஜதந்திரப் பாரம்பரியத்தின் புதுநபர், தொடக்க கர்த்தா அன்ரன் பாலசிங்கம்தான். (ஐ-202-203)★

# பணிவின் பெருமை

இந்நாள் திருச்சபை வரலாற்றிலும் கிறிஸ்தவர்கள் வாழ்க்கையிலும் மிகமிக முக்கியமான நாள். மனித வாழ்வோட்டத்தின் அத்திபாரமாக பல அம்சங்கள் இயேசுவால் கற்பிக்கப்படுகிறது. கடைப்பிடிக்க எமக்கு அழைப்பும் விடுக்கிறார். இன்றைய வழிபாடு இதனை நன்கு விளக்குகின்றது.

இன்று எம் சமூகத்தில் நாம் காண்பது ஆணவம், நான் என்ற இறுமாப்பு, மன்னிப்பற்ற தன்மை, பழிக்குப் பழிவாங்கும் துடிப்பு, பெரியவன் என்ற பெருமை கணவன் மனைவிக்கு இடையில்கூட யார் பெரியவர் என்ற போட்டி, யார் தீர்மானம் எடுப்பதென்ற விவாதம், பெரியவரும் பெற்றோரும் இன்றைய இளைய தலைமுறையினர் தம்மைக் கனம் பண்ணுவதில்லை என்ற முறைப்பாடு.

## தவக்காலச் சிந்தனை

இயேசுவோ - ஆண்டவராய் இருந்தும் மனிதர்கள் பாதம் கழுவத் தம்மை தாழ்த்தினார். திருவாய் இருந்தும் தம் பணியாளர்களின் பாதம் கழுவ தம்மைப் பணித்தார். தலைவராய் இருந்தும் தம் துணையாளர்களின் பாதம் கழுவ தம்மைக் கீழ்படுத்தினார்.

காட்டிக்கொடுப்பர், மறுதலிப்பவர், விலகி ஓடுபவர்கள் யாரெனத் தெரிந்தும் அவர்கள் பாதங்களை அன்பால் அரவணைத்துக் கழுவினார். ஞானஸ்தானத்தினால் சீடர்களான எம்மையும் இப்பிறரன்புப் பணியில எம்மைத் தாழ்த்தி பணிவுடனும் மன்னிக்கும் மனத்துடனும் செயற்பட அழைக்கின்றார்.

## பெரிய வியாழன்

மனிதர் எம்மீது கொண்டிருக்கும் அன்பின ஆர்வத்தினால் தந்தையின் சித்தத்திற்குப் பணிந்து தன்னை அர்ப்பணிக்க ஆயத்தமானார். தன் அன்பின் உச்சக்கட்டமாக பணிவின் பெருமையாக தன்னையே நொறுக்கி தன் உடலை உணவாகவும், இரத்தத்தைப் பானமாகவும் வார்த்துத்தந்தார். இதில் நாம் தகுதியான உள்ளத்தோடு பங்குகொள்ளும் போது எம் வாழ்வு புனித மடைகின்றது, புதுமைகள் நிகழ்கின்றது. ஆனால், எம்மில் எத்தனைபேர் தகுதியான உள்ளத்தோடு உட்கொள்கின்றோம்? இதனை உட்கொண்ட பின்பு எந்தளவிற்கு எம் வாழ்வை புனிமாக்குகின்றோம் பணிவாய் வாழுகின்றோம்?

பணிவின் பெருமையை தம் வாழ்வால் காட்டியவர். இவற்றோடு நிறுத்தவில்லை, மாறாக குவலயத்தின் மீட்பிற்காய் குருத்துவத்தையும் ஏற்படுத்தினார். பணிவிடை பெறுவதல்ல பணிவிடை புரிவதே குருவின் பணி என்றார்.

இயேசுவின் வாழ்வை, அவர்காட்டிய வழிகளை பணிவு என்ற புண்ணியத்தின் ஒளியில் எம் வாழ்விலும் பிரதிபலிக்கச் செய்வோம். பணியினால் உருவாகும் சமூகம் புனிதமானது, மனிதமானது நிலைக்கக் கூடியது.

- **அருட்சகோ.ச.யேசுதாசன் O.M.I**

## பிற்போடப்பட்டுள்ளது

**யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகமும் கோண்டாவில் இளைஞர் முன்னேற்ற கழகமும் இணைந்து 25.03.2005 வெள்ளிக்கிழமை யா/வேம்படி மகளிர் பாடசாலையில் நடத்தப்படவிருந்த இன்னிசை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் கீழ்வரும் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.**

**காலம்: 23.05.2005 (திங்கள்) பி.ப.2 மணிக்கு**

**இடம்: யா/வேம்படி மகளிர் கல்லூரி**

*இம் மாற்றத்தால் ஏற்படும் தவறுக்கு வருந்துகிறோம்.*

**விழா ஏற்பாட்டுக் குழு.**

(43454)(35-16-18)

## யாழ்.மாவட்டத்தின் சிகை ஒப்பனையாளர் ஒன்றியத்தின் அறிவிப்பு

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனை நிலையங்கள் யாவும் வரும் ஈஸ்ரர் திருநாளை முன்னிட்டு **24.03.2005 வியாழக்கிழமையில் இருந்து 26.03.2005 சனிக்கிழமை** வரை இரவு நேரம் தளர்த்தப்பட்டுள்ளது என்பதை நிலைய அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்.மாவட்டசிகை ஒப்பனையாளர் ஒன்றியம்

(43456)(35-16-18)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 19.02.1976

விண்ணில் 17.03.2003



## சிவேஸ் சின்னப்பொடியன்

(மாணவி, தேசிய கல்வியியற்கல்லூரி- யாழ்ப்பாணம்)

அரிவையே ! ஆண்டிரண்டு முடிந்து போயும்
அலையோசையாய் உன்நினைவு மனதில் ஆர்ப்பரிக்க
அவனியில் உனைத்தேடும் ஈரவிழிகளில் - நீ
நிழலாய்த் தானே இன்னும் தெரிகிறாய்.
நீ கற்ற கலைகளை உலகிற்கு உரைக்குமுன்- உத்தமியே
உன்னைக் கொண்டு செல்ல விதியகம் சதிபோட்டது
உன்னைத் தொலைத்து இரண்டாண்டு நிறைவில்
உன் ஆத்மசாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்

சிறுப்பிட்டி கிழக்கு.
நீர்வேலி.

என்றும் நினைக்கும்
குடும்பத்தினர்.

(43435)(51-15-45)

# தமிழ்நாட்டு இஸ்லாமியப் போதகரை நாட்டைவிட்டு வெளியேறப் பணிப்பு

கொழும்பு, மார்ச்24

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்திருந்த சர்ச்சைக்குரிய இஸ்லாமிய மதப் போதகரான மௌலவி பி.ஜெயனுலாப்தீன் நேற்று நாட்டிலிருந்து வெளியேறப்பட்டுள்ளார்.

சென்னையில் இயங்கும் தௌஹீத் ஜமாத் பிரிவின் தலைவரான இவர் கடந்த வாரம் இலங்கைக்கு வந்தார். இலங்கையில் பல்வேறு இடங்களுக்கும் சென்று மதப்போதனைகளை மேற்கொண்டார். இவரது போதனை பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

அக்குறணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இஸ்லாமிய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட இவர் உரையாற்றியபோது அங்கும் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. பொலீஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் நிகழ்ச்சியையும் இடைநிறுத்தினர்.

நேற்றுமுன்தினம் மருதானை டவர் மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இவரது போதனை நிகழ்வும் இறுதிநேரத்தில் பொலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இவரின் போதனைகளால் இலங்கையிலுள்ள இஸ்லாமியர்களின் ஒரு பகுதியினருக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே அரசு அவரை நாட்டைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுத்தது.

மௌலவி ஜெய்னுலாப்தீனைத் தொடர்ந்தும் இலங்கையில் தங்குவதற்கு அனுமதித்தால இங்குள்ள இஸ்லாமியப் பிரிவினருக்கிடையில் மோதல் வெடிக்கும் என அச்சம் ஏற்பட்டது.

இதனால், அவரை உடனடியாக இலங்கையில் இருந்து வெளியேற்றத் தீர்மானித்தோம் என சட்டம், ஒழுங்கு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

(எ-க)

# சிறைகளில் திடீர்ச் சோதனை 41 செல்லிடப் பேசிகள் சிக்கின

மூன்று சிறைச்சாலைகளில் ஒரேநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின்போது 41 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வெலிக்கடைச் சிறைச்சாலை, கொழும்பு விளக்கமறியற்சாலை, மஹர சிறைச்சாலை ஆகியவற்றில் ஒரே நேரத்தில் திடீர்ச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறைச்சாலைகளின் கழிவறைகளிலும் மறைத்தும் நிலத்தில் புதைத்தும் வைக்கப்பட்டிருந்த 41 கையடக்கத் தொலைபேசிகளும் அதற்குரிய பற்றரிகளும் அவற்றின் சார்ஜர்களும் கைப்பற்றப்பட்டன. சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக்கின் பணிப்புரைக்கு அமைய நேற்றுமுன்தினம் மூன்று சிறைகளிலும் ஒரே நேரத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த மூன்று மாதங்களுக்குள் சிறைச்சாலைகளில் நடத்தப்பட்ட இத்தகைய சோதனைகளில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனச் சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக் கூறினார்.

சிறைச்சாலைக்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளையும் போதைப்பொருள்களையும் எடுத்துச்செல்ல சிறைக்காவலர்களே உதவுகின்றனர் என்பதும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

சிறைக்கு வெளியே இருக்கும் கைதிகளின் உறவினர்கள் அல்லது நண்பர்களைத் தொடர்புகொண்டு, ஒரு தொகைப்பணம் பெற்றுக்கொண்டு இந்தச் சட்டவிரோத செயல்களில் சிறைக்காவலர்கள் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

கைதிகளுக்குப் போதைப்பொருள்களை எடுத்துச்சென்ற இரண்டு சிறைக்காவலர்கள் சில மாதங்களுக்கு முன்னர் வெலிக்கடைச் சிறையில் கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறைக்காவலர்களே இத்தகைய சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுவருவதால் சிறைக்குள் குற்றச்செயல்களைத் தடுத்துநிறுத்த முடியாமல் இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் விசனம் தெரிவித்தார்.

(எ)

## வருடாந்த அபிஷேகம்

புங்கன்குளம், வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த அபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பூர்த்திநாளாகிய ஏப்ரல் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெறும்.

(எ-12)

## மெய்வன்மைப்போட்டி

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை தலைமையில் நடைறெவுள்ள இந்நிகழ்வில் முன்னாள் அதிபர் அ.நடராசா பிரதம விருந்தினராகவும் கௌரவவிருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் க.ஜெகநாதனும் சிறப்பு விருந்தினராக பிரபல வர்த்தகர் எஸ்.மருதலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-13)

## வினாடி - வினா இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.விஞ்ஞானச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் வினாடி - வினாப் போட்டியின் இறுதிப்போட்டி நாளைமறுதினம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட 8 பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளன. இதில் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் விரைவில் நடைபெறவுள்ள விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-12)


## நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்

பொலிகண்டி கிழக்கில் வசிக்கும் A/L,O/L படிக்கும் மாணவர்களுக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்களுக்குமாக மொத்தம் 49 துவிச்சக்கரவண்டிகளை இரட்சன்யசேனை நிறுவனத்திடமிருந்து பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் பெற்று நேரடியாக வழங்கியுள்ளனர். எனவே, இரட்சன்யசேனை கைதடி, தென்மராட்சி எனும் நிறுவனத்திற்கு பொலிகண்டி கிழக்கு வாழ் மக்களின் சார்பில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். எனவே, இத்துடன், சுனாமி அனர்த்தம் தொடங்கிய காலம்தொட்டு அனைத்து உதவிகளையும் எங்கள் பகுதிக்கு வழங்கி எம்மக்களின் கஷ்டத்தைப் போக்கிய அனைத்து நிறுவனங்களுக்கும் அனைத்து நாடுகளுக்கும் அனைத்து பொது அமைப்புகளுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் பொதுமக்கள் அனைவருக்கும் நன்றிகூறுவதோடு, மென்மேலும் தங்களாலான உதவிகளை எங்கள் பகுதிக்கு வழங்கவேண்டுமென அன்புக்கரம் நீட்டிக் கேட்டுக்கொள்கின்றோம்.

பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் மக்களும்.

(சி-41803)(29-18-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு (6B) சக மாணவன் செல்வன் ச.நிவேஜனின் தந்தையார்

### ச. சதானந்தனின்

மறைவையிட்டு துயரடையும் அதேவேளை, அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*மாணவ நண்பர்கள் (6B)*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.*

(சி-41696)(29-18-16)

## கண்ணீர் அஞ்சலி

பேதுரர்ப்பிள்ளை வெதுப்பகத்தில் பணி புரியும் (விநியோகம்) அன்ரன் றமேஸ் என்பவரின் கனிஷ்ட புதல்வி

### ஜெமி

அவர்களின் மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியடைந்த நாம், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மிரிமியர் பேக்கரி,
73,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பேக்கரி நிர்வாகமும் ஊழியரும்.

(43467)(29-18-16)



சங்கரத்தை பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி கோவில்

## ரதோற்சவ விஞ்ஞாபனம்

காலம்: 25.03.2005 வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரநன்நாள்

நிகழ்வின் நிரல்

| | |
|---|---|
| காலை 9.00 மணி | அபிஷேக ஆராதனை |
| 11.00 மணி | ஸ்தம்பபூசை |
| 12.00 மணி | இரா.செல்வவடிவேல் அவர்களின் பெரியபுராண விரிவுரை - நிறைவு நிகழ்வு |
| 12.30 மணி | வசந்த மண்டபப்பூசை |

*தொடர்ந்து மங்கள இசை முழங்க சுவாமி வீதி உலாவரல்*

*"அம்பிகையை சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்"*

- ஆலய பரிபாலகர்.

விளம்பர அனுசரணை

முருகன் பேக் கவுஸ்,ஸ்ரீ ஸ்ரோர்ஸ்,ஸ்ரீ போட்டோ

உதயன் பத்திரிகை முகவர்

துணவிச் சந்தி, வட்டுக்கோட்டை. (43435)(29-18-16)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சிம்பு (இருவேடம்), ஜோதிகா நடித்த

மன்மதன் (ரீலஸ்)

கா.நேரம்: 11.00, 2.45, 6.00. (பு.நே)

(C/41377)(29-16-17)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.

இன்று மட்டும் கா.நேரம். 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

The Passion of the Christ

26.03.2005 முதல்

விஜயகாந்த், சூசன், செந்தில் நடித்த

நெறஞ்ச மனசு

(C/41486)(22-11-45)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த

லண்டன் (ரீலஸ்)

இயக்கம்: சுந்தர் C

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)

(C/41381)(29-16-17)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

சிறப்புத் தோற்றத்தில் விஜய்,

சக்கரன் (ரீலஸ்)

தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே)

26 முதல் மாயாவி

(C/41380)(29-16-17)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்) மற்றும் பலர் நடித்த

மாயாவி (ரீலஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

26.03.2005 முதல் பார்த்தீபன்,காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த

(C/41378)(29-16-17)


## மரண அறிவித்தல்கள்

### ஜோன் சற்குணம்

காலஞ்சென்ற திரு.திருமதி J.S.வேலுப்பிள்ளை அவர்களின் மூத்த புதல்வன் ஜோன் சற்குணம் நேற்று (23.03.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் எலிசபெத் சற்குணதேவி, நைல்ஸ் நற்குணம், எஸ்தர் சகுந்தலாதேவி, வில்சன் ஞானகுணம், நெல்சன் நேசகுணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருட்திரு. கருணைராஜ், நொயலின் நகுலேஸ்வரி, ஜவோர்ஸ் ஸ்ரிபன், விமலாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2005) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டைவேலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நீல் நிஷாந்தன் கருணைராஜ்
0777 323405

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(43468)(29-18-16)

### முருகேசு கந்தப்பு

**(முன்னாள் இலங்கைத் துறைமுக அதிகாரசபை உதவி அத்தியட்சகர்)**

கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தப்பு 22.03.2005 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு (அப்பா டாக்குத்தர்) தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சுப்பர் கந்தவனம் (தலைமை ஆசிரியர்) அவர்களின் மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் சுதாகரன் (கனடா), சுமதி (ஆஸ்திரேலியா), சுரேஸ்குமார் (கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்),காலஞ்சென்ற சுகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மேனகா (கனடா), கரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் பிரகாஷ், தினேஸ், அருண் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (23.03.2005) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சுரேஷ்குமார் (மகன்),
குடும்பத்தினர்.

*சாமியன் அரசடி,*
*கரவெட்டி.*

(சி-41700)(29-18-16)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்

**(ஓய்வுபெற்ற நிலஅளவை உதவியாளர்)**

இடைக்குறிச்சி, வரணியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் அவர்கள் நேற்று (23.03.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேதநாயகியின் அன்புக் கணவரும் தெய்வேந்திரம்பிள்ளையின் (நிலஅளவை உதவியாளர்) பாசமிகு தந்தையும் இராசமலரின் அன்பு மாமனாரும் இந்திரகுமார், இந்திரஜித், இந்துமதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2005) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.தெய்வேந்திரம்பிள்ளை
(மகன்).

*இடைக்குறிச்சி,*
*வரணி.*

(43469)(29-18-16)

### வேலாயுதம் பரமநாதன் (நயினாதீவு)

**( முன்னாள் கணக்காளர் கனகசபாபதி அன்சன்ஸ் - யாழ்ப்பாணம், ஈஸ்வரபவான் கொம்பனி - யாழ்ப்பாணம்)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது தெஹிவளையில் வசித்தவருமான வேலாயுதம் பரமநாதன் நேற்று (23.03.2005) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் - வைரிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் வீரவாகு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் நவசக்தி (லண்டன்), ஸ்ரீசக்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகரன் (லண்டன்),Dr.வே.ரவிமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துசன்யா (லண்டன்), துஜீரன் (லண்டன்), சஞ்ஜீவ்,கிருத்திகா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் காலஞ்சென்ற முத்தம்மா, சபாரெத்தினம் மற்றும் செல்லம்மா, லோகாம்பிகை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சாந்தலிங்கம் மற்றும் சரவணமுத்து, கெங்காதேவி, சிவப்பிரகாசம், சண்முகநாதன் மற்றும் சரோஜினிதேவி, காலஞ்சென்ற தனலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), நித்தியகலா (சுவிஸ்) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/1, ரூபன் பீரிஸ் மாவத்தை,*
*ஆஸ்பத்திரி வீதி, களுபோவில,*
*தெஹிவளை.*

தகவல்:
ஸ்ரீ சக்தி - ரவிமோகன்
(மகள்).

(சி-41801)(29-18-16)



மறைந்த நடிகர் ஜெமினி கணேசனின் பூதவுடலுக்குத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, நடிகை கே.ஆர். விஜயா ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்திய போது .... (எ)

# தாயைச் சுமக்கும் மகன்: இப்படியும் தாய்ப்பாசம்!



இன்றைய இளைஞர், யுவதிகளில் அநேகர் பெற்றதாயைச் சுமையெனக் கருதுகின்றனர். ஆனால், தனது தாயின் நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு, தோளில் அவரைச் சுமந்தவாறு இந்திய மத்திய பிரதேசத்திலிருந்து இராமேஸ்வரம் நோக்கி சுமார் பத்தாயிரம் கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து நடந்து வருகிறார் இந்த இளைஞர். (எ-13)

## உயர் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அரச தரப்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டத்தரணி சஞ்ஜே ராஜரட்ணம் மனுதாரர்களின் காணிகளை உத்தியோகபூர்வமாக - சட்டரீதியாக - சுவிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர்களுக்கு யாழ். மாவட்டத்தின் பிற இடங்களில் மாற்றுக்காணிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனை மனுதாரர் தரப்புச் சட்டத்தரணிகள் ஆட்சேபித்தனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் 80 ஆயிரம் பேரின் நிலபுலன்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அவ்வளவு பேருக்கும் மாற்றுக் காணிகள் வழங்குவது என்பது இயலாதகாரியம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ். மாவட்ட செயலருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு. ஜீலை 7 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தது.

மனுதாரார் சார்பில் சட்டத்தரணிகள் கனக ஈஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையோடு ஆஜராகினர். (எ-க-13)

## பொதுக்கட்டமைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கடந்த மார்ச் 2ஆம் திகதி ரோய்ட்டருக்கு அளித்த பேட்டியில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க எச்சரிக்கை செய்திருந்தார் என்று சுட்டிக்காட்டி அதுகுறித்து அமைச்சர் கதிர்காமரின் கருத்தை பி.பி.ஸி. கோரியது.

அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு:-

ரோய்ட்டருக்கோ வேறு எவருக்கோ அவர்கள் (ஜே.வி.பியினர்) வேறு என்ன கூறியிருந்தாலும் அரசை விட்டுவெளியேறுவதில் தங்களுக்கு விருப்பமில்லை என்று ஜே.வி.பியினர் எனக்கு உறுதி அளித்துள்ளனர்.

அவர்கள் பேச்சுமூலமான தீர்வையே வேண்டுகின்றனர். புலிகளின் தீவிர நிபந்தனைகளையே அவர்கள் எதிர்க்கின்றனர்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது மிக முக்கியமான விடயம் என நான் உணர்கிறேன். பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது என்ற ஜனாதிபதியின் திடமான முடிவை - தீர்க்கமான தீர்மானத்தை - நான் முற்றும்முழுவதாக வரவேற்று ஆதரிக்கிறேன்.

பொதுக்கட்டமைப்புக் குறித்துப் புலிகளுடன் பேசி இணக்கத்துக்கு வருவதை யாராவது எதிர்ப்பார்களானால் அவர்கள் சுத்தக்கிறுக்கர்களாகவே (Lunatic) இருப்பார்கள் - என்றால் லஷ்மன் கதிர்காமர். (எ-க)

## மருத்துவபீட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாக மாணவர் குழுவிடம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உறுதியளித்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - பேராசிரியர் குணானந்தன் விவகாரம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனு ஒன்று இன்று கொழும்பில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

இந்த வழக்கு விசாரணையின் மூலம் தற்போது நிலவும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா என்பது பற்றியும் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தீர்வொன்றை இன்று அறிவிப்பாரா என்பது பற்றியும் அறிந்துகொள்வதற்கு மருத்துவபீட மாணவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

தமது பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காத பட்சத்தில் தமது போராட்டங்களைத் தீவிரப்படுத்தப் போவதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி க.சிவபாலன் உட்பட துணைவேந்தரால் தெரிவு செய்யப்பட்ட உபகுழுவினர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் மென்டிஸை சந்திப்பதற்காக நேற்று கொழும்பு புறப்பட்டனர். (ஐ-8)

## பொதுக்கட்டமைப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் வைத்துக் கையளித்திருக்கிறார்.

ஏற்கனவே, இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நோர்வே சமர்ப்பித்த யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்பதும் -

ஆனால், அரசோ அதற்கு இணக்கம் தெரிவிக்காமல் அதில் சில திருத்தங்களை செய்ய வேண்டுமெனக் கூறியிருந்ததும் - தெரிந்தவையே.

இதனையடுத்து. இந்த யோசனைகளில் மேலும் சில திருத்தங்களைச் செய்து நோர்வே புதிய யோசனையொன்றை நேற்றுமுன்தினம் சமாதானச் செயலகத்திடம் கையளித்தது.

இதுதொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த அரச சமாதானச் செயலகத்தின் பதில் பணிப்பாளர் ஜோன் குணரட்ன இந்த திருத்தங்களுடனான யோசனை அரச உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுவருவதாகக் கூறினார்.

இதேவேளை, இந்தப் புதிய யோசனைகள் தொடர்பில் "ஜனாதிபதி, சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் தனது ஆலோசகர்களுடன் கலந்துரையாடினார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

## 'பல்டி' அடித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து முஸ்லிம் காங்கிரஸ் மூவரையும் நீக்கியுள்ளது என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. ஏற்கனவே, இம்மூவரையும் கட்சியிலிருந்து வெளியேற்றி கட்சி எடுத்த நடவடிக்கை தவறானது என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியதை அடுத்தே இப்போது மீண்டும் புதிய நடவடிக்கை முறைகளின் கீழ் அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-க-13)

## காய்ச்சலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தப்பரிசோதனை மூலம் எச்.ஐ.வி. தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவரது மனைவியும் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிக்கிறார். இவருடன் சேர்த்து குடாநாட்டில் இதுவரை 18 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் 16 பேர் உயிரிழந்துவிட்டனர். (ஐ-15)

# தன்னம்பிக்கை இல்லாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதது.

புலிகள் தங்களுடைய இராணுவப் பலத்தை யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி மேம்படுத்தியுள்ளார்கள் என்பதுதான் தெற்கில் பெரும்பாலும் ஒருமித்த கருத்தாகும்.

ஆனால், புலிகள் இப்போ மிகவும் பலவீனமடைந்திருக்கிறார்கள் என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கும் உயர்மட்டப் பாதுகாப்புக் குழுவின் முடிவு பற்றிய நம்பக அறிக்கைகள் (எங்களுக்குக்) கிடைத்திருக்கின்றன. இது நிபுணத்துவக் கருத்து. அரசியல் உள்நோக்கம் கொண்ட வாய்ப்பேச்சல்ல.

புலிகள் யுத்த நிறுத்தத்தைச் சாதுரியமாகப் பயன்படுத்தி விமானப்படையை உருவாக்கியமை உட்பட தங்களுடைய இராணுவ வலிமையை அளவுக்கதிகமாக உயர்த்திவிட்டனர் என்ற கூற்றுக்கு எதிராக இந்தக் குழுவின் அவதானங்கள் அமைந்துள்ளன.

சரியாகக் கவனிப்போமானால் தெற்கில் பெரும்பான்மையானோரின் கருத்துக்கும், இந்தப் பாதுகாப்பு உயர் குழுவின் அவதானிப்புக்கும் இடையில் பெரிய முரண்பாடு இருப்பதாகக் கருதவேண்டியவராது.

கடந்த நான்கு வருட காலத்தில் புலிகளின் பலம் அதிகரித்ததை விட, இலங்கை இராணுவத்தின் முழுப்பலம் அதிகளவில் அதிகரித்திருக்குமாயின் புலிகள் பலவீன முற்றிக்கிறார்கள் என்பதே அதன் அர்த்தம்.

இனி இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவரின் மதிப்பீட்டின்படி உண்மைப்புள்ளி விவரங்களைப் பார்ப்போம்.

★ இலங்கை விமானப் படை, எம்.ஐ.24 தாக்குதல் ஹெலிக்கொப்டர்களின் ஏற்றுமதி ரகமான எம்.ஐ.35 இல் பத்து ஹெலிகளையும். பத்து போக்குவரத்து விமானங்களையும் கொள்வனவு செய்துள்ளது. இதனால், விமானப் படையின் தாக்குதல் ஹெலிகளின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

★ 2001 இல் 97 பீரங்கிகளாக இருந்த தனது வசதியை 2002இல் 187 ஆக உயர்த்தி இரட்டிப்பாக்கியிருக்கிறது இராணுவம்.

★ ஆள்களை ஏற்றிச்செல்லும் தனது கவச வாகனங்களை 158 இலிருந்து 204 ஆக இராணுவம் அதிகரித்துள்ளது.

★ தன்னிடமிருந்து 25 யுத்த டாங்கிகளுக்கு (அவற்றில் குறைந்தது 18 ஆவது செயற்படக்கூடிய நிலையில் இருந்தன) மேலதிகமாகப் புதிதாக 40 யுத்த முனை டாங்கிகளை 2001 பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகுவதற்குச் சற்று முன்னரான காலத்தில் இராணுவம் கொள்முதல் செய்தது.

★ 2002 வரை 10 ஆயிரம் துருப்புக்களைக் கொண்டிருந்த விமானப்படை இப்போது 19 ஆயிரத்து 300 விமானப்படையினருடன் தனது பலத்தை இரட்டிப்பாக்கியுள்ளது.

★ 2002 இல் இராணுவத்தினரின் உத்தியோக பூர்வப்பலம் திடீரென 95 ஆயிரத்திலிருந்து 118 ஆயிரம் துருப்புக்களாக உயர்ந்தது.

★ 2001 இல் 18 ஆயிரம் துருப்பினராக இருந்த கடற்படையினரின் பலம் 2003 இல் ஏறத்தாழ 20 ஆயிரத்து 600 ஆக அதிகரித்தது. இப்போது இலங்கைக் கடற்படை அமெரிக்கக் கரையோர ரோந்துக் கப்பலையும் பெற்றுள்ளது.

★ இலங்கைப் படைகளுடன் ஒப்பிடுகையில் அடிப்படையில் - முற்றும் முழுதாக - புலிகளின் பலம் புறக்கணிக்கத் தக்கதாகி விடுகின்றது.

★ முல்லைத்தீவில் கைப்பற்றிய 122 எம்.எம். ஹொவிட்ஸர் பீரங்கிகள் - இரண்டு. ஆனையிறவில் கைப்பற்றிய 152 எம்.எம். பீரங்கி - ஒன்று என்பன உட்பட ஆறு ஆட்லறிகளும், 120 எம்.எம். மோட்டார்களில் இரண்டு பட்டறிகளுமே புலிகளிடம் இருக்கின்றன என எல்லாக் கணக்குகளும் கூறுகின்றன.

ஆனால். இராணுவமோ 187 ஆட்லறிகளைக் கொண்டுள்ளது.

எனவே. தாக்குதல் வலுவில் (Fire Power) இலங்கை இராணுவத்துக்கு எந்த வகையிலும் நிகரற்றது புலிகள் அமைப்பு.

'பாஜ்கள்' மூலமோ, மிதக்கும் மேடைகள் மூலமோ நடுக்கடலிருந்து பீரங்கிகளைக் கொண்டுவந்து சேர்ப்பது இயலாத காரியம் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விடயம் தான். இராணுவம் கூட திருகோணமலை பிறிமா துறையில் உள்ள பாரிய பாரம்தூக்கிகள் மூலமே 130 எம்.எம். பீரங்கிகளை இறக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்திப் புலிகள் வன்னிக்கு ஆயுதங்களைக் கொண்டுவந்து குவிக்கின்றனர் என்று சளையாது குற்றச்சாட்டுவோர் தமது இராணுவ விமர்சனத்தில் உள்ள அறிவீனத்தினால் இந்த முக்கிய விடயத்தை மறந்து விடுகின்றனர்.

இலங்கை ஆயுதப் படையினரிடம் இருந்து பீரங்கிகள் மற்றும் கவசவாகனங்களைக் கைப்பற்றும் முன்னர் அவை எவையுமே புலிகளிடம் இருக்கவில்லை. ஒரு சிறிய பல்குழல் றொக்கட் லோஞ்சரும், அதிபார கலிபர் மோட்டார் ஒன்றுமே போர்க்களத்திற்கு வெளியில் இருந்து புலிகளால் சுவீகரிக்கப்பட்டவையாகும்.

வெளியில் இருந்து சிறியரக ஆயுதங்களை எவ்வளவு தொகையில் புலிகள் வன்னிக்குள் கொண்டுவந்தாலும் தற்போதைய மரபு வழிச் சமரின் இராணுவச் சமநிலையில் அது எந்த விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

அப்படி இருக்கையில்; செக் நாட்டுத் தயாரிப்பான இரண்டு. மூன்று சிறிய விமான ஊர்திகள் மரபு வழிப்போரில் மாற்றங்களைக் கொண்டுவரும் என்று கூறுவது யார்?

ஆகவே, தாக்குதல் வலுவிலும், வான், கடல் வலுவிலும் இலங்கை ஆயுதப் படைகள் முன்னரைவிட இப்போது வலுவாக உள்ளது.

விடுதலைப் புலிகள் தங்களுடைய இராணுவ வலிமையை அதிகரித்துள்ளார்கள் என்ற சந்தேகமும் பீதியும், உயர்வு நவிழ்ச்சியும், கூறப்பட்டாலும், இலங்கை ஆயுதப் படைகள் இலங்கையில் அதிமேன்மையான இராணுவச் சக்தியாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளன. இரண்டு பக்கத்தினரதும் இராணுவ உடைமைகளின் பௌதிக வளக் கணிப்பீடுகளைக் கவனமாக மதிப்பீடுசெய்தால், தீவின் தந்திரோபாய சமநிலை இலங்கை ஆய்யுதப் படைகளின் பக்கமே இருப்பது தெளிவு.

அரசுத் தரப்பில் வெற்றிகரமான படைப் பெருக்கமும், தளபாடச் சுவீகரிப்பும் அமைந்திருக்கப் புலிகளின் தரப்பில் கருணாவின் வெளியேற்றத்தோடு பயிற்சி பெற்ற மூவாயிரம்' உறுப்பினர்களின் இழப்பு ஏற்பட்டது. அத்தோடு, கடற்புலிகள் கரையோரமாக இருந்த தமது கடற்படை உடைமைகளைக் கணிசமான அளவில் இழந்துள்ளனர் என்று பாதுகாப்பு மற்றும் ராஜதந்திர வட்டாரங்கள் ஒரேயடியாக நம்புகின்றன.

கடந்த மூன்று வருடத்தில் ஏற்பட்ட குழப்பங்களில் இலங்கைப் படைகள் அத்தகைய அளவுக்கு இழப்புக்களைச் சந்திக்கவில்லை. அப்படியானால் புலிகள் இந்த யுத்த நிறுத்தகாலத்தில் தங்களைப் பலப்படுத்திக் கொண்டார்கள் என்று எப்படிக் கூறுவது?

இந்தத் தகவல்களின்படிநாங்கள் நோக்கினால், மூன்று வருடங்களுக்கு முன்னர் ரணிலோடு யுத்த நிறுத்தம் செய்த காலத்திலும் விட இப்போது புலிகள் உண்மையில் மிகப் பலவீனமாக உள்ளனர்.

இந்தப் பின்னணியில்தான் புலிகளின் எதிரான யுத்தத்தில் பாகிஸ்தான், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் இராணுவங்களை இணைப்பது குறித்தும் -

அமெரிக்க விமானப் படைகளின் கூட்டு நடவடிக்கை மூலம் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் இரணைமடு ஓடுபாதைக்கு எதிரான நடவடிக்கையை எடுப்பது பற்றியும் - பேசப்படுகிறது.

இப்படி இலங்கைப் படைகள் புலிகளைவிட குறிப்பிடத்தக்களவு அதிக வலுக்கொண்டிருக்குமாயின் வெளித்தலையீட்டின் பங்களிப்புப் பற்றியெல்லாம் பேசவேண்டிய தேவை ஏன் வருகிறது?

ஒரேயொரு விடயம்தான் அதற்குக் காரணம். ஓர் இராணுவம் யாருக்காகப் போராடுகின்றதோ அந்த மக்கள் மத்தியில், அந்த இராணுவத்தின் பலம் குறித்து - எதிரிக்கு எதிரான அதன் போராட்டத்தில் அதன் திறமை குறித்து - அந்த மக்களுக்கு உள்ள நம்பிக்கை தான் அந்த மூல விடயமாகும்.

ஜனாதிபதி குமாரதுங்கவினதும், சிங்கள தேசிய வாதத்தின் புத்திஜீவிக்குழுவினதும் செயற்பாடுகளும், அறிவித்தல்களும் அந்த சுய நம்பிக்கைதான். அத்தரப்பில் இல்லாத மூலப்பொருள் என்பதைக் காட்டுகின்றன. இலங்கை ஆயுதப் படைகளுக்கு இன்று இருக்கக்கூடிய இராணுவச் சாதக நிலையில் முக்கிய குறைபாடாக இருப்பது இதுதான் - இப்படி அவர் தெரிவித்துள்ளார். (எ-க)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை யோகேஸ்வரநாதன்

(செயலாளர், ப.நோ.கூ.சங்கம் - நீர்வேலி)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகேஸ்வரநாதன் அவர்கள் நேற்று (23.03.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சற்குணலீலாவின் அன்புக் கணவரும் கௌசி, கிரிஷாந், தர்சிகா, சுமித்தா, யசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*V.T.S. வீதி,*
*உரும்பிராய் தெற்கு.*

(43470)(29-16-18)

தகவல்:
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.